REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ThinakaranLk / ThinakaranLK
2024 ஜூலை 9 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன் 92
வரு. 92 இல. 162 | Tuesday 09, July, 2024 | 16பக்கங்கள் | 50/-




## அரச ஊழியர்களின் போராட்டம் அர்த்தமற்றது

# வற் வரியை அதிகரித்தாலேயே சம்பள உயர்வை வழங்க முடியும்

## பொது மக்கள் மீது சுமையை செலுத்த அரசுக்கு முடியாது –திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டுமாயின், தற்போதைய 18 வீத வற் வரியை 20 - 21 வீதமாக அதிகரிக்க நேரிடும் எனவும், அரசாங்கத்தால் அத்தகைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனவும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (08) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் இதனைக் குறிப்பிட்டார். 06



# ஜனாதிபதி பதவிக்காலம் ஐந்து வருடங்கள் மட்டுமே

## இடைக்கால தடை மனு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி

### பிரதம நீதியரசர் தலைமையிலான ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் நீதிமன்றம் தெளிவுபடுத்தும் வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதைத் தடுப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி, சட்டத்தரணி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம், நேற்று இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது. அந்த வகையில் ஒரு இலட்சம் ரூபா நீதிமன்றக் கட்டணத்திற்கு உட்பட்டு அந்த மனுவை நிராகரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. 06

### அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

# பிரபல வர்த்தகர் 'கிளப் வசந்த' உட்பட 2 பேர் ஸ்தலத்தில் பலி

## பாடகி சுஜீவா உட்பட நால்வர் படுகாயம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அத்துருகிரிய நகரில் மணிக்கூட்டு கோபுர பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், பிரபல வர்த்தகரான 'கிளப் வசந்த' என அழைக்கப்படும் 55 வயது சுரேந்திர வசந்த பெரேராவும் 38 வயதான நபர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துருகிரிய நகர மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் அழகுக் கலை நிலைய திறப்பு விழா ஒன்றின் போதே, 06

# அநீதியான வேலைநிறுத்தங்களால் கல்வி வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன

## 2030 இல், டிஜிட்டல் பொருளாதாரத்தை 30 பில்லியன் டொலராக அதிகரிப்பதே இலக்கு



தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியான வகையில் வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் மக்களின் நிம்மதியான வாழ்க்கை நிலையை சீர்குலைப்பதுதான் நோக்கமா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார். 06

# பொதுப் போக்குவரத்தில் இலத்திரனியல் பயணச்சீட்டு

## வருட இறுதிக்குள் அறிமுகமாக்க நடவடிக்கை

இந்த வருட இறுதிக்குள் ரயில்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணச்சீட்டுக்குப் பதிலாக இலத்திரனியல் முறைமை அறிமுகப்படுத்தப்படுமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க தெரிவித்தார்.

''இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்'' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (08) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க இதனைக் குறிப்பிட்டார். 06

# வேலைநிறுத்தங்களின் பின்னணியில் அரசியல்

## வண. கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவிப்பு

மக்களை அசௌகரியத்துக்குள்ளாக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களின் பின்னணியில், ஏதோ அரசியல் பின்னணி இருப்பதாகத் தோன்றுவதாகவும், இது தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார். அரசு ஊழியர்கள் வாழ்வதற்கு நியாயமான சம்பளம் கிடைக்க வேண்டும் என்பதில் எந்த வாதமும் இல்லை. என்றாலும், தொழில் ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன் நாட்டின் பொருளாதார நிலை மற்றும் பொது வாழ்க்கை குறித்தும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று (08) அஸ்கிரிய பீடத்தின் சங்கைக்குரிய கலாநிதி மெதகம தம்மானந்த தேரரை சந்தித்து நல்லாசி பெற்றுக் கொண்டார். இதன் போதே தேரர் இவ்வாறு குறிப்பிட்டார். 06

# பணிப்பகிஷ்கரிப்புக்கு மத்தியிலும் அரச அலுவலகங்கள் இயங்கின



**மத்துகம குறூப் நிருபர்**

அரச அலுவலர்கள் நேற்று (08) முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பால், பல நிறுவனங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ள வந்த மக்கள் திரும்பிச் சென்றனர். இருந்தபோதும், பல அரச அலுவலகங்கள் பணிப்பகிஷ்கரிப்பை பொருட்படுத்தாமல் இயங்கின.

மத்துகம பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமது வழமையான 06



## 03 முன்னாள் MP க்களின் ஒன்றிய தலைவராக கரு ஜயசூரிய தெரிவு

# உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வட்டியில்லா கடன்

## கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு

உயர்தரப் பரீட்சையில் (2022) சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் கற்கைகளை தொடர்வதற்கான செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கற்கைநெறிகளை தொடர்வதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. உயர்தரத்தில் சித்தியடைந்து அரச 06

# சகல பாடசாலைகளும் இன்று வழமைபோல இயங்கும்



நாடு முழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் இன்று (09) வழமை போன்று நடைபெறுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. சம்பள அதிகரிப்பு, சம்பள முரண்பாடு பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி ஆசிரியர்கள் இன்று (09) சுகவீன விடுமுறை போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர். இந்த நிலையிலேயே, கல்வி அமைச்சு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

# அரச துறை ஊழியர்களுக்கு ரூ. 25,000 அதிகரித்து வழங்கின் திறைசேரிக்கு ரூ. 400 மில். தேவைப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச துறையில் பணிபுரியும் 15 லட்சம் ஊழியர்களுக்கும் 25,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினால், திறைசேரிக்கு மேலும் 400 மில்லியன் ரூபா தேவைப்படும் என தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார 06

### 1,700 ரூபா சம்பள விவகாரம்:

# தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்தது இ.தொ.கா



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று (08) முதல் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக தொழிற்சங்க போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் அறிவித்துள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவித்த அவர் "சுமார் ஒரு இலட்சம் மக்கள் தோட்டத் தொழிலை நம்பியுள்ளனர். அவர்களை நம்பி 06

# வைத்தியசாலை விடுதியிலிருந்து டொக்டர் அர்ச்சுனா வெளியேறல்

யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, வைத்தியசாலை விடுதியிலிருந்து வெளியேறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகரை, சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் இரவு (07) ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் தொடர்ச்சியாக நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது. 06

# சிறுபான்மை இனத்தவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது வீணானது



சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் எந்தப் பயனும் ஏற்படாது என, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஏ.எல்.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஆறாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வேலையில்லா பட்டதாரிகளின் போராட்ட இடத்துக்கு (07) சென்று பட்டதாரிகளை அவர் சந்தித்தார். இதன்போது, அவரிடம், ஜனாதிபதித் தேர்தல் 06

### மன்னார், வங்காலை பகுதியில்

# 2,888 கிலோ பீடி இலைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது



சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 2,888 கிலோ பீடி இலைகளை மன்னார், வங்காலை பகுதியில் 06

# கிழக்கு ஆளுநர் செந்தில் மலேஷியாவுக்கு பயணம்



மலேஷிய பிரதி ஜனாதிபதி டட்டுக் ஸ்ரீசரவணனின் அழைப்பையேற்று கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான், நேற்று மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மலேசியா பாராளுமன்றத்துக்கு வருகை தருமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு மலேஷிய பிரதி ஜனாதிபதியும் மலேஷியாவின் தாபா பாராளுமன்ற உறுப்பினருமான முருகன் 06

# பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வு காண்பதற்காக சம்பந்தனும் நானும் இணைந்து பணியாற்றினோம்

## அமரர் சம்பந்தனின் இறுதிக் கிரியை நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



மறைந்த ஆர். சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திரமன்றி, ஒட்டுமொத்த இலங்கை மக்களின் உரிமைகளுக்காகவும் முன்னின்ற தலைவர் என்றும், சம்பந்தனும் தானும் எப்போதும் பிரிக்கப்படாத இலங்கைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆர். சம்பந்தனுடன் உடன்பாட்டுடன் முன்நோக்கிக் கொண்டு வந்த அந்தக் கலந்துரையாடல்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய அனைவரும் ஒன்றி



ணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

திருகோணமலையில் அமரர் சம்பந்தனின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் (07) பிற்பகல் நடைபெற்ற அன்னாரின் இறுதி கிரியையில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். ஆர். சம்பந்தனின் மரணம் தொடர்பில் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்த ஜனாதிபதி, அவரது மறைவு நீண்டகால நண்பரின் இழப்பு எனவும் குறிப்பிட்டார். ஆர். சம்பந்தன் எப்பொழுதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவை தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வனவளத் திணைக்களத்துடன் இருக்கும் பிரச்சினைகளை சட்டரீதியாக தீர்க்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த ஆர். சம்பந்தனின் பங்களிப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் ஒரு மாற்றுப் பிரதமர் என்று குறிப்பிட்டதுடன், ஆர். சம்பந்தன் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து, உண்மையான எதிர்க்கட்சித் தலைவரின் பண்புகளை வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல்கள் குறித்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதன் பின்னரே பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

ஆர். சம்பந்தனின் மறைவால் நீண்டகால நண்பரை இழந்துவிட்டேன். 50 ஆண்டுகளுக்கு முன்பு நான் புதிய சட்டத்தரணியாக செயற்பட்டபோதே, ஒரு சட்டத்தரணியாக நான் அவரை சந்தித்தேன். 1977 ஆம் ஆண்டு நானும் சம்பந்தனும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்திற்கு வந்தோம்.

அந்தப் பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் எமது கட்சியின் செயற்குழு உறுப்பினர் நவரத்தினம் ராஜாவை நான் ஆதரித்தேன். ஆனால் அந்த போட்டியில் ஆர். சம்பந்தன் வெற்றி பெற்றார்.



குறிப்பாக தனிநாடு உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையின்படி பாராளுமன்றம் இரு தரப்பாக பிரிந்தது. ஆர். சம்பந்தன் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் சிறப்பான உறவைக் கொண்டிருந்தார். இந்த நாட்டைப் பிரிக்க முடியாது என்பதால், சமஷ்டி ஆட்சி முறையில் அல்லது மாவட்ட சபை முறையை விட அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வந்தோம்.

எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. திருகோணமலையில் ஒரு காணியை நான் இளைஞர் சேவை மன்றத்திற்கு வழங்கிய போது பாராளுமன்றத்தில் கூட எமக்கிடையில் விவாதங்கள் இடம்பெற்றன. இதைக் கட்டுப்படுத்த அவர் எடுத்த முயற்சியும், நாங்கள் எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. அவர் 1983 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். மறுபடியும் அவர் பாராளுமன்றத்துக்கு வந்த பிறகு, நாங்கள் மீண்டும் தொடர்புகளைப் பேணினோம். 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் அவருடன் இணைந்து செயல்படும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒருபோதும் தனிநாடு கோரவில்லை. அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று எப்போதும் கூறினார். தமிழ் மக்கள் துன்பப்படுவதாகவும், அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். நாங்கள் தேர்தலில் இணைந்து பணியாற்றியுள்ளதுடன், பொது வேட்பாளர்களை ஆதரித்துள்ளோம். குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவுக்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். அதற்கு முன் சரத் பொன்சேகாவுக்காக செயற்பட்டோம். கடந்த கால நிகழ்வுகள் மற்றும் அரசியல் குறித்து அவரிடம் எப்போதும் நான் கதைப்பேன். 1948 இல் இந்த நாடு சுதந்திரம் பெறும் வாய்ப்பைப் பார்த்த ஒரே எம்.பி அவர். மேலும் அரசியல் பற்றியும் நாம் கதைப்போம். அதன் பிறகு அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதன்போது தனது சிறப்பான குணத்தை எடுத்துக் காட்டினார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப்

## தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன்

பேசியதோடு, அதற்காக பாடுபட்டார். அது மாத்திரமன்றி அனைத்து இலங்கையர்களின் பிரச்சினைகளையும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் முன்வைத்தார். அப்போது அவர் உண்மையான எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டார். 2018 ஆம் ஆண்டு அரசாங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி நேரம், நான் பிரதமர் பதவியை இழந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக அவர் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். வேறு காரணங்களால், எங்களது கலந்துரையாடல் வெற்றியடையவில்லை, குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பின்னர், அரசியல் தீர்வுகளை முன்வைப்பதற்கான பின்னணி எம்மிடம் இருக்கவில்லை. நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், இந்த விடயங்களை அவருடன் கலந்துரையாடினேன். மேலும் தமிழ்க் கட்சிகள் மற்றும் எம்.பிக்களுடன் கலந்துரையாடப்பட்டது. மிக முக்கியமான சில கருத்துகள் அங்கு பேசப்பட்டன. பிரிக்கப்படாத இலங்கையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம். இப்பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நான் முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. இதனால், கடந்த சில மாதங்களாக எங்களது கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த கலந்துரையாடல்களை இந்த பாராளுமன்ற வாரத்தில் மீண்டும் தொடங்க முடியுமா என்று நான் விசாரித்தேன். ஆனால் அந்த வாய்ப்பிற்கு முன்னரே சம்பந்தன் நம்மை விட்டு பிரிந்துவிட்டார். ஆனால் இந்த கலந்துரையாடல்களை நாம் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு சென்று நிறைவு செய்ய வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராகியுள்ளது.

சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம்கள் தமது கிராமங்களை சுவீகரிப்பது தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்தப் பிரச்சினைகளை சட்டத்தின் மூலம் தீர்க்க இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது என கலந்துரையாடி தீர்மானித்துள்ளோம். யார் நீதிமன்றத்



திற்கு சென்றாலும் இந்த வருடமே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அடுத்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களை பெற்றுக்கொள்ள இப்போது பாராளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றி பின்னர் கலந்துரையாடலாம். சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட தலைவர். சம்பந்தன் இலங்கை மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த தலைவர். நாம் இருவரும், பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். அதற்காக நாங்கள் இருவரும் உடன்பாட்டுடன் கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு சென்றதுடன் இப்பணியை நிறைவு செய்ய அனைவரும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கே. அண்ணாமலை மற்றும் வெளிநாட்டு தூதரகப் பிரதிநிதிகளும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டனர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதுர்தீன், எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், மாவை சேனாதிராஜா, எஸ். இராசமாணிக்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நளின் டி ஜயதிஸ்ஸ, அரசியல் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

---

# நாட்டுக்கு புதிய பொருளாதாரத்துடன், புதிய கல்வி முறையும் அறிமுகமாகும்

## தென்மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு நவீன வகுப்பறைகள் மற்றும் டெப் கணினிகள் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு





புதிய பொருளாதாரத்துடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்பட்ட கல்வி முறையும் அவசியமானது எனவும், அதற்கான கல்விச் சீர்திருத்தங்கள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி ஹால் டி கோல் ஹோட்டலில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற கல்வி நவீனமயமாக்கலின் புதிய அத்தியாயமாக தென்மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு 2,000 நவீன வகுப்பறைகள் மற்றும் 2,000 டெப் கணனிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். காதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரன இந்திய அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, தென்மாகாண சபைக்குக் கிடைத்த 3,000 இலட்சம் ரூபாய் (30 கோடி) நிதி ஒதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைகளில் 150 பாடசாலைகள் காலி மாவட்டத்திலும், ஏனைய 50 பாடசாலைகள் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. ஒரு வகுப்பறைக்கு 10 டெப் கணினிகள் என்ற வகையில் 200 வகுப்பறைகளுக்கு 2,000 டெப் கணினிகள் வழங்கப்பட்டன. இதன் அடையாள அம்சமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய உயர்ஸ்தானிகர் சந்தூஷ் ஜாவிற்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

"தற்போது உலகம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்கேற்ப, இந்நாட்டின் கல்வி முறையும் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் அமைச்சினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்று நாம் பல கல்விக் கொள்கைகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். அந்தக் கல்விக் கொள்கைகள் அன்றைய காலத்திற்கு ஏற்றதாக இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால், கல்வித்துறையில் புதிய சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. தற்போது பாடசாலைகளில், செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் கல்வியைத் தொடங்கி சில வருடங்கள் ஆகிறது. இந்த ஆண்டு நாம் ஆரம்பித்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிளை அரசாங்கம் ஏற்படுத்தும். மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவு பாடசாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறுவதில் அண்டை நாடான இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு ஐ.ஐ.டி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவுடன் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. மலேசியாவில் நான் எலான் மஸ்குடன் கலந்துரையாடினேன். அவரது நிறுவனத்தின் இணையத் தொழில்நுட்பம் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதன்



### நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல இந்தியா வழங்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது;– மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகளை செயற்கை நுண்ணறிவு பாடசாலைகளாக மேம்படுத்துவது அவசியம்

பின்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம்.

இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும் வாய்ப்பு கிடைக்கும். இன்று தென்மாகாணம் கல்வித்துறையில் அதீத திறமைகளை வெளிப்படுத்தும் மாகாணமாக மாறியுள்ளது. தென்மாகாணத்தின் முதலாவது டச்சு பாடசாலையான பத்தேகம கல்லூரி இன்று தேசிய பாடசாலையாக மாறியுள்ளது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்திற்கு ஏற்ற சந்ததியை உருவாக்கி ஒரு நாடாக உலகையே வெல்லும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது."

**கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த:**

"இலவசக் கல்விச் சட்டம் இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்படி, 46% ஆக இருந்த எழுத்தறிவு வீதம் 93% ஆக உயர்ந்துள்ளது. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், நவீன வகுப்பறைகள் என்பன அவசியமாகும். அதற்கு இந்தியா வழங்கி ஆதரவுக்கு நன்றி. இன்று தென்மாகாணத்திலுள்ள இருநூறு பாடசாலைகளில் நவீன வகுப்பறைகள் உள்ளன. 2,000 டெப் கணினிகள் சொந்தமாக உள்ளன. எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கலில் உள்வாங்கப்படும். அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப்பின் ஊடாக இணைக்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கிறோம். இதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவைப் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களில் 93% தொழில் சந்தையில் தொழில்வாய்ப்புக்கள் உள்ளன. நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உலகை வெல்லும் வாய்ப்பை நாம் பயன்படுத்த வேண்டும்."

**சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண:**

"இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு நன்றி. நாம் தற்போது இந்த நூற்றாண்டின் வலுவான காலகட்டத்தைக் கடந்து வருகிறோம். காலியில் பிறந்த கல்வி அமைச்சராக இருந்த சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா கொண்டு வந்த இலவசக் கல்விச் சட்டம், பாடசாலை மாணவர்களின் வருகையை 52% இலிருந்து 99% ஆக உயர்த்தியது. பாடசாலைகளின் எண்ணிக்கை 3,000 இலிருந்து 10,000 ஆக உயர்த்தியது. அதுவரை அரசாங்கத்துக்குச் சொந்தமாகவிருந்த ஒரேயொரு பல்கலைக்கழகத்துக்குப் பதிலாக 13 பல்கலைக்கழகங்கள் கட்டப்பட்டன. பல்கலைக்கழகங்களில் உள்வாங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 250 இல் இருந்து 45,000 ஆக அதிகரித்தது. கல்வியறிவு பெற்ற சமூகம் உருவாக்கப்பட்டதன் காரணமாக, உலகின் தொழில் புரட்சியின்போது பின்னால் இருந்த இலங்கை, உலகிற்கு இணையாக முன்னேற்றப் பயணத்தை ஆரம்பித்தது. அடுத்த நூற்றாண்டில் செயற்கை நுண்ணறிவு, கணினி நுண்ணறிவு, நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் மூலம் உலகிற்கு இணையாக முன்னேற வாய்ப்பு ஏற்படும். அதற்கான நவீன கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது கல்விச் சீர்திருத்தங்களை சரியான தொலைநோக்கு பார்வையுடன் முன்னெடுத்து வருகின்றார்".

**இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்துஷ் ஜா:**

"அண்டை நாடாக, இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வருகிறது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கை உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கைக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவுக்குத் தேவையான வசதிகளையும் உதவிகளையும் இந்தியா தொடர்ந்து வழங்கும்".

இந்நிகழ்வில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள மற்றும் தென்மாகாண கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 ஜூலை 9 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.37
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆனி 25
ராகுகாலம் : பகல் : 2.58 - 4.22வரை
சுபநேரம் : காலை : 10.22 - 11.50வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## நீர்த் தொட்டிக்குள் விழுந்து 03 வயது குழந்தை உயிரிழப்பு

வீட்டின் நீர் தொட்டிக்குள் விழுந்து மூன்று வயதுடைய குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக மீத்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மீத்தெனிய பகுதியை சேர்ந்த 03 வயதுடைய குழந்தையே, இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் தனது ஒன்பது வயது குழந்தையையும், மூன்று வயது குழந்தையையும் குளிப்பாட்டுவதற்காக வீட்டுக்கு வெளியே உள்ள நீர் தொட்டி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார் .

ஒன்பது வயது குழந்தையை நீராட்டிய பின், மூன்று வயது குழந்தையை நீர் தொட்டிக்கு அருகில் இருந்தி விட்டு தாய் வீட்டுக்குள் சென்றுள்ளார்.

வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது, குழந்தை நீர் தொட்டிக்குள் விழுந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் குழந்தை மீட்கப்பட்டு மீத்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற போதும் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தது.

# அபிவிருத்திக்கு பங்களிக்கும் நோக்குடன் இளைஞர் சங்கங்களை வலுவூட்டத் திட்டம்



நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர் சமூகத்தை மீண்டும் உற்சாகப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழ்மட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் வளர்ச்சிக்காக அணிதிரட்டுவதுதான் இதன் நோக்கம். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கோரிக்கைக்கு அமைய கம்பஹா மாவட்டத்தில் இருந்து இதனை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இந்த வேலைத் திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (05) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கம்பஹா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டின் மக்கள் தொகை தற்போது 21.41 மில்லியனாக உள்ளது. அந்த எண்ணிக்கையில் 23.08 சதவீதம் இளைஞர்கள் சமுதாயமாகும். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்காகும். இவர்களில், வேலையின்மையால் அவதிப்படும் இளைஞர்கள், பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டவர்கள், படிப்பை கைவிட்டவர்கள், உயர்கல்வி படிக்காதவர்கள், தேவையான நுழைவுத் தேர்வுகளுக்கான தகுதிகள் இல்லாதவர்கள் ஆகியோர் ஆண்டுதோறும் வேலையில் சேர்க்கப்படுகிறார்கள். அக்குழுவினரின் கோரிக்கைக்கு அமைய இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுவதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் ரசிக தெலபொல தெரிவித்தார்.


இதற்கு தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் தேசிய இளைஞர் சேவை மன்றம் வழங்குகிறது. கம்பஹா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் 121 கிராம சேவைப் பகுதிகளை மையப்படுத்தி இதன் முன்னோடி வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

ஒரு கிராம உத்தியோகபூர்வ பிரிவிலிருந்து 1529 வயதுக்குட்பட்ட 812 இளைஞர்கள், யுவதிகளைக் கொண்ட குழு முதல் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. பிரதேச செயலாளர்கள் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுடன் இணைந்து தேவையான இளைஞர்களை தெரிவு செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

06

தினகரன்
THINAKARAN

92
வருடங்களுக்கு முன்
தினகரன்
இன்று 09 ஜூலை 1932




### சவுக்கடிக்கு இங்கு இடமில்லை

திரு. ஜி.கே.டப்ளியு. பெரேராவின் கண்டன முழக்கம்

"மந்திரி சபை வேண்டாம்"

சுகாதார மந்திரியின் பசப்பு வார்த்தை

நேற்று மாலை 230 மணிக்கு அரசாங்க சபை கூடியபொழுது திரு. பெரேராவின் ஏழாவது பிரேரணை மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவதாக திரு. கொரியா (சிலாப அங்கத்தினர்) அவர்களும் திரு. எ. இ. குணசிங்கா அவர்களும் தாம் சில பிரேரணைகள் கொண்டு வரப் போவதாக முன்னறிக்கை செய்தார்கள்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## வாடகை வீட்டுக்கான நிதியை எனது சம்பளத்தில் அறவிடவும்

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கண்டியிலுள்ள உத்தியோக பூர்வ இல்லத்திற்கான வாடகையை தமது பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்திலிருந்து அறவிட விருப்பம் தெரிவித்து, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கடித மூலம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீடு ஆர்ப்பாட்டத்தின் போது தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது.இதன் பின்னர் அவர் தற்காலிகமாக வாடகை அடிப்படையில் அரசாங்கத்தின் கண்டி மலபார் வீதியிலுள்ள மத்திய மாகாண சபை முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை வாடகைக்குப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த வீட்டை பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்தில் நூற்றுக்கு 10 வீதம் அறவிடும் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர் அதனை பெற்றுள்ளார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராகவும் சுற்றாடல் அமைச்சராகவும் பதவி வகித்த காலத்தில், அமைச்சின் செயலாளர் மூலம் மேற்படி வாடகை நிதி மத்திய மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் அந்த நிதி வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டது. அந்த வகையில் மத்திய மாகாண சபை அந்த பணத்தைப் பெற்றுத் தருமாறு, பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

06

# முன்னாள் MP க்களின் ஒன்றிய தலைவராக கரு ஜயசூரிய தெரிவு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் முதலாவது கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

ஒன்றியத்தின் தலைவராக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அவரது பெயரை முன்மொழிந்ததுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமேதா ஜி. ஜயசேன அதனை வழிமொழிந்தார்.

ஒன்றியத்தின் அழைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பிரேமரத்ன சகல உறுப்பினர்களினதும் ஏகோபித்த முடிவில் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முகம்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இந்த சிக்கல்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு செயலாளர் நாயகத்தின் அலுவலகம் நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவு மற்றும் அனுபவங்களை நாட்டின் எதிர்கால மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்வதன் முக்கியத்துவம் தொடர்பில் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

நலன்புரி அலுவலர்கள் பற்றிய உப குழு, யாப்பு பற்றிய உப குழு, அரசியல் அலுவல்கள் பற்றிய உப குழு, பொருளாதாரம் மற்றும் சர்வதேச அலுவல்கள் பற்றிய உப குழு என உப குழுக்கள் நியமிக்கப்பட்டன.

06

## ANCL விற்பனை நிர்வாக அதிகாரி துஷ்யந்தனின் தாயார் காலமானார்

இறுதிக் கிரியை இன்று



லேக்ஹவுஸ் பிராந்திய விற்பனை நிர்வாக அதிகாரி அசோக்குமார் துஷ்யந்தனின் தயார் குமாரசுவாமி லோகேஸ்வரி கடந்த 07 ஆம் திகதி காலமானார்.

தனது 61 ஆவது வயதில் காலமான அன்னார், காலஞ்சென்ற அசோக்குமாரின் அன்பு மனைவியாவார்.

06

# நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு தனியான அடையாள எண் அறிமுகம்

அனுமதி பெற்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு தனியான அடையாள எண், முறையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அக்டோபர் முதலாம் திகதி முதல் வைப்பிட்டு கணக்குகளை ஆரம்பிக்கும் போது அல்லது பராமரிக்கும் போது, தனிப்பட்ட அடையாள எண்களைப் பதிவு செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே இவற்றிலுள்ள வைப்பீட்டாளர்களின் தனிப்பட்ட அடையாள எண்களைப் புதுப்பிக்க வேண்டும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

வங்கி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 2023 எண். 17 இன் கீழ், வைப்புத் தொகையாளர்களின் தனிப்பட்ட அடையாள எண்களைப் பதிவு செய்வதற்காக, வழங்கப்பட்டிருந்த முந்தைய வழிமுறைகளுக்குப் பதிலாகவே புதிய செயல்பாட்டு வழிமுறைகள் பின்பற்றப்படவுள்ளது.

தற்போதுள்ள வைப்பீட்டாளர்களின் தனிப்பட்ட அடையாள எண்களை புதுப்பிப்பதற்கான காலக்கெடு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களில் வைப்பு கணக்குகளை திறக்கும் போது அல்லது பராமரிக்கும் போது, வைப்பாளர்கள் தனிப்பட்ட அடையாள எண்களைப் பயன்படுத்துவது அவசியமாக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீலங்கன் விமானத்தில் கோளாறு: புறப்பட்டு இரண்டு மணி நேரத்தில் தரையிறக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தென்கொரியாவின் இன்வியோன் சர்வதேச விமான நிலையத்திற்கு செல்வதற்காக இலங்கையிலிருந்து பயணித்த ஸ்ரீலங்கன் விமானம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு பின்னர் மீண்டும் விமான நிலையத்தை வந்தடைந்ததாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.மேற்படி விமானம் நேற்று முன் தினம் இரவு 6.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டிருந்ததாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமே இந்நிலையை எதிர் கொண்டது. இதில் 144 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் 15 பேரும் பயணம் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமானம் புறப்பட்டு இலங்கை விமான எல்லையை கடந்து

06






தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

பகைவர், அயலார், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

# அரசுக்கு எதிரான சக்திகளின் சுயநல செயற்பாடுகள்!

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றும் இன்றும் அரசாங்க ஊழியர்கள் சுகவீன தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர். இத்தொழிற்சங்க நடவடிக்கையினால் அரசாங்க நிறுவனங்களின் வழமையான சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தார்கள்.

இவ்விதமான தொழிற்சங்க நடவடிக்கையின் ஊடாக அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாகவே எதிர்பார்க்கப்படுகிறது. அதுவே நடுநிலையாளர்களின் கருத்தாக உள்ளது.

நாடு ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. இந்தச் சூழலில் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும் போது நிச்சயம் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு தொழிற்சங்கங்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஏனெனில் கடந்த காலங்களில் தேர்தலுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட பல தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஊடாக இவ்விதமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான காலம் இதுவல்ல. ஏனெனில் கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாடு இன்னும் முழுமையாக வீழ்ச்சி பெறவில்லை. அந்தப் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் இன்னும் காணப்படவே செய்கின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலமைகளுக்கு அமைய தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு அமைய சம்பள உயர்வு வழங்கக் கூடிய நிலைமையில் நாடு இல்லை. அவ்வாறு சம்பள உயர்வு வழங்குவதாயின் வரிகளை மேலும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஏற்கனவெ சம்பந்தப்பட்ட தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் திரைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, இத்தொழிற்சங்க நடவடிக்கைக்கு அமைய சம்பள உயர்வு வழங்குவதாயின் தற்போதுள்ள 18 சதவீத வற்வரியை 20_21 சதவீதம் வரை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும். அது பொதுமக்களுக்கு பாதிப்பாகவும் சுமையாகவும் அமையும். அதனைச் செய்ய அரசாங்கம் தயாரில்லை' என்றுள்ளார்.

வரிகளை அதிகரித்து அரச ஊழியர்களுக்கு வழங்கும் போது சாதாரண மக்கள் மேலும் வரிச் சுமைக்கு முகம்கொடுப்பதைத் தவிர்க்க இயலாது. வரிகளை அதிகரித்து சம்பள உயர்வு வழங்கும் போது அரச ஊழியர்கள் கிடைக்கப்பெறும் சம்பள உயர்வு குறித்து அவர்களே திருப்தி அடையாத நிலை ஏற்படும். அதன் விளைவாக அவர்கள் இன்னும் சொற்ப காலத்தில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முயற்சி செய்வர்.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போதிலும் கூட அவ்வருடத்தின் பிற்பகுதியில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த கோரிக்கைக்கு அமைய சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அத்தோடு அரச ஊழியர்கள் உட்பட நாட்டின் அனைத்து பிரஜைகளும் நன்மைகள் பெறும் வகையில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டும், நிவாரணங்கள், சலுகைகள் வழங்கும் வேலைத்திட்டங்களும் அவ்வப்போது முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வேலைத்திட்டங்களின் ஊடாக அரச ஊழியர்களும் கூட நன்மை பெற்றுள்ளனர்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது. அந்த கொடுப்பனவு உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டு ஒரு வருட காலம் கூட செல்லவில்லை. அதற்கிடையில் மற்றொரு சம்பள உயர்வு கோரித்தான் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறு சம்பள உயர்வு வழங்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை பெற்ற நாடல்ல இலங்கை. ஏற்கனவே முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து நாடு இன்னும் முழுமையாக மீட்சி பெறவும் இல்லை. அபிவிருத்தி அடைந்த நாடு கூட இவ்வாறு அடிக்கடி சம்பள உயர்வை வழங்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் இத்தொழிற்சங்க நடவடிக்கை எவ்விதத்திலும் நியாயப்படுத்தக்கூடிய ஒன்றல்ல என்பதுதான் அனைத்து தரப்பினரதும் கருத்தாகும்.

மேலும் இத்தொழிற்சங்க நடவடிக்கைகளின் பின்னணியில் ஒரு சில அரச எதிரணி கட்சிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாகி அற்ப அரசியல் இலாபம் தேடிக்கொள்ளும் எதிர்பார்ப்பில்தான் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டியது அரச ஊழியர்களின் பொறுப்பாகும். இதைவிடுத்து அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அரச ஊழியர்கள் எவ்விதத்திலும் துணை போகலாகாது. அதுவே மக்களின் விருப்பமும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# உலகத் தமிழ் வர்த்தக சங்கம் (WTCC) ஏற்பாட்டில் சர்வதேச தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆய்வு மாநாடு

உலகத் தமிழ் வர்த்தக சங்கம் (WTCC) கடந்த ஜூன் 28, 29 ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கத்தில் 2 ஆவது சர்வதேச தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மாநாட்டை நடத்தியது. தமிழ்மொழியின் தகவல் தொழில்நுட்ப (IT) துறையில் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத் திசைகளை ஆராய்வதற்காக முன்னணி அகடமியன்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை இம்மாநாடு ஒருங்கிணைத்தது.

இம்மாநாடு, உலகத் தமிழ் வர்த்தக சங்கத் தலைவரான J. செல்வகுமார் வழங்கிய உபசரிப்பு உரையுடன் தொடங்கியது. அவர், தமிழ் கலாசாரத்தை தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் ஒருங்கிணைக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (SRMIST) மற்றும் ஐ.இ.டிசென்னை செயலாளர் டொக்டர் ஆர். ராஜ்குமார் தொழில்நுட்பத்தின் மாற்றத்தை முன்னிறுத்திய சிறப்புரையை வழங்கினார்.

மாநாட்டின் முக்கிய விருந்தினர்களாக டொக்டர் G. விஸ்வநாதன் (நிறுவனர் VIT பல்கலைக்கழகம்), டொக்டர். R. வேல்ராஜ் (துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்), சஞ்சய் குமார் (IPS, ADGPசைபர் குற்றப்பிரிவு, தமிழ்நாடு), மைக் முரளிதரன் (தலைமை இயக்குநர், பஹ்வான் சைபர்டெக்), க. சரவணகுமார் (கொன்சுல் ஜெனரல் – மலேசியா கொன்சுலேட் ஜெனரல்), செர்கி வி. ஆசாரோவ் (ரஷ்ய கூட்டாட்சி கோன்சுல் ஜெனரல்), டேவிட் எக்ல்ஸ்டன் (தென்னிந்திய துணை கொன்சுல் ஜெனரல்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிறைவுவிழாவில், பல்கலைக்கழகத்தின் துணைத்தலைவர் டொக்டர். ஜி.வி. செல்வம் முன்னிலையில் நடந்தது.





இந்த மாபெரும் விழாவில் பல முக்கிய தொழில்நுட்ப நிபுணர்கள் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

□ தொழில்நுட்பம் மனித குலத்திற்கு – AI உடன் சவால்கள் மற்றும் நன்மைகள்: இந்த அமர்வு, களத்திலும் சமூகத்திலும் உள்ள செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத்தை ஆராய்ந்தது.

□ LLM மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் பயன்பாடு: கிளவுட் கம்ப்யூட்டிங் மற்றும் மெஷின் லெர்னிங் மொடல்களின் எதிர்காலம் குறித்து நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

□ இன்றைய தலைமுறையின் தொழில்நுட்ப துறையில் பெண்கள் முன்னணி: தொழில்நுட்ப துறையில் பெண்களின் முக்கிய பங்களிப்புகளை சுட்டிக்காட்டியது.

□ சமூக ஊடகங்களில் பணம் சம்பாதிக்கும் முறை மற்றும் பாதுகாப்பு: VJ விக்னேஷ்காந்த் மற்றும் ஸ்ரீ ராம் ஆகியோர் பங்கேற்று, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதின் நன்மைகள் மற்றும் ஆபத்துகளை ஆராய்ந்தனர்.



இந்நிகழ்வு சர்வதேச தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் நவீனம், தொழில்நுட்ப முன்னேற்றத்தில் கூட்டாக பணியாற்றுவதன் முக்கியத்துவம் ஆகியவற்றின் உறுதியை வலியுறுத்தியது. நிகழ்ச்சி ஏற்பாட்டு குழுவான உலகத் தமிழ் வர்த்தக சங்கம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தது.

# தெல்லிப்பழை அம்பாள் ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிரான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்!

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலயமகளிர் இல்லத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சர்வதேச இந்து மத பீடச் செயலாளரும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார் .

அரச உயரதிகாரிகள் ஒரு சிலரும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ இந்து மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன், இச்செயற்பாடுகள் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் ஒரு மதத்தின் வளர்ச்சியை மழுங்கடிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது என கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



## ஜனாதிபதியிடம் பாபுசர்மா கோரிக்கை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலயமகளிர் இல்லத்திற்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

'பேச்சுச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாயினும், அதுவே பிறரது சுதந்திரத்திற்குப் பாதகம் தருவதாக இருந்தால் அதனை எவரும் ஏற்க மாட்டார்கள். மதநல்லிணக்கம் என்பது ஒரு நாட்டின் ஆரோக்கியமான சூழலுக்கும் முன்னேற்றகரமான எதிர்காலம் நோக்கிய பயணத்திற்கும் அவசியமானதொன்று. இச்செயற்பாட்டில் நாட்டின் அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் செயற்பாடுகள் காத்திரமிக்கவை. அத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்களின் பிழையான கருத்துகள் மற்றும் பக்கச்சார்பான செயற்பாடுகள் மதநல்லிணக்கத்திற்கும் மத சுதேசிகளுக்கும் பங்கம் விளைவிப்பதாக அமைந்துவிடும்.

மதரீதியாகப் பிறர் செய்கின்ற நல்ல காரியங்களுக்குச் சேறு பூசுவதும் அதற்கு ஊடகங்கள் துணைபோவதும் பிழையான கருத்துகள் தவறான விதத்தில் சமூகத்தில் பரப்பப்படுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தச் செய்யும்.

எமது தேசத்தில் சக மதங்களைக் கேலி செய்யும் போக்குகள் கண்டிக்கப்படாமல் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் நிலை கேட்பாரற்றதாகி விட்டது. இத்தகைய மதநிந்தனைப் பேச்சுக்களுக்கு எதிரான பாரபட்சம் அற்ற கடுமையான சட்டம் அமுலாக்கப்பட வேண்டும்.

மதரீதியாக, உண்மைத் தன்மையோடு நியாயபூர்வமாகச் செயற்படும் சமூக சேவையாளர்களுக்கும் அவர்கள் தம் சேவைகளுக்கும் ஊடகங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அபகீர்த்தியான செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மக்களின் இன மத உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் செயற்படும் ஊடகங்கள் தடை செய்யப்படவேண்டும்.

இத்தகைய நிலையில் நாம் எமது சைவ மக்கள் சார்பாக, இந்த நாட்டில் சைவசமய செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் கடந்த வாரம், யாழ்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலயமகளிர் இல்லத்திற்கு எதிராக அரச உயரதிகாரிகளும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தயவோடு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு குறித்த கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# சமூகசீர்கேடுகளிலிருந்து விலகியிருக்குமாறு அறிவூட்டி அக்கரைப்பற்றில் மாணவிகளுக்கான பயிற்சிப் பாசறை

அக்கரைப்பற்று தத்பீகுஷ் ஷரீஆ பெண்கள் அரபுக் கல்லூரி பழைய மாணவிகளின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 08 முதல் தரம் 13 வரையிலான மாணவிகளுக்கான 'வளரும் மாணவிகளுக்கான ஒரு நாள் பயிற்சிப் பாசறை' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளி வாயலில் தத்பீகுஷ் ஷரீஆ பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் எம்.ஐ.எம்.அன்ஸார் (தப்லீகி) தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை 08:30 மணி முதல் மாலை 05:30 மணிவரை நடைபெற்றது.

இப்பிரதேச இளைஞர்கள், யுவதிகளில் பலர் தங்களுடைய கலாசார பண்பாடுகளை மறந்து நவநாகரீக மோகத்தில் சிக்கி வழிதவறிப் போகின்ற நிலைமை உள்ளது. குறிப்பாக பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் இவ்வாறான நிலையில் இருந்து விடுபட்டு நற்பிரஜைகளாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒரு நாள் பயிற்சி பாசறையில் 650 இற்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.



அஜ்னபி மஹ்ரமி உறவு, சுவனத்து கல்வி, நாகரிகமான ஆடைக்கலாசாரம், புறக்கணிக்கப்படும் பெற்றோர் உரிமைகள், வுழு மற்றும் தொழுகை செயன்முறை விளக்கம், பருவ வயதை அடைந்தவர்களுக்கான சட்டங்கள் மற்றும் மாணவிகள் இச்சமூகத்தில் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகள் என்பன மௌலவியாக்களை கொண்டு விளக்கமளிக்கப்பட்டது.

வளவாளர்களாக உளவளத்துறை ஆலோசகர் அஷ்ஷேக் அப்துல் ஹமீட் (ஷரயி), பல் விசேட வைத்தியர் அயானா பாத்திமா மற்றும் அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் (தப்லீகி) ஆகியோர் கலந்து கொண்டு இம்மாணவிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர். பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவிகள் பலர் கையடக்கத் தொலைபேசியின் ஆதிக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர். தவறான தொடர்புகளை ஏற்படுத்தி சமூகசீர்கேடு ஏற்படுகின்றது. ஒவ்வொருவரும் தங்களது எதிர்கால வாழ்வை சிதைத்து கொள்கின்ற நடவடிக்கைகளிலிருந்து விலகி தங்களது பெற்றோருக்கு கட்டுப்பட்டு இஸ்லாமிய வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்று 'மாணவிகள் எதிர் நோக்கும் சவால்களும், அதற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் அஷ்ஷேக் அப்துல் ஹமீட் (ஷரயி) உரையாற்றும் போது தெரிவித்தார்.

**றிஸ்வான் சாலிஹூ...**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# சவூதியில் நீண்ட காலம் தொழில் புரியும் இலங்கைத் தொழிலாளர்கள் கௌரவிப்பு

சவூதி அரேபியாவில் நீண்ட காலம் தொழில் புரிந்து வரும் இலங்கை புலம்பெயர் பணியாளர்களை கௌரவிக்கும் பாரம்பரியமொன்றை சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

சவூதி அரேபியாவின் மிகப்பெரும் பன்னாட்டு பால் உற்பத்தி நிறுவனமான அல்மராய் கம்பெனியில் முப்பது வருடங்களுக்கு மேலாக நிதி நிருவாகத்தில் பணிபுரிந்த சேனாதீரவை கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு றியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத், புலம்பெயர்ந்து வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளைப் பேணுவதில் பங்குதாரர்களாக இருக்கின்ற அதேவேளை, தங்களின் புலமை மூலம் அவர்கள் தொழில்புரிகின்ற நாட்டின் அபிவிருத்திக்கும் தங்களது சம்பாத்தியத்தின் மூலம் தாய்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்குகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.



## சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவரால் அங்குரார்ப்பணம்

பல்லாயிரக்கணக்கான இலங்கையருக்கு தொழில் வழங்கியுள்ள அல்மராய் நிறுவனத்துக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட தூதுவர் அமீர்அஜ்வத், இலங்கையின் மனிதவளத்தில் அந்நிறுவனம் வைத்துள்ள நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்துக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் தூதரகத்தின் உயர் அதிகாரிகளும் அல்மராய் நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**(இலங்கைத் தூதரகம்)**
றியாத்

# மருதமடு அன்னைக்கு மணிமுடி சூடிய நூறாவது ஆண்டு நிறைவு விழா

## இலங்கை இந்திய ஆயர்களின் பங்கேற்பில் மாபெரும் கொண்டாட்டம்

மருதமடு திருப்பதியில் மடு மாதா முடி சூட்டு விழாவின் நூற்றாண்டு பெருவிழா இம்மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் மடுத்திருத்தலத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கத்தோலிக்க ஆயர் பேரவையில் அங்கம் வகிக்கும் அனைத்து ஆயர்கள், ஓய்வு நிலை ஆயர்கள் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த ஆயர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் உட்படபல்லாயிரக்கணக்கான விசுவாசிகளின் பங்கேற்புடன் இந்த விழா நடைபெற்றது.

1924 ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் அவர்களின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியினால் மடுமாதாவின் திருச்சொரூபத்திற்கு முடிசூட்டும் மாபெரும் நிகழ்வு நடைபெற்றது.

அன்றைய தினம் முதல் மரத்தால் அமைக்கப்பட்டிருந்த திருப்பீடமானது நீலம், மற்றும் வெள்ளை பளிங்கு கற்களால் மாற்றியமைக்கப்பட்டது.

அக்காலகட்டத்தில் திருத்தந்தை பதினோராம் பத்திநாதரின் இலங்கைக்கான பிரதிநிதியாக கொழும்பு உயர்மறை மாவட்ட பேராயராக பேரருட்திரு குரே ஆண்டகை நியமிக்கப்பட்டார்.

1924 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி ஒரு மாலை வேளையில் குருக்கள், அருட் சகோதரிகள், விசுவாசிகள் திரளாக அணிதிரண்டு பேராயரை வரவேற்றனர்.

அதனையடுத்து அதன் மறுநாள் இரண்டாம் திகதி மருதமடு அன்னையின் முடிசூட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து விசுவாசிகள் அந்த விழாவில் பங்கேற்றனர்.

இரத்தினக் கற்கள் பொறிக்கப்பட்ட இரண்டு முடிகள் பலிபீடத்தில் வைக்கப்பட்டு பேராயரினால் ஆசீர்வதிக்கப்பட்டு அன்று யாழ் மறைமாவட்ட ஆயராக இருந்த பேரருட்திரு கியோமர் ஆண்ட கையினால் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு



இந்த முடி சூட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது.

விழாவில் பங்கேற்றிருந்த தமிழ் நாட்டின் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ரோச் ஆண்டகையினால் அதன் போது சிறப்பான மறையுரையொன்றும் நிகழ்த்தப்பட்டது.

அந்த திருப்பலியின் நிறைவில் விசுவாசிகள் புடைசூழ மிகவும் பயபக்தியுடன் மடுமாதாவிற்கு முடிசூட்டப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இன, மத,பிரதேச பேதமின்றி பங்கு பற்றிய சுமார் ஒன்றரை இலட்சம் மக்களின் வாழ்த்தொலி முழங்க இந்த முடி சூட்டு வைபவம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு 25 வருடங்கள் கடந்த பின்பும் மடுமாதா திருச்சொரூபம் ஒவ்வொரு பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்படும் வழக்கம் ஆரம்பமானது. இன்றும் அது நடைமுறையில் உள்ளது.

அவ்வாறு அன்னைக்கு மருதமடு மாதாவுக்கு முடி சூட்டிய 25வது ஆண்டு வெள்ளி விழா 1949 ஆம் ஆண்டு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

அதனைத் தொடர்ந்து 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி மருதமடு அன்னையின் திருச்சொரூபத்திற்கு முடிசூட்டப்பட்ட ஐம்பதாவது ஆண்டு பொன்விழா அன்றைய கொழும்பு உயர்மறை மாவட்ட பேராயர் கர்தினால் தோமஸ் குரே ஆண்டகையின் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 75ஆவது பவளவிழா 1999 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த போதும் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படவில்லை. எனினும் 2000 ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் திருச்சொரூபம் நாட்டின் அமைதிக்காக மன்னார் மாவட்டத்தில் அனைத்து பங்குகளுக்கும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது.மறை மாவட்ட



படங்கள் : எஸ்.ஆர் லெம்பேட்

ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன் யுத்த சூழலில் நாட்டிற்கு அமைதி வேண்டி தெற்கின் பல்வேறு மறை மாவட்டங்களுக்கும் திருச்சொரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யுத்தம் நிறைவடைந்து நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்ற வேண்டுதலோடு ஆயரினால் மடுத்திருத்தல பேராலயத்தின் உள் பீடத்தில் 2003 ஆம் ஆண்டு ‘விசுவாச தீபம்’ ஏற்றி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

அந்த வகையில் மருதமடுமாதாவுக்கு முடிசூட்டிய நூறாவது ஆண்டு விழா பெரும் ஆயத்தங்களுடன் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மருதமடு அன்னையின் திருச்சொரூபம் மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளுக்கும் அத்துடன் யாழ் மறை மாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் தரிசனம் வழங்கப்பட்டது.

ஜூலை இரண்டாம் திகதி சிறப்பு மலர் ஒன்றும் ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்பட்டு நூற்றாண்டு விழா திருப்பலி காலை 8.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த சிறப்பு திருப்பலி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இலங்கையின் அனைத்து கத்தோலிக்க ஆயர்கள், இந்திய ஆயர்கள் குருக்கள் இணைந்து மாபெரும் சிறப்பு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் இந்த திருவிழாவில் கலந்து மடுமாதாவின் ஆசீரைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**எல். செல்வா**

# உத்தரியத்தின் மகிமை கூறும் புனித கார்மேல் மாதா

கத்தோலிக்கத் திருச்சபையானது ஜூலை மாதத்தில் புனித கார்மேல் மாதா திருவிழாவை சிறப்பிக்கின்றது. கார்மேல் மாதாவின் விசுவாச அரணாக புனித உத்தரியம் நமக்கு வழங்கப்படுகின்றது. அதன் மூலமான அற்புதங்கள் அதிகம்.



பரிசுத்த பூமியாம் பலஸ்தீன நாட்டின் மேற்குத் திசையில் மத்தியதரைக் கடலுக்கு அருகாமையில் உள்ள உயர்ந்த மலையே கார்மேல் மலை . கடற்கரையோரத்தில் இருக்கும் இம்மலையைப் பற்றி விவிலியத்தில் அருமையான வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. அதன் அழகிய சிகரம் எபிரேய மொழியில் ” தோட்டம்” அல்லது ”நடப்பட்ட திராட்சைத் தோட்டம்” என்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றது. இந்த மலையில் எலியாஸ் இறைவாக்கினரும் அவருக்குபின் எலிசேயுஸ் என்பவரும் தங்கி செப,தபங்களால் பல அரிய வல்ல செயல்கள் செய்து வந்தனர். இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிட்ஜ் என்னும் கார்மேல் மாதா சபையைச் சார்ந்த ஒரு மடம் இருந்தது. இச்சபையின் தலைவர் புனித சைமன்ஸ்தாக் என்பவராவார்.

1251ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி தேவ அன்னையின் அடைக்கலத்தை நாடி பக்தியாகச் செபித்துக் கொணடிருந்தார். அச்சமயத்தில் அன்னை மரியாள் தமது கரத்தில் ஓர் உத்தரியத்தை ஏந்திவளாய் அவருக்குக் காட்சி தந்தார்.

அவரைப் பார்த்து “என் பிரிய மகனே, இதோ இந்த உத்தரியத்தை என் விருதாக, வெற்றிச்சின்னமாக ஏற்றுக் கொள். இதை அணிந்து கொண்டு மரிக்கின்றவன் நித்திய நரக ஆக்கினையின்று தப்பித்துக் கொள்வான். இது பாதுகாப்பின் சின்னமாகவும், அடையாளமாகவும் ஆபத்தான சமயத்தில் கேடயமாகவும் என்னுடைய உதவியின் ஆரம்பமாகவும் இருக்கிறது.” என்று சொன்னார்கள்.

1301 ஆண்டு உத்தரியமாதா 22ஆம் அருளப்பர் திருதந்தைக்குக் கனவில் தரிசனமாகி உத்தரியம் அணிந்த உத்தரியச் சபையார் மரித்து உத்தரிக்கிறஸ் தலத்திற்குப் போயிருந்தால் கூடிய விரைவில் நான் அவர்களை மீட்டுக் கொள்வேன். என்றார். மேலும் மரணத்திற்குப் பிறகு வரும் முதல் சனிக்கிழமைகளில் அவர்கள் அவ்விடத்திலிருந்து விடுதலையாவார்கள் என மொழிந்தார்கள்.

கார்மேல் மாதாவுடைய பேருதவியைக் கார்மேல் சபையினர் மட்டுமல்ல, அவரது உத்தரியத்தை அணியும் அனைவரும் பலன் அடைவார்கள். உத்தரியத்திற்குப் பதிலாக உத்தரியச் சுருபத்தை அணியலாம். இந்தப் பக்தியானது மோட்ச இராக்கினியின் ஞானபிள்ளைகளாக வாழ்வதற்கு உதவிபுரியும்.புனித கன்னிமரியாளைப் பின்பற்றி அவரைப் போல் பரிசுத்தமாய் வாழ்ந்து அவர்களுக்குச் சொந்தமானவர் என்று வெளிப்படையாக வாழ்ந்து காட்டுவது பெரும் பாக்கியமாகும்.

பரிசுத்த உத்தரியத்தை நாமும் அணிந்துத் தீயோனிடமிருந்து நம்மைக் காப்போம். எல்லா நேரங்களிலும் உத்தரியமாதா நம்மைக் காத்திடுவாள் என்பது திண்ணம்.

**எல். ஜேம்ஸ்**




# மயூரா பிளேஸ் புனித அந்தோனியார் திருவிழா



கொழும்பு மயூரா பிளேஸ் புனித அந்தோனியார் ஆலய திருவிழா கடந்த வாரம் மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை நிஹால் ஜவன் பெரேரா,உதவிப் பங்குத் தந்தை கிஹான் நிலுஷ பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் திருவிழா திருப்பலி மற்றும் புனிதரின் திருச் சொரூப பவனி நடைபெற்றது. திருவிழா நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.
படங்கள் உதவி: அசோக்குமார்

# "காணாமல் விசுவாசிப்போரே பேறுபெற்றோர்" புனித தோமையார் நினைவுத் திருவிழா

புனித தோமையார் கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய புனிதர்களில் ஒருவராவார். அவர் இந்தியாவின் புனிதர் என்றும் அழைக்கப்படுகின்றார். இயேசு தமது நற்செய்திப் பணிக்காக தேர்ந்தெடுத்த பன்னிரு திருத்தூதர்களில் இவரும் ஒருவர். உயிர்த்த ஆண்டவரைக் காண்பதற்கு அவர் போட்ட நிபந்தனை அவருக்கு ஒரு பட்டப் பெயர் சூட்டப்படக் காரணமாயிற்று. "ஐயப் பேர்வழி" என்றே இன்றுவரை உலகம் இவரை அழைக்கின்றது.

இயேசு கிறிஸ்து உயிர்த்துவிட்டார் என மற்ற திருத்தூதர்கள் சொன்னதை முதலில் நம்ப மறுத்ததால் இவர் “சந்தேக தோமா” என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். ஆனால் அவர், "நீரே என் ஆண்டவர். நீரே என் கடவுள்" (யோவான் 20:28) என்று விசுவாச அறிக்கை வெளியிட்டதுபோல வேறு யாரும் மனம் விட்டு அறிக்கையிடவில்லை. இவர் நமக்கு ஓர் உருக்கமான விசுவாசம் நிறைந்த செபத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.இச் செபத்தை நாம் பொருள் உணர்ந்து சொல்லும் போதெல்லாம் நமது பற்றுறுதி மெருகேற்றப்படுகிறது.

"காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்" என்று கூறிய உயிர்த்த ஆண்டவர் உலகம் முடியும்வரை தம்மில் விசுவாசம் கொள்வோர் பேறு பெற்றோர் என்று தெளிவுபடுத்துகிறார். நாம் இந்த விசுவாசக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது பெரும் பெருமை கொண்டதாகும்.

இந்தியாவில் இயேசுவின் நற்செய்தியை முதன்முதலில் அறிவித்தவர் இவரே என்று பழங்கால கிறிஸ்தவ மரபும் ஏடுகளும் சான்று பகர்கின்றன. கேரளாவில் வாழும் கிறிஸ்தவர்களும் இதற்கு சான்றாக உள்ளனர்.

இயேசுவின் திருத்தூதர்களுள் ஒருவரான இவரை நற்செய்தி நூல்கள் தோமா என்ற பெயருடனேயே அடையாளப்படுத்துகின்றன. 'தோமா' என்னும் “அரமேய” அல்லது “சிரியாக்” மொழிச் சொல்லுக்கு இரட்டையர் என்பது பொருள். இதற்கு இணையான திதைமுஸ் என்ற கிரேக்க மொழிச் சொல் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த பெயரின் அடிப்படையில் இவருடன் இரட்டையராகப் பிறந்த ஒரு சகோதரரோ, சகோதரியோ அழைக்கப்பட காரணம் எனவும் சில குறிப்புகள் கூறுகின்றன. ஆனால்,



திருத்தூதர் பிலிப்பு மூலம் இவர் இயேசுவுக்கு அறிமுகமானதாக சிலர் கூறுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் தோமா கி.பி 52ம் ஆண்டு இந்தியாவிற்கு பயணித்தார் முசிறித் துறைமுகத்துக்கு வந்தார் எனவும் நம்புகின்றனர். அப்போது அங்கு கொச்சி யூதர்கள் சமூகம் காணப்பட்டது.

பாரம்பரியமாக குறிப்பிடப்படும் தோமாவின் பணிகள் என்ற நூல், ரப்பான் பாட்டு என்ற வாய்மொழி பாடல் தொகுப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

'தோமாவின் பணிகள்' என்ற நூல் கி.பி. 2ம் நூற்றாண்டில் சிரியாக் மொழியில் எழுதப்பட்டது. அது இயேசுவின் உயிர்ப்புக்கு பிறகு, தோமா இந்தியாவுக்கு வந்து நற்செய்தி அறிவித்து உயிர்துறந்தது குறித்த வரலாற்று குறிப்புகளுடன் கூடிய கதையை வழங்குகிறது. இந்த நூல் இந்தியாவில் தோமா என்று பொதுவாக குறிப்பிட்டாலும், இரண்டு பகுதிகளில் அவர் பணி செய்த விபரங்களைத் தருகிறது.இயேசு உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்ற பிறகு, அவரது சீடர்கள் எந்த நாட்டில் சென்று பணியாற்ற வேண்டும் என்பது குறித்து சீட்டுப் போட்டு பார்த்தனர். அப்போது, தோமாவுக்கு விழுந்த சீட்டில் இந்தியாவின் பெயர் வந்தது.

அதிக தொலைவில் உள்ள இந்தியாவுக்கு செல்ல அவர் விரும்பவில்லை. அப்போது இந்தோபார்த்திய அரசரான கொண்டபோரஸ் அனுப்பிய ஹப்பான் என்பவர் கட்டடக் கலைஞர் ஒருவரை எதிர்பார்த்து பாலஸ்தீனம் சென்றிருந்தார். அவருக்கு தோன்றிய இயேசு தமது பணியாளரை அழைத்து செல்லுமாறு கூறி, தோமாவை அவருடன் அனுப்பி வைத்தார்.

கொண்டபோரஸ் அரசவைக்கு வந்த தோமா, மாளிகை கட்டுவதாகக் கூறி பணத்தை வாங்கிக் கொண்டு, அதை ஏழைகளுக்கு உதவி செய்ய செலவிட்டார். குறிப்பிட்ட காலத்திற்கு பின் மாளிகையைப் பார்க்கச் சென்ற அரசர், அங்கு ஒரு சிறிய கல் கூட இல்லாததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தோமா தம்மை ஏமாற்றி விட்டதாகக் கூறி அவரை அரசர் சிறையில் அடைத்தார். அப்போது, அரசரின் தம்பி காத் திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். அவருக்கு இறுதிச் சடங்குகள் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருந்த வேளையில் அவர் திடீரென எழுந்து விண்ணகத்தில் தமது அண்ணன் பெயரில் உள்ள மாளிகையைத் தமக்கு தருமாறு கேட்டார்.

இதையடுத்து, தோமா மாளிகை கட்டுவதாக கூறியது உண்மை என்று நம்பிய அரசர் கொண்டபோரஸ், அவரது குடும்பத்துடன் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவரானார். அதன் பிறகு, சிறிது காலம் அந்த நாட்டில் உள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றிய நற்செய்தி அறிவித்தார்.

பின்னர் மற்றொரு நாட்டுக்கு சென்ற தோமா காரிஷ் என்ற அரசவை பணியாளரின் மனைவியின் நோயைக் குணப்படுத்தினார். அதையடுத்து, தோமா அப்பகுதியில் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை மக்களுக்கு அறிவித்து பல்வேறு அற்புதங்கள் செய்து வந்தார்.

இதை அறிந்த அரசர் மஸ்டாய் மனைவி மிக்தோனியா தோமாவின் போதனைகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராக மனந்திரும்பினார். மிக்தோனியா கிறிஸ்தவ நம்பிக்கையை கைவிட அரசர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அரசர், தோமாவைக் கொலை செய்ய ஆணையிட்டார். அதன்படி, அரசரின் காவலர்கள் தோமாவை ஈட்டியால் குத்தி கொலை செய்தனர். அவரது உடல் புதைக்கப்பட்ட இடத்திலும் அற்புதங்கள் நிகழ்ந்ததைக் கண்ட அரசர் மஸ்டாயும் இறுதியில் கிறிஸ்தவரானார்.

சென்னையில் உள்ள புனித தோமையார் மலையே, தோமா குத்தி கொல்லப்பட்ட இடம் என்றும் சாந்தோம் ஆலயம் உள்ள இடத்திலேயே அவர் அடக்கம் செய்யப்பட்டார் என்றும் மரபுகள், வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் அகழ்வாய்வுகள் தெரிவிக்கின்றன.

**நோபட் பெர்னாண்டோ**



ஹோமாகம தேர்தல் தொகுதியில் பல வீதிகளின் புனரமைப்பு பணிகளை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தபோது....

## வைத்தியசாலை விடுதியிலிருந்து...

இந்நிலையில் வைத்திய அத்தியட்சகர் நேற்று விடுதியிலிருந்து வெளியேறினார். இதையடுத்து வைத்தியசாலை முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டமும் நிறைவுக்கு வந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடிய வைத்தியர் அர்ச்சுனா, தானே தற்போதும் வைத்திய அத்தியட்சகர் எனவும் தற்போது சுகவீன விடுமுறையில் இருப்பதாகவும், நிலைமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்புக்குச் செல்வதாகவும் தெரிவித்து விட்டு வெளியேறினார்.

## 2,888 கிலோ பீடி...

கடத்திச் செல்ல முயன்ற மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2,888 கிலோ பீடி இலைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணிப்பகிஷ்கரிப்புக்கு மத்தியிலும்...

கடமைகளில் ஈடுபட்டு மக்கள் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டதை காணமுடிந்தது. இது தொடர்பில் மத்துகம பிரதேச செயலாளர் மதுஷா சங்கல்ப தெரிவிக்கையில், மத்துகம பிரதேச செயலகத்தின் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல், தேசிய அடையாள அட்டை பணி, பதிவுப் பிரிவு உள்ளிட்ட பொதுச் சேவைகளை எவ்வித இடையூறுமின்றி பராமரித்து வருவதாக தெரிவித்தார். மத்துகம பிரதேச செயலகத்தில் அனைத்து அரச சேவைகளும் முறையாக நடைபெற்றன.

## பொதுப் போக்குவரத்தில்...

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு 390 பில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும், 300 பில்லியன் ரூபாவை ஒப்பந்தக்காரர்களுக்காகவும் 90 பில்லியன் ரூபா கடனை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க,

நாடு எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாத்திரம் கடந்த இரண்டு வருடங்களில் 390 பில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. அந்த பணத்தில் 300 பில்லியன் ரூபா ஒப்பந்தக்காரர்களுக்காகவும் 90 பில்லியன் ரூபா கடனை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் வெற்றியானது, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. இதன் மூலம் கடந்த பொருளாதார நெருக்கடியின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது. குறிப்பாக, மத்திய அதிவேகப் பாதையின் முதல் கட்டத்தை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய அதிவேகப் பாதையின் 02 ஆம் மற்றும் 03 ஆம் கட்டம், ருவன்புர அதிவேகப் பாதைத் திட்டம் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நிதி முதலீடுகளின் ஊடாக அதுருகிரிய தூண்களின் மேல் அமைக்கப்படும் அதிவேகப் பாதைத் திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பில் இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக அரச, தனியார் கூட்டு முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், இந்த வருட இறுதிக்குள் புகையிரதங்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான பயணச்சீட்டு வழங்க இலத்திரனியல் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதிவேகப்பாதைகளில் கட்டணம் அறவிடலும் சில மாதங்களில் இலத்திரனியல் முறைமைக் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்படும். இலகு ரயில் திட்டத்துக்கான (LRT) முதலீடுகளை மேம்படுத்துவது குறித்து ஜப்பான் அரசாங்கத்துடன் ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

## வேலைநிறுத்தங்களின்...

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து ஆகிய துறைகள் மக்களின் வாழ்க்கையுடன் நேரடியாக தொடர்புபட்ட முக்கிய துறைகளாகும். இத்துறைகளில் தொழில் புரிவோர் தொழில் உரிமை மற்றும் கட்டளைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் ஊடாக செயற்படும் போது பொது மக்களின் வாழ்க்கை, குழப்பத்திற்கு உள்ளாவதை புரிந்துகொள்ள வேண்டும் என்றும் மேலும் சுட்டிக்காட்டினார்.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக விதிக்கப்படும் வரிகள் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் அன்றாட வேலை செய்யும் அப்பாவி மக்கள் மீதும் சுமத்தப்படுவதாகவும் அரசாங்க தொழில்களை செய்துகொண்டு போராட்டம் நடத்துபவர்கள் இவற்றை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் மேலும் தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சையில்...

பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களுக்கே, இந்த வட்டியில்லாக் கடன் திட்டம், 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதில் அதிகபட்சமாக 08 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 17 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் 100 பட்டப்படிப்புகளை கற்பதற்கு ஏழு மாணவர் குழுக்களின் கீழ் உள்ள 17,313 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டு உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் இந்தக் கடன் திட்டத்தின் எட்டாவது தொகுதியாக உள்வாங்கப்படவுள்ளனர். இது தொடர்பில் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படவுள்ள உத்தேச கற்கைநெறிகள் தொடர்பான முன்மொழிவுகள் தற்போது அழைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும், தெரிவித்துள்ளது.

## தொழிற்சங்கப் போராட்டத்தை...

சுமார் 08 இலட்சம் பேர் இருக்கின்றனர். இன்று அரசாங்கமாகட்டும், தொழிற்சங்கங்களாக இருக்கட்டும் அனைவருமே முழு முயற்சியுடன் இந்த 1,700 ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றனர். மக்களும் இதற்கு ஆதரவளிக்கிறார்கள்.என்னைப் பொறுத்த வரைக்கும், நான் இந்த நாள் கூலி சம்பளம் முறைமையை எதிர்க்கிறேன்.இதற்கு ஒரு மாற்று முறைமை தேவை.

ஆனால், அந்த மாற்று முறைமை வரும் வரைக்கும் ஒரு நியாயமான சம்பளம், வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பளம் எமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

என்னை பொறுத்த வரைக்கும் இன்றிலிருந்து மக்கள் அவர்களது ஆதங்கத்தை வெளிக்காட்டுவர். அவர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். நியாயமான தீர்வு கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்" இவ்வாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு ஆளுநர்...

சரவணன் (Datuk Seri. Murugan Saravanan) விசேட அழைப்பு விடுத்துள்ளார்.

மூவின மக்களுக்கும் பாரபட்சமின்றி சிறந்த தலைமைத்துவத்தை வழங்கும் தலைவர் என்ற ரீதியில் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.பல்லின மக்கள் வாழும் நாடுகளில் இந்திய வம்சாவளி தமிழர்கள் ஒன்றாக வாழ்வதற்கு செந்தில் தொண்டமான் வழங்கிய பயிற்சிகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து,ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று மலேசியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டார்.

## ஜனாதிபதி தபவிக்காலம்...

அதற்கிணங்க ஒரு மாதத்திற்குள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் மனுதாரருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பிற்கிணங்க உச்ச நீதிமன்றம் அதன் உறுதிப்பாட்டை தெரிவிக்கும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தடை விதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணியும் வர்த்தகருமான சமிந்த லெனவ என்பவரே இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 30 (2) சரத்து, உரிய வகையில் திருத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர்,அதற்கான வியாக்கியானத்தை பெற்றுத் தருமாறு அந்த மனுவில் அவர் கோரியிருந்தார்.

அந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், ஆணையாளர்கள், மற்றும் சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு விசாரணை நிறைவு பெறும் வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதை இடைநிறுத்தி தடையுத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் அரசியலமைப்பின் 30 (2)சரத்து உரிய வகையில் திருத்தப்படவில்லை என்பது தொடர்பில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் அந்த மனுவில் மேற்படி சட்டத்தரணி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ... அநீதியான வேலைநிறுத்தங்களால்...

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

2022 ஆம் ஆண்டிலிருந்து, நமது அமைச்சினால் பாரிய அளவில் பல்வேறு கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. பாராளுமன்றத்தில் பல சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில சட்டமூலங்களை முன்வைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியின் ஆதரவுடன், 20202030 டிஜிட்டல் பொருளாதாரத் திட்டம் வெளியிடப்பட்டது. தற்போதைய 03 பில்லியன் அமெரிக்க டொலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.பாராளுமன்றத்தில் இன்று (09) தொலைத்தொடர்பு சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்படுகிறது.இந்த சட்டத்தை 28 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்த எதிர்பார்க்கப்படுகிறது. நுகர்வோரைப் பாதுகாப்பதுடன் தொலைபேசி நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியை நியாயமான போட்டியாக மாற்றுவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும். முன்பு, இந்த சட்டம் தொலைத்தொடர்பு கட்டமைப்பு அனுமதிப்பத்திரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தது. அதன்படி, திருத்தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அனுமதிப்பத்திரம் வழங்கும் பொறிமுறையும் மாற்றம் அடையும்.

மேலும், எதிர்காலத்தில் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய வசதிகளை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. கடல்வழி கேபிள் சேவைக்கான அனுமதிப் பத்திரம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு நாங்கள் தயாராகி வருகிறோம். இந்த ஆண்டு தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தை முன்வைக்கவும் எதிர்பார்க்கின்றோம். மேலும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆணைக் குழுவை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், நாட்டின் அனைத்து அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும்.

தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின் படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபா கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு வருடத்திற்கு சுமார் 280 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அந்த செலவுகளை எவ்வாறு ஈடுகட்டுவது என்பதை எதிர்க்கட்சி தெரிவிக்க வேண்டும்.

## அரச துறை ஊழியர்களுக்கு...

தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழலில் அவ்வாறு செயற்பட முடியாது என தெரிவித்துள்ள அமைச்சர், அவ்வாறாயின் மீண்டும் வரி அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி விடும் ஜே.வி. பியின் முயற்சியே இது என குறிப்பிட்டுள்ள அமைச்சர், அனுரகுமார திசாநாயக்க டில்வின் சில்வா ஆகியோர் தலைமையிலான ஜேவிபியின் செயலே இது வென்றும் அது இரகசியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வேலை வாய்ப்புகளை இல்லாதொழித்து பாடசாலைகளை மூடுவதன் மூலம் மீண்டும் 1987 1989 கால அராஜக நிலையை நாட்டில் ஏற்படுத்தி இளம் மாணவர்களை வீதிக்கு கொண்டு வந்து, அரசியல் இலக்குகளை நிறைவேற்றுவதே ஜேவிபியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டில் விவசாயத்துறை வேலை வாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களுக்கு விமானச் சீட்டுகளை வழங்கும் நிகழ்வு தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்;

சர்வதேச நாடுகளுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது மாத்திரமே எஞ்சியுள்ளது.

இவ்வாறான அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை பொறுக்க முடியாத சில அரசியல் கட்சிகளே, நாட்டிற்கு வருகின்ற நற்செய்தியை விரும்பவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாவது தவணைக்கடன் கிடைத்ததும் 40 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன.தற்போது கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்துள்ள நிலையில், சர்வதேச தரத்தில் நாடு பொருளாதாரத்தில் முன்னோக்கி நகரும் நிலையில் 25 ஆயிரம் ரூபா சம்பளம் கோரி வேலை நிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறுபான்மை இனத்தவர்...

நடக்குமா? என கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

"இப்பொழுது ஆட்சியல் உள்ள ஜனாதிபதி கூட தேர்தலில் போட்டியிடுவாரா என்பது எங்களுக்கு தெரியாது. உண்மையில் வேட்பாளர்கள் எல்லோரும் தெரிவு செய்யப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆதரிப்பது என தீர்மானம் எடுக்கும். அதேவேளை, சிறுபான்மையை சேர்ந்தவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. வெறுமனவே இரண்டு இலட்சம் மூன்று இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வதில் எந்தவொரு நன்மையும் இல்லை.

தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கம் தொடக்கம் காணி பிரச்சினை போன்ற நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

வற்றை தீர்த்துத் தரக்கூடிய, வெற்றி பெறக்கூடிய வேட்பாளரை அடையாளம் கண்டு அவரை ஆதரிப்பதே சிறந்தது.

இலட்சக்கணக்கான வாக்குகளை கொடுத்து அவருடன் உடன்படிக்கையை செய்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது பொருத்தமானது. இது, என்னுடைய தனிப்பட்ட கருத்து.

அதேவேளை, 2015ஆம் ஆண்டு சட்ட திருத்தம் செய்கின்ற போது சட்டத்துறை, நீதித்துறை, நாடாளுமன்றம் உட்பட எல்லோரும் தவறிழைத்து விட்டன. இது தொடர்பாகவும் பட்டதாரிகளின் நியமனக் கோரிக்கை தொடர்பாகவும் கிழக்கு மாகாண அளுநரிடம் கலந்துரையாடி அவரை சந்திக்க வாய்ப்பு எற்படுத்தப்படும். ஜனாதிபதியின் கவனத்திற்கும் இவ்விடயத்தை கொண்டு செல்வோம்" இவ்வாறு ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

## வற் வரியை அதிகரித்தாலேயே...

அரச சேவையுடன் தொடர்புடைய பல தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து, முன்னெடுத்துள்ள தொழில்சார் நடவடிக்கை தொடர்பில் இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு வழங்கக்கூடிய சாதகமான தீர்வுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வேலைநிறுத்தம் செய்பவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வற் வரியை 03 வீதம் அதிகரிப்பதற்கு பதிலாக, மாற்று வழியை பரிந்துரைக்க வேண்டும்.

எக்காலத்திலும் அரசாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை அறிந்த, ஒரு நாட்டை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பது பற்றிய சிறிதேனும் புரிதல் இல்லாத, குறுகிய அரசியல் தலைவர்களின் வழிகாட்டுதலால் இவர்கள் மாதம் 20,000 ரூபாய். சம்பள உயர்வு கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பளத்தை அதிகரிக்க 400 பில்லியன் ரூபாய் அல்லது 40,000 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி மூலம் அரச சேவை சம்பளத்தை இலங்கை அரசு செலுத்துகிறது. இந்த சம்பள உயர்வைக் கோருவதற்கு, 18% வற் வரியை அதாவது குறைந்தபட்சம் 21% ஆக அதிகரிக்க வேண்டும்.

நாட்டு மக்களை வரிச்சுமைக்கு உட்படுத்த அரசாங்கத்தால் முடியாது. பொது மக்கள் ஏகமனதாக வரி உயர்வை ஆதரித்தால், போராட்டக்காரர்கள் ஆறுதல் அடையலாம். வேலை நிறுத்தங்களுக்கு அரசு பயப்படும்போது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது. எனவே, அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் வரை காத்திருக்க முடியாவிட்டால், அதற்கு முன்னர் இந்த சம்பளத்தை வழங்குவதற்கான பணத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதை போராட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு கூறவேண்டும் வேண்டும்.

இவ்வருடம் சம்பள அதிகரிப்பை வழங்கும் சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டாலும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு, திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின் தற்போது அரசுக்கு இருக்கும் செலவீனத்திற்கு மேலதிகமாக வருடாந்தம் 140 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், இருபதாயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்பட்டால் மேலும் 280 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் திறைசேரி செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வருமானத்தைப் பெறுவதற்காக தற்போதைய வருமானத்தை அதிகபட்சமாக நிர்வகித்தாலும், வரிகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க, வற் வரி இரண்டு வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். மேலும்,தொழிற்சங்கங்கள் கோரும் சம்பளத்தை அதிகரிப்பதற்கு 3 வீதத்திற்கு மேல் வற் வரியை அதிகரிக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், தற்போது அதை செய்ய இயலாது எனவும் ஏற்கனவே வற்வரி 18 வீத உச்ச அளவில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளால் முன்பு போன்று மத்திய வங்கியினால் பணம் அச்சிட முடியாது என சுட்டிக்காட்டிய திறைசேரி செயலாளர், அவ்வாறு செய்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்கவும் இங்கு கருத்துத் தெரிவித்தார். அரச ஊழியர்களின் சம்பளத்தை இந்த வருடம் மீண்டும் அதிகரிப்பது கடினமான பணியாக இருந்தாலும், அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீட்டை வழங்குவதாக ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பள முரண்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

## இன்றைய பலன்கள்

(09.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :**
எதிர்பார்க்கும் பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகமாகும். வட திசையிலிருந்து வாழ்த்து செய்தி ஒன்றை எதிர்பார்க்கலாம்.

**ரிஷபம் :**
பண நடமாட்டம் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் எட்டிப் பார்க்கும். சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வேலைவாய்ப்பும் முன் பணமும் பெற்று உற்சாகமாக பணியாற்றுவர்.

**மிதுனம் :**
உத்தியோகத்தர்கள் உற்சாகமான மனநிலையோடு காணப்படுபவர். உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வும், விரும்பிய இடத்திற்கு மாறுதலும் வந்து சேரும்.

**கடகம் :**
பிள்ளைகளின் வழியில் நல்ல தகவல்கள் கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும். உத்தியோகத்தர்கள் பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள்.

**சிம்மம் :**
அன்புக்கு அடித்தளம் இடுங்கள். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு தங்கள் பணிகளில் முன்னேற்றம் அடைவர்.

**கன்னி :**
உத்தியோகத்தர்கள் செய்த சிறு தவறு சக பணியாளர்களின் விரோத மனப்பான்மையால் உயர் அதிகாரிகளின் மத்தியில் பெரிதாக கூடும்.

**துலாம் :**
புபழைய வீடுகளை புதுப்பிப்பீர்கள். ஆரோக்கிய குறைபாடு ஏற்பட்டால் அலட்சியம் செய்யாமல் தகுந்த சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம் :**
சிலருக்கு பூர்வீக சொத்துக்கள் கிடைக்கக்கூடும். முடிந்தவரை பயணங்களை தவிர்த்து போடுங்கள். நெருக்கடி நிலை என்றால் கவனமாக பயணம் செய்யுங்கள்.

**தனுசு :**
அலுவலகத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படும். தள்ளி வைத்த வேலையை அவசரமாக செய்து கொடுத்து மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

**மகரம் :**
சொந்த தொழில் செய்பவர்கள் பரபரப்பாக பணியை செய்தாலும் குறிப்பிட்ட காலத்தில் முடித்து கொடுக்க முடியாத நிலை உருவாகலாம்.

**கும்பம் :**
அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை கையாள்வதில் பொறுமை அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம்.

**மீனம் :**
நெருங்கிய உறவினர் இல்லத்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உற்சாகமடைவீர்கள். சகோதர வழியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை பெற்றோரின் அறிவுரைகளால் மாற்றிக் கொள்வீர்கள்.

## பிரபல வர்த்தகர்...

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் மேலும் நான்கு பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவர்கள் கொழும்பு 07 மற்றும் அத்துருகிரிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் துப்பாக்கிச் சூட்டில் பிரபல பாடகியான கே. சுஜீவாவும் படுகாயமடைந்ததுடன் மேலும் இரு பெண்களும் ஆண் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பிரபல போதைப் பொருள் வர்த்தகரான கஞ்சிப் பானை இம்ரானினால் ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் அந்த துப்பாக்கி ரவைகளில் KPI என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் பொலஸொர் தெரிவித்தனர்.

கஞ்சிபானை இம்ரான் KPI என்ற எழுத்தை உபயோகித்தே தமது போதைப் பொருள் வர்த்தகத்தை முன்னெடுத்து வருவதாகவும் பாகிஸ்தான் போதை பொருள் வர்த்தகர்கள் இலங்கைக்கு அனுப்பும் போதை பொருளிலும் அந்த எழுத்துக்களே பொறிக்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்

துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பாடகி சுஜீவா உள்ளிட்ட இருவரும் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ருக்ஷான் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒரு பெண் உட்பட இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இருவருக்கும் இடுப்பின் கீழ் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் கார் ஒன்றில் வருகை தந்ததுடன் இரண்டு T56 துப்பாக்கிகளைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## ஸ்ரீலங்கன் விமானத்தில்.... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த சந்தர்ப்பத்திலேயே இயந்திர கோளாறு ஏற்பட்டது.

இதையடுத்து மீண்டும் அந்த விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்திக்கு... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களை தேசிய மற்றும் உலகளாவிய தொழிலாளர் சந்தையை சமாளிக்கக்கூடிய நல்ல ஆளுமை கொண்ட அறிவார்ந்த இளைஞர்களாக உருவாக்க பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணப்படி தேசிய இளைஞர் சேவை மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

அன்று ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் சேவை மன்றத்தின் ஊடாக இளைஞர்களுக்கு பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது நாங்கள் எதிர்கட்சியில் இருந்த போதும் இளைஞர் சேவை மன்றத்தின் மூலம் பாரிய அளவிலான பணிகளை நிறைவேற்ற முடிந்தது. இளைஞர்களின் ஆற்றலை வீதியில் இறக்காமல் நாட்டின் பொருளாதாரத்துக்கு பயன்படுத்த முடிந்தது. அப்போது அரசியல் இருக்கவில்லை.

தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான திட்டங்களை செயல்படுத்தினோம்.

துரதிஷ்டவசமாக இளைஞர்களை ஒன்று திரட்டி நடைமுறைப்படுத்திய திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்த முடியவில்லை. இன்றைய இளைஞர்கள் சில அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக மாறிவிட்டனர்.

இதைத் தடுத்து நிறுத்த இளைஞர் சமூக இயக்கம் புத்துயிர் பெற வேண்டும் என்றார்.

## வாடகை வீட்டுக்கான... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு பதில் அளித்திருந்த பாராளுமன்ற செயலாளர் நாயகம், மாதிவெலவில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடுகளுக்கு பணம் அறவிடும் அதிகாரம் மட்டுமே தமக்கு உள்ளதாகவும் வெளியில் உள்ள வீடுகளுக்கு அவ்வாறு பணம் அறவிடும் அதிகாரம் தமக்கு கிடையாது என்றும் அறிவித்துள்ளார். எவ்வாறெனினும் முன்னாள் அமைச்சர் அதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ள நிலையில், அந்த பணத்தை அறவிட முடியும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் MP க்களின்... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் பிரதி சபாநாயகர்களான திலங்க சுமதிபால மற்றும் ஆனந்த குமாரசிறி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்த பிரேமரத்ன, அனுர பஸ்டியன், சந்திரதாச கலப்பத்தி, ரஞ்சன் ராமநாயக்க, சந்தன கத்ரியாராச்சி, ஜீவன் குமாரதுங்க, சுமேதா ஜி. ஜயசேன, திஸ்ஸ கறலியத்த, எம்.எஸ்.எஸ். அமீர் அலி, நோயல் பத்மசிறி, ஆனந்த குலரத்ன, சமந்தா கருணாரத்ன, ஹேமா ரத்நாயக்க, உபாலி அமரசிறி, தேமிய ஹுருள்ளே, கேசரலால் குணசேகர, சமன்சிறி ஹேரத், தீபால் குணசேகர, பிரேமசிறி மானகே, பி. திஸ்ஸகுட்டியாராச்சி, உதித லொக்குபண்டார, கமலா ரணதுங்க, ஆர். நந்திமித்ர ஜி. த சொய்சா, ரவீந்திர சமரவீர, நந்தன குணதிலக, நந்திமித்ர ஏக்கநாயக்க, பி. தயாரத்ன உள்ளிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## ANCL விற்பனை நிர்வாக... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட அன்னார்,பஸ'யால , எம்பிலிபிட்டிய வத்த பகுதியை வசிப்பிடமாக்கொண்டவராவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 29 எம்பிலிபிட்டிய வத்த, பஸ்யால இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று 09 ஆம் திகதி இறுதிக் கிரியையகள் மீரிகம பொது மயானத்தில் நடைபெறும்.

# தேர்தல் நெருங்குகையில் நாட்டில் வன்முறைகளை கட்டவிழ்ப்பது தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது!





## வன்முறை சகாப்தத்தின் சம்பவங்கள் தற்போது நினைவுக்கு வருகின்றன

ஜே.வி.பியினர் அக்காலத்தில் தேர்தல் பணிகளில் வெறுப்புக் கொண்டனர். தங்களின் அழிவுப் பாதையில் பயணத்தைத் தொடர வேண்டும் என்று நினைக்கத் தொடங்கினர் என்று தோன்றுகிறது.

மாணவர் இயக்கத்தை கையகப்ப டுத்திய இவர்கள், அதை அரசாங்கத் திற்கு எதிரான போராட்டத்திற்காக முன்னெடுத்தனர். ஜே.வி.பியின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்காத மற்றைய மாணவர் குழுக் களை அடக்குவதற்கான வேலைத் திட்டத்தை மேற்கொண்டனர். எதிர்ப்பை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் ஜே.வி. பி தனது பணியை முன்னெடுத்தது. ராகம தனியார் மருத்துவக் கல்லூ ரிக்கு எதிரான போராட்டம் மருத்து வப் பணிப்புறக்கணிப்பாக மருத்து வமனைகளுக்குள் பரவியது.

மருத்துவமனைக்கு அதிகாலை யில் மருந்துவ சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் இதனை அறிந்திருக் கவில்லை. நோயாளிகள் எதிர் கொண்ட அசௌகரியத்தினால் அரசாங்கத்தின் மீது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.



## வாக்குகள் தங்களுக்குச் சாதகமாக கிடைக்காது என்பதால்தான் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள்!

அனைத்துப் பல்கலைக்கழகங்க ளும் போர்க்களங்களாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை அவர்கள் மத்தியில் ஏற்பட்டது.

தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காக தலகொல்ல அரசு மருத்துவமனை மற்றும் இந்த வைத் தியசாலை அமைந்துள்ள 14 ஹெக் டேயர் காணியை தனியார் மருத்துவ பீடத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கி, மாணவர்களின் பயிற்சிக் காக ராகமையிலுள்ள கொழும்பு வடக்கு பெரியாஸ்பத்திரியை வழங் குவதற்கு அரசாங்கம் ஆலோச னையை முன்வைத்தது.

அதற்கு அனுமதியும் வழங்கப்பட் டது. இதன் போது ஜே.வி.பி இலவச கல்விக்கொத்தை கையில் எடுத்து வீதியில் இறங்கியது. இந்த முழக்கத் திற்கு பல கட்சிகளின் ஆதரவைப் பெறுவது ஜே.வி.பியின் போராட் டக் குணம் ஆக இருந்தது.

தனிநபராக கட்சியை முன்னெ டுத்துச் செல்லும் போது, அது ஒரு ஒற்றை அரசியல் விளையாட்டா கும். எனவே தனியார் பல்கலைக்க ழக யோசனைக்கு எதிராக ஜே.வி. பி செயல்பட்டது. மருத்துவ சங்கங் கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பிற மாணவர் சமூகங்களு டன் தொடர்ச்சியான போராட்டங் களை ஜே.வி.பி முன்னெடுத்தது.

இவை அனைத்தும் தனியார் பல் கலைக்கழகங்களுக்கு எதிராக மட் டுமல்ல. அரசாங்கத்திற்கு எதிரான

இவ்வாறு செயல்பட்டு அரசாங் கத்தின் மீது குறைகூறி, வாக்குகள் மூலம் தமக்குக் கிடைக்காத அதிகா ரத்தைப் பெறுவதற்கு முயற்சிப்பது ஜே.வி.பியின் வழக்கம். வாக்குகள் தங்களுக்குச் சாதகமாக கிடைக்காது என்பதால் இவையெல்லாம் ஜே.வி. பியினால் மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகளாகும்.

இரண்டாவது முறையாக முழு நாட்டையும் உள்ளக்கிய வகையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி, தேசிய தொழிலா ளர் போராட்ட மையம் ஆரம்பித் தது. மூன்றாவது அகில இலங்கை வேலைநிறுத்தம்,1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடை பெற்றது. இவ்வாறு, வேலைநிறுத் தங்களுக்கு அழைப்பு விடுப்பதன் நோக்கம் அவர்களுக்கு பொதுமக்க ளின் வாக்குகளைப் பற்றிய பயமே யாகும். தேர்தல் ஊடாக அதிகாரம் மாறும் போது, தமது சீர்குலைப்பு நடவடிக்கைகளை பயன்படுத்தி சதி மூலம் அதிகாரத்தை பெறுவ தற்கு முயற்சிப்பதே ஜே.வி.பியின் நோக்கம். தோட்டாக்களை முன்நி லைப்படுத்தி பலவற்றை மேற் கொண்டனர். வேலைநிறுத்தத்திற்கு எந்தத் தலைவரும் ஒப்புக்கொள் ளவில்லை என்றால், நிராயுதபா ணியான அவர்களுக்கு எதிராக அடையாளங் காணப்படாத துப்பாக் கித்தாரர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொண்டனர். இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கத்தி னால் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி சம்பள உயர்வு கோரி தென் கொழும்பு போக்கு வரத்து சபையால் வேலைநிறுத் தம் ஆரம்பிக்கப்பட்டது. இரத் மலானை, மொரட்டுவ, மற்றும் கட்டுபெத்த டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் மறுநாள் இதில் இணைந்து கொண்டனர்.

அரசாங்கம் கோரிக்கைகளுக்கு தீர்வை வழங்கியது. இதன் மூலம் வேலைநிறுத்தத்தை அரசாங்கத் தினால் முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது. எனினும், இதற்கு உடன்படாத ஜே.வி.பி. இதனை தொடர்ந்து வேலைநிறுத்தமாக மாற்றியது.

கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்ட போதிலும், ஜே.வி.பி அரசிய லின் காரணமாக பதுளை இலங்கை போக்குவரத்து டிப்போ ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். பதுளை இலங்கை போக்குவரத்து டிப்போ ஊழியர்களின் கோரிக்கை அப்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுடன் ஒத்துப்போ காததாலும் அரசாங்கத்தால் அது நிராகரிக்கப்பட்டது. அதனால் இணை சேவைகளுக்கு இடையி லான முரண்பாடுக்கு வழிவகுக்கும் என்பதால் நிராகரிக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி இது தேசிய தொழிலாளர் போராட்ட மையத்தி னால் அகில இலங்கை வேலைநிறுத் தமாக மாற்றப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபை வேலைநிறுத்தம் வற்புறுத்தல் மற்றும் வன்முறையின் அடிப்படை யில் நடைபெற்றது. ஏதேனும் ஒரு டிப்போ ஊழியர்கள் பயணிகளை ஏற்றிச் சென்றால், ஜே.வி.பி.யின் துப்பாக்கிதாரி பஸ் ஓடும் போது ஓட்டுநரையும் நடத்துனரையும் சுட்டுக் கொன்றார். இவ்வாறு நாடு முழுவதும் ரயில் மற்றும் பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டன. கொண்ட இவர்கள் 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அவசர உத்தரவை பிறப் பித்தனர். மேலும் அனைத்து வர்த் தக வங்கிகளும் டிசம்பர் உள்ளிட்ட மாதத்தில் முடங்கின. அது மாத்தி ரமின்றி வங்களிடமிருந்து பொது மக்கள் பெற்ற கடனையும் வர்த்தக கடனையும் உடனடியாக நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

ஜே.வி.பியின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் இதனை நடைமுறைப்படுத்துவதாக படும் என்று ஜே.வி.பியினர் விடுத்த அந்த அறிவிப்பிலும் தெரிவிக்கப் பட்டிருந்தது. நாட்டின் 95 வீதமான வங்கிகள் பதாகைகளை உயர்த்தி, முடிவை ஏற்றுக் கொண்டதாக அறி வித்தன. அவ்வாறு செய்யாத சில வங்கிகளின் பல முகாமையாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வன்முறை சகாப்தத்தின் சில நினைவுகள் இப்போது ஞாபகத் துக்கு வருகின்றன. தேர்தல் நெருங் கும் போது ஜே.வி.பியினர் நாசவே லைகளில் ஈடுபடுவது தற்போது

## அரசாங்கத்தின் மீது குறைகூறி, வாக்குகள் மூலம் தமக்குக் கிடைக்காத அதிகாரத்தைப் பெறுவதற்கு முயற்சிப்பது ஜே.வி.பியின் வழக்கம்!

அப்போது வரவிருந்த தேர்தலில், தோட்டாக்கள் மூலம் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில், ஜே.வி. பியினர் தங்கள் பலத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்.

தேசப்பற்றாளர்கள் என்று கூறிக் வங்கியின் முன்பாக பேனர் வைக் கப்படாவிட்டால், அந்த உத்தரவுக்கு துரோகம் செய்தவர்களாக கருதி, அன்றைய தினத்திற்கு பிறகு தண் டிக்கப்படுவார்கள் என்று கருதப்பட் டது. அவ்வாறு தண்டனை வழங்கப் மெதுவாக வெளிப்பட ஆரம்பித்துள் ளமை இப்போதைய வேலைநிறுத் தத்தை பார்க்கும் போது தெரிகிறது.

**ஒசித்த அத்தனாயக்க**




**வெகுசன ஊடக அமைச்சு**
**ஏற்பாடு செய்யும்**

**2024 சர்வதேச தகவல் அறியும் உரிமை தொடர்பான தினத்திற்கு இணைவாக நடாத்தப்படும் நாடளாவிய ரீதியிலான பாடசாலை மற்றும் திறந்த சுவரொட்டி சித்திரப் போட்டி — 2024**

**போட்டி பிரிவு**

1. சிரேஷ்ட பிரிவு - 12, 13 தரங்கள்
2. கனிஷ்ட பிரிவு - 9, 10, 11 தரங்கள்
3. திறந்த பிரிவு - எந்தவொரு இலங்கைப் பிரஜையும் ஆக்கத்தைச் சமர்ப்பிக்கலாம்.

**போட்டி நிபந்தனைகள்**

1. விண்ணப்பப் படிவத்தை கீழே தரப்பட்டுள்ள இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
2. பாடசாலைப் பிரிவின் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சுவரொட்டி சித்திரம் கல்லூரியின் அதிபரினால் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
3. திறந்த பிரிவின் ஆக்கம் ஆக்கவியலாளரினால் தமது ஆக்கமென உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.
4. சகல ஆக்கங்களையும் பதிவுத் தபாலில் ''மேலதிக செயலாளர் (அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் தகவல்), வெகுசன ஊடக அமைச்சு, 163, "அசிதிசி மெதுர", கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு -05'' எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
5. சகல சுவரொட்டி சித்திரத்திற்காகவும் 18x24 அளவான தாளைப் பயன்படுத்துதல் வேண்டும்.
6. சுவரொட்டி சித்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2024-08-20 ஆகும்.
7. எந்தவொரு மொழி மூலத்திலும் சுவரொட்டிச் சித்திரத்தைச் சமர்ப்பிக்கலாம்.
8. பாடசாலை விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாடசாலைப் பிரிவு - சுவரொட்டி சித்திரப் போட்டி - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. திறந்த விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திறந்த பிரிவு - சுவரொட்டி சித்திரப் போட்டி - 2024'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
10. தெரிவு செய்யப்படும் ஆக்கங்களின் உரிமையை வெகுசன ஊடக அமைச்சு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரிசு மற்றும் சான்றிதழ்கள்**

அகில இலங்கை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் 2024 செப்டெம்பர் 28ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச தகவலறியும் உரிமை தொடர்பான விழாவிற்கு இணைவாக கொழும்பில் வழங்கப்படும் என்பதுடன் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் அன்றைய தினம் பொதுமக்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

**சுவரொட்டி சித்திரப் போட்டி தலைப்புகள்**

1. தகவல் உரிமை பிரஜையொருவரை வலுவேற்றும்
2. தகவல் உரிமை என்பது ஜனநாயகத்தின் உயிர் நாடியாகும்
3. தகவல் உரிமை ஊடாக வினைத்திறனான அரச சேவையை நோக்கி
4. தகவல் உரிமையும் எமது கிராமத்தின் அபிவிருத்தியும்
5. தகவல் உரிமையின் பயன்பாடு நாட்டு மக்களுக்கே.

**செயலாளர்,**
**வெகுசன ஊடக அமைச்சு.**

**மேலதிக விபரங்கள்**
**வெகுசன ஊடக அமைச்சின் தகவலறியும் உரிமை தொடர்பான விசேடப் பிரிவு.**

**தொலைபேசி: 0112515700**
**இணையதளம்: www.rti.gov.lk மின்னஞ்சல்: rti@media.gov.lk/rtiunitsl@gmail.com**

## 15 வருட காலமாக மேல் மாகாண சபை உறுப்பினராக இருந்து...

# சகல சமூகங்களுக்கும் சேவையாற்றிய முன்னாள் மா.ச உறுப்பினர் சாபி ரஹீம்







கம்பஹா மாவட்டத்தில் முஸ்லிம்களது சமூக அரசியல், கல்வி மற்றும் கலாசாரப் பெறுமானங்கள் என்ற வகையில் நவீன காலத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய காலப்பகுதியில் ஒரு மாகாண சபை உறுப்பினராக கடந்த 15 வருட காலங்களாக பணியாற்றிய ஒருவராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சாபி ரஹீம் காணப்படுகிறார். அவர் 2004 இல் மாகாண சபைத் தேர்தல் மூலமாக அரசியலில் பிரவேசித்தவர்.

கடந்த 2004, 2009, 2014 ஆகிய வருடங்களில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தொடர்ச்சியாக வெற்றி பெற்று சுமார் 15 வருடங்கள் மாகாண சபை உறுப்பினராக இருந்து தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்திற்காகவும் சமூகத்திற்காகவும் பெரும் பங்காற்றி தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஒருவர். தன் பிரதேச மண்ணின் கல்வி வளர்ச்சிக்காக பாரிய பங்களிப்பைச் செய்தார்.

அரசாங்கத்தின் நிதி உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தினார். சாபி ரஹீமின் இந்த முயற்சி முன்னெடுப்பு கம்பாஹ மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளிலும் குறிப்பாக அவர் ஊரில் உள்ள அல் ஹிலால் பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கும் பெரும் மாற்றங்களுக்கு வழிவகுத்தது. இதன் வளர்ச்சியை அம் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் கட்டட நிர்மாணப் பணிகளின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

அதே போன்று தம் பிரதேச இளைஞர், யுவதிகளின் சுயதொழில் வாய்ப்பையும் வாழ்வாதார மேம்பாட்டையும் கட்டியெழுப்ப பாடுபட்டார். கிராமிய பாதைகளின் அபிவிருத்தி அப்பிரதேசத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இவர் பணியாற்றினார். பாடசாலை மாணவர்கள் மத்தியில் கல்வி, எழுச்சி, சுயதொழில் வாய்ப்பு, சுகாதாரம், சமுதாய எழுச்சி என்ற பிரவாகத்தின் அடுத்த யுகத்திற்கான இளம் தலைமைத்துவங்களை உருவாக்குகின்ற முயற்சிகள் சாபி ரஹீமினால் முன்னெடுக்கப்பட்டது. சிறுபான்மைக் கட்சியில் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு அதன் மூலம் சமுதாய எழுச்சியினையும் கிராமங்களுடைய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தலாம் என்ற பதிவை முதன் முதலில் இவரே முன்னெடுத்தார்.

அவருக்கு முற்பட்ட காலத்தில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவமின்றி காணப்பட்ட கம்பஹா மாவட்டத்தில் ஒரு புதிய அரசியல் தலைமைத்துவம் தோன்றி பல உன்னதமான சேவைகளைச் செய்து காட்டினார். சிறுபான்மை கட்சியொன்றின் மூலம் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்று இம்மாவட்டத்தில் அனைத்து இன மக்களுக்கும் சேவையாற்ற முடியும் என்பதை அறிவுபூர்வமாகவும் அவர் செய்து காட்டினார்.

குடும்ப வாழ்வாதாரத்தை பெருக்க முடியாமல் வீட்டில் முடங்கிக் கிடந்த இளைஞர் யுவதிகளுக்கிடையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான சரியான வழியைக் காட்டி, அவர்களை மகோன்னதமான இடத்திற்கு கொண்டு வருவது அவரது சிந்தனையின் நோக்காக இருந்தது. அதற்காக பல தரப்பட்ட திட்டங்களை வகுத்து செயற்பட்டார். அவர் கூட சுயதொழில் துறையில் மேலாண்மையுடையவர். அவரிடம் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆரம்பத்திலே பணிபுரிந்தார்கள். ஒவ்வொரு இளைஞர் யுவதிகளும் தொழில் அதிபராக வர வேண்டும். அவர்கள் தொழில் துறையில் வெற்றியடைய வேண்டும் என்பதில் உண்மையாக அவர் அயராது பாடுபட்டார். இப்படி பல எத்தனையோ சாதனைகளைச் செய்த முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் சாபி ரஹீம் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**கம்பஹா மாட்டத்திலுள்ள மக்களுக்கு சமூக பொருளாதார கல்வி, கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளில் அதிகளவில் பாரிய பங்களிப்பு ஆற்றி அம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தவர் என்று கூறுமளவுக்கு புகழ்பெற்ற நீங்கள், அரசியல் துறைக்குள் பிரவேசிப்பதற்கு பின்னணியாக இருந்தது யார் என்று கூற முடியுமா?**

ஆரம்பத்தில் நான், நீர்கொழும்பில் பெரிய முல்லயில் பாதணி தொழிற்சாலை பேட்டை ஒன்றை நடத்தி வந்தேன். அதில் சுமார் 50 பேர் அளவில் தொழில் செய்து கொண்டிருந்தார்கள். வடமேல் மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினராக இருந்த புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள மாகாண சபை உறுப்பினர் நியாஸ் என்னை ஒரு தடவை நேரில் வந்து சந்தித்தார்.

அவர் முதலில் என் உடன் பிறவா சகோதரர்களை சென்று சந்தித்து அவர்கள் அறிமுகத்தின் மூலமாகத்தான் என்னை 2004 இல் சந்திக்க வந்தார். அவர் என்னைச் சந்தித்த போது அவர் என்னிடம், 2004 இல் நடைபெறும் மாகாண சபைத் தேர்தலில் களம் இறங்கி போட்டியிட முடியுமா என்று கேட்டார். அதற்கு நான் அப்பொழுது அவரிடம் உடனே 'எனக்கு தேர்தலில் போட்டியிட ஆர்வம் இல்லை. நானொரு தொழிற்சாலை ஒன்றை வைத்து நடத்திக் கொண்டிருக்கின்றேன். எனக்கு நேரமில்லை. ஆனாலும் அக்கட்சிக்கு தேர்தலின் போது ஆதரவு வழங்கலாம் 'என்று தெரிவித்தேன். அதற்கு அவர் ஊரிலே மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலாங்க முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டி இடுவதற்கு வேட்பாளர் ஒருவரை பலரிடம் விசாரித்தோம். நான் ஒருவர்தான் மிகவும் பொருத்தமானவர் என்று பலர் அவரிடம் அபிப்பிராயம் தெரிவித்ததாக என்னிடம் அவர் தெரிவித்தார். அவை தவிர இத்தேர்தலில் வெற்றி பெற்றால் முழு கம்பஹா மாவட்டத்திற்கும் சேவை செய்யலாம். வாருங்கள் என்று அவர் மூன்று தடவை என்னைச் சந்தித்து அழைப்பு விடுத்தார். மூன்று விடுத்தம் வந்து என்னைச் சந்தித்து அழைப்பு விடுத்த போதும் நான் விருப்பம் தெரிவிக்க வில்லை. ஆனாலும் இது தொடர்பில் மறைந்த முன்னாள் ஸ்ரீலாங்க முஸ்லிம் காங்கிரஸ் பிரதி அமைச்சர் நூர்தீன் மசூர் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். அதற்குப் பின் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடமான தாருஸ்ஸலாத்திற்குச் சென்றேன். அதற்குப் பின் மறைந்த புத்தளம் பாயிஸ் கதைத்தார். தாருஸ்ஸலாம் சென்று கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் நேரில் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் அக்கட்சியிலே போட்டியிடுவதற்கான இணக்கத்தை தெரிவித்தேன்.

கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்டது. அதன் வேட்பாளராக நானும் போட்டியிட்டேன். அதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். கட்சிக்கு 14,000 வாக்குகள் கிடைத்தன. எனக்கு விருப்ப வாக்குகள் 3001 கிடைத்தன. முதல் விருப்ப வாக்கு எனக்குத்தான். முதன் முதலாக மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன்.

**நீங்கள் முதன் முதலாக தேர்லில் களமிறங்கிய போது அத்தேர்தல் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொண்டீர்கள் என்று கூறுவீர்களா?**

முதலில் எனது நண்பர்களைச் சந்தித்தேன். அவர்கள் தான் எனக்கு பக்கபலமாக இருந்தார்கள். ஆலோசனை வழங்கினார்கள். அதற்கு இணங்க எனது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்தேன். கம்பஹா மாவட்டத்தை மையப்படுத்தி ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து ஒரு துண்டுப் பிரசுரத்தை விநியோகம் செய்தோம். கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 தேர்தல் தொகுதிகளுக்கும் சென்று தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்தோம். கம்பஹா மாட்டத்தில் 90 ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

இம்மாவட்டத்தில் அத்தனக்கல்ல தேர்தல் தொகுதியிலேதான் அதிகளவு முஸ்லிம் வாக்குகள் உள்ளன. இரண்டாவது நீர் கொழும்பு, மூன்றாவது மஹர, நான்காவது வத்தளை, பியகம, மீரிகம, தொம்பே, கட்டான, களனி ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். இப்பிரதேசங்கள் முழுவதும் சென்று பிரசாரங்களை மேற்கொணடேன். இப்பகுதிகளில் இருந்து எனக்கு வாக்குகள் அளித்திருந்தார்கள்.

வெற்றி பெற்ற பின்னர் இப்பிரதேச மக்களுக்கு பாரியளவிலான அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டேன். இந்த ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மாகாண சபையினால் பன்முகபடுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று பல தரப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டேன். மாகாண சபையின் ஊடாக ஏனைய அமைச்சர்களுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று பரந்த மட்டத்தில் முஸ்லிம் கிராமங்களை அபிவிருத்தி செய்ய எனக்கு வாய்ப்பு கிட்டியதை ஒரு வரப்பிரசாதமாகக் கொள்கின்றேன். கம்பஹா மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. அப்பொழுது இருந்த அரசியல்வாதிகள் அக்கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

பாதை அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, கிராமங்களில் காணப்படும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் சீராக மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை. இக்கிராமங்களை மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம், முதல் அமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பரந்த மட்டத்தில் அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேற்கொண்டேன். அவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை தந்தன.

மக்களுக்கு என்னென்ன தேவையோ அத்தனை தேவைகளையும் என்னால் இயன்றளவு கடந்த காலங்களில் நிறைவேற்ற முடிந்தமை மகிழ்ச்சியாக இருக்கிறது. மீரிகம, கள்எளிய போன்ற பிரதேசங்களில் தாய் சேய் மருத்துவ நிலையங்களை நிர்மாணித்துக் கொடுத்துள்ளேன். ஒரு மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கின்ற நிதியை விட மேலதிகமாக இம்மாவட்டத்திலுள்ள அமைச்சர்களுடைய நிதி உதவிகளையும் பொது மக்களின் சமூக நல மேம்பாட்டுக்காக பல உதவிகளையும் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

தனிப்பட்ட தொண்டு நிறுவனங்களின் ஊடாக புதிய பள்ளிவாசல் தோற்றம் பெறுவதற்காக உதவி செய்துள்ளேன். கட்டான என்ற இடத்தில் புதிய பள்ளிவாசல் தோற்றம் பெறுவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளேன். இவ்வாறு ஒவ்வொரு மூளை முடுக்குகளுக்கெல்லாம் சென்று என்னால் இயன்ற பங்களிப்பை இனம் மதம் மொழி பிரதேசம் என்று பாராமல் பாரியளவு சேவையாற்ற முடிந்தது. இதைக் கண்டு ஏனைய அரசியல்வாதிகள் அச்சமுற்று இருந்தார்கள். அதாவது இவர் என்ன இவ்வளவு தூரம் செல்லுகிறார்கள். எப்படிச் செல்லுகிறார் என்று ஆச்சரியத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள். பள்ளிவாசல், விஹாரைகளுக்கு கதிரைகள் வேறு தளபாடங்கள் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறுபட்ட பங்களிப்புக்களைச் செய்து வந்தேன். ஒரு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக இருந்த போதிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் என்று பாராமல் நிறைய உதவிகளைச் கடந்த காலங்களில்செய்துள்ளேன்.

இவற்றுக்கும் மேலாக சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக நிறைய இளம் யுவதிகளுக்கு தையல் பயிற்சிகளை வழங்கி அவர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டுக்கான பங்களிப்பை கடந்த காலங்களில் செய்து கொடுத்துள்ளேன். கேர்ட்டின் தைத்தல், பாடசாலை பேக் தைத்தல், சீமெந்தின் மூலம் பூக்கற்களை வெட்டுதல்,தையல் மெசின் இயந்திரம் வழங்குதல், மேசன், தச்சன் போன்றவர்களுக்கு பயிற்சிகளையும் வழங்கி அதற்குத் தேவையான நிதி உதவிகளையும் பெற்றுக் கொடுத்துள்ளேன். உண்மையிலேயே இதன்மூலமாக 1000 கணக்கான இளைஞர் யுவதிகள் நன்மை அடைந்துள்ளார்கள். இவற்றின் மூலம் பயனடைந்த யுவதிகள் இன்று சிறந்த நிலையில் காணும் போது மனதிற்கு சந்தோசமாக இருக்கின்றது.

ஒரு சிறுபான்மைக் கட்சியின் பிரதிநிதியாக இருந்து கொண்டு எல்லாயின மக்களையும் அரவணைத்துக் கொண்டு அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியினையும் ஏனைய தொண்டு நிறுவனங்களுடைய உதவிகளையும் பெற்று கடந்த காலங்களில் பாரிய பங்களிப்பை கம்பஹா மாவட்டத்தில் செய்துள்ளேன். என்னுடைய முயற்சிகளுக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முதலமைச்சர், மற்றும் மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனது கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு பங்களிப்புச் செய்துள்ளார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நீங்கள் கல்விக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அவை தொடர்பில் கூறுவீர்களா?**

பியகம, மல்வானையில் ஒருவர் பாடசாலையின் அபிவிருத்தி செய்வதற்காக ஒரு காணியை ஒதுக்கி கொடுத்திருந்தார். அது நான்கு ஏக்கர் காணியாகும். நான் அங்கு சென்ற சமயம் என்னிடம் முறையிட்டார். அதனை சென்று பார்த்தோம்.. அந்த இடம் பெரும் காடாக காணப்பட்டது. அப்பொழுது உடனே, முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். அவர் உடன் ஒரு புதிய பாடசாலை ஒன்றை அமைக்க பணிப்புரை வழங்கினார். அந்த இடத்தில் இப்போது முஹ்மூத் என்ற பெயரில் புதிய பாடசாலை திறக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, களனி தேர்தல் தொகுதியில் வெலேகொட என்ற இடத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைக்கு அப்போது விஜயம் செய்தேன். அங்கு மலசல கூடம் சீராக இருக்க வில்லை. அதன் பின்னர் அப்பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்க உதவினேன்.

அதே போன்றுதான், நீர் கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரிக்கு என்னால் நிறையப் பங்களிப்புக்களைச் செய்துள்ளேன். அதாவது, அக்காலத்தில் அப்பாடசாலைக்கு ஒரு கெபினட் அமைச்சர் ஒருவர் வந்தால்தான் பாடசாலைக்கு ஒரு வகுப்பறைக் கட்டிடம் கிடைக்கும். ஆனால் நான் மாகாண சபை உறுப்பினர் ஆன பிற்பாடு அப்பாடசாலைக்குப் புதிய வகுப்பறைக் கட்டடங்களைப் பெற்றுக் கொடுக்கவோ அல்லது வேறு பௌதீக ஆசிரியர் வளங்களைப் பெற்றுக்கொடுக்கவோ என்னால் முடிந்ததை பாக்கியமாக கருதுகிறேன். இதற்கு எனக்கு முன்னாள் மேல்மாகாண முதலமைச்சர் நிறைய உதவிகளை செய்துள்ளார்.

இப்பாடசாலையில் தமிழ், சிங்கம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிப் பிரிவுகளிலும் கல்வி போதிக்கப்படுகின்றன. சிங்கள மொழிப் பிரிவில் ஒரு பழைமை வாய்ந்த கட்டிடத்தை முற்றாக இல்லாமற் செய்து விட்டு புதிய கட்டிடம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு பாடசாலை சமூகம் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி கொண்டிருந்தார்கள். அப்பொழுது அதற்கு அத்திவாரத்தை இட்டு புதிய மாடிக் கட்டிடத்திற்கான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது மாகாண சபை ஊடாக எனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து 80 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்தேன். மாகாண கல்வி அமைச்சின் ஊடாக ஒரு கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா அவருடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெருந்தொகைப் பணத்தை பாடசாலைக்கு ஒதுக்கீடு செய்தார். இப்படி இப்பாடசாலைக்கும்; ஏனைய முஸ்லிம் பாடசாலைகளுக்கும் பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு என்னால் இயன்ற பங்களிப்பு கம்பஹா மாவட்டத்தில் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காக கடந்த காலங்களில் பங்காற்றி வந்துள்ளேன்.

அவை மட்டுமல்ல, இம்மாவட்டத்தில் முஸ்லிம் பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்காக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கும் தோற்றுகின்ற மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகள், க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக சிறந்த வளவாளர்களைக் கொண்டு பரீட்சை வழிகாட்டல் இலவசக் கருத்தரங்குகளை கடந்த காலங்களில் நடத்தியுள்ளேன். தந்தையை இழந்த அநாதைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தல், புலமைப் பரிசில் நிதி உதவிகள், போன்ற கல்வி எழுச்சி நடவடிக்கைகளை கடந்த காலங்களில் ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு படுத்துகிறேன்.









நேர்காணல் இக்பால் அலி

# கிழக்கின் குரல்



## தென்னை மரங்களில் வெண்ணிற ஈ நோய்த்தாக்கம்; செய்கையாளர்கள் பாதிப்பு

(கிண்ணியா மத்திய நிருபர்)



திருகோணமலை மாவட்டத்தில் பல பகுதிகளிலுள்ள தென்னை மரங்களுக்கு 'வெண்ணிற ஈ நோய்த் தாக்கம்' ஏற்பட்டு மூன்று வருடங்களாகியும், இன்னும் அதனுடைய பாதிப்பிலிருந்து மீள முடியவில்லையென தெங்கு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நோய் காரணமாக, கந்தளாய் பிரதேசத்தில் மட்டும் சுமார் 5,000 ஏக்கர் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கந்த ளாய் பேராறு, பேராற்று வெளி வட்டுகச்சி, வான்எல, அக்போபுர, அக்போகம, முள்ளிப் பொத்தானை மற்றும் தம்பலகாமம் போன்ற பகுதிகளில் மூன்று வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் இன்று வரைக்கும் காய் காய்ப்பதில்லையென செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு வகையான கிருமி நாசினிக ள் மற்றும் மருந்துகள் தெளித்தும், இதுவரைக்கும் நோய்த்தாக்கம் குறையவில்லையெனவும் ஒரு மரத்திலிருந்து இன்னும் ஒரு மரத்திற்கு என்றவாறு அடுத்தடுத்து மரங்களுக்கு தாவிச்செல்வதனால், இந்நோயை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு, புதிய தொழில்நுட்ப வழிமுறைகள் அவசியம் என்பதையும் இவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அப்பகுதிக்குச் சென்று பாதிப்புகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கியதாகவும் இதனால் தெங்கு செய்கையாளர்களுக்கு எந்தவொரு முன்னேற்றமும் கிடைக்கவில்லையென அவர்கள் அங்கலாய்கின்றனர். இந்நிலையில் இந்த நோய்த் தாக்கம் காரணமாக தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தென்னையிலிருந்து எதிர்பார்த்த விளைச்சலைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்னை இலைகளின் பச்சையம் இல்லாமல் நாளுக்கு நாள் தென்னை மரங்கள் பழுதடைந்து வருவதுடன் தேங்காய்களின் விளைச்சலும் குறைந்துள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஒரு ஏக்கரில் 1000 முதல் 1500 வரை தேங்காய்களை பறித்த தாங்கள் தற்போது ஐந்நூறு தேங்காய்களை கூட பறிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், தென்னைத் தோட்டத்தில் கடமைபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் தாம் கடன்களை பெற்று, நகைகளை அடகு வைத்து தென்னந்தோட்டத்தை பராமரித்து வருவதுடன், தாம் பெற்ற கடனை மீண்டும் செலுத்துவதற்கு கூட வழியின்றி பெரும் கஷ்டப்படுவதாகவும் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெங்கு செய்கையாளர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## கிழக்கு மாகாண ஆளுநர்– தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி தலைவர் கலந்துரையாடல்



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இந்திய தமிழ்நாடு மாநில பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கே.அண்ணாமலை, இலங்கை தமிழரசுக்கட்சி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் மற்றும் திருகோணமலை தமிழரசு கட்சி நகரசபை பிரதேசசபை தலைவர் உறுப்பினர்களிடையே விசேட கலந்துரையாடலொன்று திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. எதிர்கால அரசியல் களநிலவரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## கதிர்காமம் ஆலய ஆடிவேல் மகோற்சவ கொடியேற்றம்

(காரைதீவு குறூப் நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவ கொடியேற்றம் கடந்த (6) சனிக்கிழமை பஸ்நாயக நிலமே திஷான் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமய தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சரியாக மாலை 5.28 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இனமதபேதமின்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 22ஆம் திகதி வரை மாணிக்ககங்கையில் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அம்பாறை மாவட்டத்தில் பைசல் காசிம் எம்.பியின் நிதி ஒதுக்கீட்டில் புதிய அபிவிருத்தித்திட்டங்கள்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பாலமுனைப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்பட்ட உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (7) பாலமுனைப்பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் எஸ்.எம்.எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் இஸட்.ஏ.எம். அஸ்மிர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் யூ.எல்.ஜௌபர், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஏ.அஸ்லம், ஆசிரியர், ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.எல். சுஹைப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் 1 ஆம் பிரிவுக்கான கிளைக் குழு உறுப்பினர்கள் மகளிர் உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பாலமுனை பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள், பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள், பாலமுனை வைத்தியசாலையிலிருந்து மீனோடைக்கட்டு பிரதான வீதி வரையான தெரு மின் விளக்கு (Street Lamp) பொருத்தும் வேலைகள், சமூக சேவை அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் பாராளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டுள்ளார்.

பாலமுனை பிரதேசத்தில் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப் படாமல் காணப்பட்ட வீதிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாராட்டிக் கௌரவிப்பு

(பாலமுனை விசேட நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் கடந்த மே மாதம் உணவுப் பாதுகாப்பு மாதமாகவும், கடந்த ஜூன் மாதம் 24 - 29 வரை ஒரு வார காலம் கைகழுவுதல் விழிப்புணர்வு வார மாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் கல்முனை பிராந்தியத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் நேற்று பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதுரியா பானு ஆகியோர் இணைந்து பணிப்பாளரை பாராட்டி கௌரவித்தனர். இந்நிகழ்வின்போது பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## கடற்றொழிலாளர்களுக்கு பொருத்து வீடுகள்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் ஊடாக சீனா அரசாங்கத்தினால் 64 பொருத்து வீடுகள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கடற்றொழில் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். சிறிரஞ்ஞன் தெரிவித்தார்.

கல்முனை தொடக்கம் பாணாமை வரையிலுள்ள ஒவ்வொரு மீன்பிடி பரிசோதகர்கள் பிரிவுகள் தோறும் மீனவர்களுக்கு இவ்வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

பிரதேச செயலக பிரிவுகள் தோறும் மீன்பிடி பரிசோதகர்களால் தகமையுடையவர்கள் தெரிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மீனவர்கள் 28 வயதுக்கு மேற்பட்டவராகவும், குடியிருப்பதற்கு சொந்த நிலம் உடையவராகவும், வீடு இல்லாதவராகவும் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களுக்கு சீனா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அரிசி விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சீனா அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 500 வீடுகள், 500 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் 500 மில்லியன் ரூபா பெறுமதியான அரிசி என்பன வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## சீனடி போட்டியில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயம் முதலிடம்

(கிண்ணியா மத்திய நிருபர்)



கிழக்கு மாகாண மட்ட சீனடி போட்டியில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய சீனடி குழுவினர் முதலிடத்தைப் பெற்று, தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றுக்கொண்டனர்.

முஸ்லிம் சமய, கலாசார, அலுவல்கள் திணைக்களத்தினால், கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே கடந்த 6ஆம் திகதி காத்தான்குடியில் நடாத்தப்பட்ட கலாசார போட்டியிலேயே வெற்றி பெற்றுள்ளனர்.

வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட இந்த அணியை, தேசிய மட்டம் வரை கொண்டு சென்ற, பயிற்றுவிப்பாளரான மகாமாறு சீனடி சங்கத் தலைவர் முகம்மது ராஃபிக்கும், இதற்காக உழைத்த ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் அதிபர் எம். எஸ். அஹமட் ராஜி தெரிவித்துள்ளார்.

## கௌரவிப்பு விழா

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)



க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி உயர்தொழில் நுட்ப பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவி இஸ்ரா ஹஸ்பாணியை கௌரவிக்கும் நிகழ்வு மஹ்மூத் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் எம். எஸ்.ஏ.சஹ்துல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரன் கலந்து கொண்டார்.

இதேவேளை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்ற இன்னொரு மாணவி எம்.என்.எப் பத்தூனா மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

## கிழக்கு மாகாண ஆளுநரின் மூதூர் பிரதேச விசேட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

(தோப்பூர் குறூப் நிருபர்)



கிழக்கு மாகாண ஆளுநரின் மூதூர் பிரதேச விசேட ஒருங்கிணைப்பாளராக றியால் முகம்மது றிழ்வான் அண்மையில் ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமனம் செய்யப்பட்டார்.

பிரதேசங்களின் அபிவிருத்திகள் மற்றும் காணி உரிமைகளை வழங்குதல் உள்ளிட்ட விசேட செயற்றிட்டங்களை பிரதேச ரீதியாக திறம்பட முன்னெடுக்கும் நோக்குடன் ஒவ்வொரு உள்ளூர் ஆளுகை பகுதிகளிலும் இணைப்பாளர்களை நியமிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

றியால் முகம்மது றிழ்வான் இலங்கை ஆசிரிய சேவையில் நீண்ட காலமாக ஆங்கில மொழி ஆசிரியராக பணியாற்றி வந்ததுடன், மனிதவள முகாமைத்துவத்துறையில் வணிக மேலாண்மை இளங்கலைப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், இவர் கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சமூக வலைத்தள இணைப்பாளராகப் பணியாற்றியதுடன், தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## கல்முனையில் இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் மீண்டும் இணைக்கும் திட்டம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் கட்டாயக் கல்விக் குழு, வலயக்கல்வி அலுவலகம், அம்பாறை மாவட்டச் செயலகம், கல்முனை பிரதேச செயலகம், கல்முனை தெற்குப் பொதுச்சுகாதாரப் பணிமனை, மற்றும் கல்முனைப் பொலிஸ், கிராம சேவகர்கள் இணைந்து பாடசாலையில் இடைவிலகிய மாணவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களை மீண்டும் பாடசாலைக்கு இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்தின் நெறிப்படுத்தலின் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனடிப்படையில் பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் சந்தித்து, உரையாடி அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்து மீண்டும் பாடசாலையில் இணைந்து கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களையும் மேற்கொண்டனர். குடும்ப வறுமை காரணமாகவே அதிகமான மாணவர்கள் பாடசாலை கல்வியிலும் இடைவிலகியுள்ளமை தெரியவந்துள்ளது.

# பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை விட்டு வெளியேறினார்

சாவகச்சேரி விசேட, யாழ். விசேட நிருபர்கள்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா நேற்று (08/07) திங்கட்கிழமை மதியம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை விட்டு (இரு நாட்கள்) தற்காலிகமாக வெளியேறி கொழும்பிற்கு சென்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் கடந்த சில நாட்களாக பெரும் பூதாகரமாக வெடித்திருந்தது.

வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் பதவியில் இருந்து வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் தொடர்ச்சியாக நடைபெற்றது. இக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக சாவகச்சேரி நகர்ப்பகுதிகளில் கடைகள், பொதுச்சந்தை மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஒருபுறம் மக்கள் போராட்டம் இடம்பெற, மறுபுறம் பதில் வைத்திய அத்தியட்சகரை வெளியேற்றுவதற்கான காய் நகர்தல்கள் இடம்பெற்றிருந்தன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகரை மாற்றக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை வைத்தியர்கள் வைத்தியசாலைக்கு வருகை தந்து தமது கடமைகளை ஆரம்பித்துள்ளதுடன், தற்போது வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரணவின் கட்டுப்பாட்டில் வைத்தியசாலை இயங்க ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் பதில் வைத்திய அத்தியட்சகரை பேச்சுவார்த்தைக்காக கொழும்பிற்கு அழைத்திருந்த நிலையில் இருநாள் விடுமுறையில் கொழும்பிற்கு சென்று மீண்டும் வருவேன் என மக்களிடம் உறுதியளித்து வெளியேறிச் சென்றுள்ளார்.



இது தொடர்பாக பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கருத்துத் தெரிவிக்கையில்; வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்னை வைத்தியசாலையை விட்டு வெளியேறுமாறே கூறியுள்ளார்.

ஆனால், இவ் விடயம் தொடர்பாக பாராளுமன்றில் பேசி முடிவெடுக்கப்படவுள்ள நிலையிலும் என்னோடு பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தும் முகமாகவுமே என்னை கொழும்பிற்கு அழைத்துள்ளனர்.

நான் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராகவே கொழும்பு சென்று வரவுள்ளேன்.

ஆனால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தானே வைத்திய அத்தியட்சகர் எனத் தெரிவிக்கின்றார்.

அந்த முடிவை நீதிமன்றம் தான் எடுக்க வேண்டும்.

தற்போதும் சட்டப்படி நானே பதில் வைத்திய அத்தியட்சகர். எனவே மக்கள் பதற்றமடையவோ குழப்பமடையவோ தேவையில்லை. மக்கள் என் மீது வைத்த அன்புக்கு நன்றி. மீண்டும் வருவேன்.


என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனாவின் உறுதிமொழியை ஏற்ற பொதுமக்கள் வைத்தியரை வழியனுப்பியதுடன் போராட்டத்தையும் நிறைவுக்கு கொண்டு வந்திருந்தனர்.

## வடக்கின் உதயம்

# கண் திறந்த அம்மன் சிலை ஆச்சரியத்தில் பக்தர்கள்

ஓமந்தை விஷேட நிருபர்



முள்ளியவளை கணுக்கேணி பகுதியிலுள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில் இருந்த அம்மன் சிலையானது ஒரு கண் திறந்ததாக வெளியாகியுள்ள தகவல் பக்தர்களிடையே ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் அமைந்துள்ள கற்பக பிள்ளையார் ஆலயத்திலுள்ள அம்மன் சிலையானது வழமையாக மூடிய நிலையிலுள்ள கண்களையுடைய சிலையாகவே காணப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (07) காலை திடீரென அந்த சிலையிலுள்ள ஒரு கண் திறந்த நிலையிலும் மற்றைய கண் மூடிய நிலையிலும் மனித கண்களை ஒத்த நிலையில் அம்மன் சிலை காணப்படுகின்றது.

இதனை பிரதேசவாசிகள் அதிசயத்துடனும், பக்தி பரவசத்துடனும் பார்த்து வருகின்றனர்.

# மன்னார் மருதமடு சிறிய குருமட உதவி இயக்குனர் அருட்பணி ஜொணார்த்தன் அகால மரணம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு சிறிய குருமட உதவி இயக்குனர் அருட்பணி கீ.ஜொனார்த்தன் கூஞ்ஞ அடிகளார் (வயது 31) விபத்துக்குள்ளாகி அகால மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் ஞாயிறிறுக்கிழமை (07.07.2024) மாலை 7 மணியளவில் தலைமன்னார் மன்னார் பிரதான வீதியில் தலைமன்னார் பொலிஸ் பிரிவில் கட்டுக்காரன் குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரானையில் தெரியவருவதாவது மரணத்தை தழுவிக் கொண்ட அருட்பணியாளர் சம்பவம் அன்று அவரின் சொந்த கிராமமாகிய தலைமன்னார் கிராமத்தில் திவ்விய நற்கருணை விழா கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பின் தலைமன்னாரிலிருந்து மன்னார் குருமடத்துக்கு திரும்பிச் சென்றபொழுதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டாக்காலி கால்நடை வீதிக்கு குறுக்கே பாய்ந்தபோதே இவ் அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர் விபத்து நடந்த இடத்திலேயே மரணத்தை தழுவிக் கொண்டதாகவும் இவர் வீதியில் கிடக்கக் கண்டவர்களே தலைமன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் சடலத்தை தலைமன்னார் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பாக தலைமன்னார் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அகால மரணமடைந்த அருட்தந்தை அருட்பணி கீ.ஜொனார்த்தன் கூஞ்ஞ அவர்கள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் 16.06.2022 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

இவர் மருதமடு அன்னையின் திருத்தளத்தில் பரிபாலகருக்கு உதவியாளராசவும் பின் மன்னார் மறை மாவட்டத்தின் மருதமடு சிறிய குருமடத்தின் உதவி இயக்குனராகவும் இவர் தனது குருத்துவ வாழ்வில் கடமைபுரிந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது மரண சடங்குகள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் விடுத்திருந்த செய்தியில், திங்கள் கிழமை (08) பிற்பகல் 1.30 மணிக்கு அமரர் அருட்பணியாளரின் பூதவுடல் மன்னார் பொது வைத்தியசாலையிலிருந்து மன்னார் ஆயர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு,

அங்கு பிற்பகல் 7 மணிக்கு இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு,

பின் ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் செவ்வாய் கிழமை (09) காலை 7 மணிக்கு இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்கான இரங்கல் திருப்பலியும் இதைத் தொடர்ந்து காலை 7.45 மணிக்கு இவரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

காலை 8.15 மணியிலிருந்து பிற்பகல் 2.45 மணிவரை பொது மக்களின் அஞ்சலிக்காக அருட்பணியாளரின் பூதவுடல் வைக்கப்படும்.

இதைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் கூட்டு இரங்கல் திருப்பலி அங்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

பிற்பகல் 5 மணிக்கு பேராலயத்திலிருந்து சேமக்காலைக்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு 5.45 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும் என குருமுதல்வர் தெரிவித்துள்ளார்.

# உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



(யாழ்.விசேட நிருபர்

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் வதிவிட பிரதிநிதி திரு. அப்துள் ரகீம் சித்திக் உத்தியோகபூர்வ விஜயமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபனை நேற்றைய தினம் வியாழக்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது, உலக உணவுத் திட்டத்தின் "Food for Assets" செயற்றிட்டத்தின் விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் (நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய்) " Food for Assets" செயற்றிட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை செயற்படுத்தல் குறிப்பாக குளங்கள் கால்வாய்களை புனரமைத்தல் தொடர்பாகவும் செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு

# உடற்கல்விக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு தயவுக்காலமாக ஒரு வருடத்தை வழங்குக

யாழ். மாவட்ட உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கோப்பாய் குறூப் நிருபர்

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு தயவுக்காலமாக ஒரு வருடத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்த கடிதத்தில், தற்போது, தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு 2021, 2022ஆம் ஆண்டுகளில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

ஏனைய பாடங்கள் இசற் புள்ளி அடிப்படையில் உள்வாங்கப்படும் நிலையில் உடற்கல்வி பாடத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் நேர்முக பரீட்சையில் விளையாட்டு நிகழ்வில் பங்கேற்ற சான்றிதழ்களின் அடிப்படையில் உள்வாங்கப்படுகின்றனர்.

தற்போது கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களின் சான்றிதழ் காலம் 2017.01.01 2021.12.31 வரையும், 2022 மாணவர்களின் சான்றிதழ் காலம் 2018.01.01 2022.12.31 வரையும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்று பரவலால் 2020, 2021ஆம்

ஆண்டுகளில் விளையாட்டு நிகழ்வுகள் பல நடைபெறவில்லை. எனவே, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தற்போது கல்வியியல் கல்லூரிகளுக்கு உடற்கல்வி பாடத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு சான்றிதழ்களையும் 2022 மாணவர்களுக்கு 2017 ஆண்டு சான்றிதழ்களையும் பயன்படுத்த ஒரு வருட மேலதிக தயவுக்காலத்தை வழங்க வேண்டும் எனக் கோருகின்றோம் என்ற கோரிக்கையை விடுத்துள்ளனர்.

# துணுக்காய் கோட்ட பாடசாலை மாட்ட போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலம் முதலிடம்!

(புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட தடகள விளையாட்டு போட்டி கடந்த 03.07.2024 தொடக்கம் 04.07.2024 வரை மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது இப்போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலயம் அதிகூடிய புள்ளிகளை பெற்று கோட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளது.

யோகபுரம் ஆரம்ப பாடசாலை 5 புள்ளிகளையும், மயில்வாகனம் தமிழ்வித்தியாலயம் 2.5 புள்ளிகளையும், அனஞ்சயன்குளம் தமிழ்கலைவன் வித்தியாலயம் 37 புள்ளிகளையும், ஜயன்கன்குளம் மகாவித்தியாலயம்103 புள்ளிகளையும், தேறாஞ்கண்டல் அ.த.க.பாடசாலை 84 புள்ளிகளையும், துணுக்காய் அ.த.க பாடசாலை 17 புள்ளிகளையும், தென்னியன்குளம் அ.த.க.பாடசாலை 44 புள்ளிகளையும், யோகபுரம் மகாவித்தியாலயம் 404 புள்ளிகளையும், மல்லாவி மத்தியகல்லூரி 385.5 புள்ளிகளையும், கோட்டைகட்டியகுளம் மகாவித்தியாலம் 42 புள்ளிகளையும், கல்விளான்குளம் மகாவித்தியாலம் 18 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

# மன்னார் வங்காலை கடற்கரையில் 2,888 கிலோ பீடி சுற்றும் இலைகளுடன் மூன்று நபர்கள் கைது

(மன்னார்குறூப்நிருபர்)

வங்காலை கடற்கரையில் நேற்று திங்கட்கிழமை காலையில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் ஒரு தொகுதி பீடி இலைகள் கொண்ட மூடைகளோடு, மூன்று சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வங்காலை கடற்கரையில் வைத்து ஒரு தொகுதி பீடி இலைகள் கொண்ட பொதிகள் ஏற்றப்படுவதாக கடற்படையினர் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

குறித்த தகவல்களுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ. எஸ்.சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத்தின் வழி நடத்தலில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சில்வா தலைமையில் சென்ற குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வங்காலை கடற்கரையில் வாகனம் ஒன்றில் பொதி செய்யப்பட்ட பீடி இலைகள் ஏற்றப்பட்ட நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 888 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டதோடு மன்னார் பகுதியைச் சேர்ந்த 3 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மீட்கப்பட்ட பீடி இலை மூடைகள், வாகனம் மற்றும் கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்கள் வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வங்காலை பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபர்களையும், மீட்கப்பட்ட பொருட்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக தெரியவருகிறது.

# மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இலத்திரனியல் வகுப்பறைகள் திறந்து வைப்பு

(மன்னார் குறூப்நிருபர்)

எதிர்கட்சி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச அவர்களின் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான இலத்திரனியல் மூல வகுப்பறை (SMART CLASS ROOM) கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்றைய தினம் (8) திங்கட்கிழமை இடம் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது தாழ்வுபாடு, தாராபுரம் மற்றும் சித்திவிநாயகர் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட குறித்த இலத்திரனியல் மூல வகுப்பறை (SMART CLASS ROOM) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளது.



எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் இணைந்து குறித்த SMART வகுப்பறைகளை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

மேலும் குறித்த பாடசாலைகளின் நூலகங்களுக்கு தேவையான ஒரு தொகுதி ஆங்கில புத்தகங்களை வழங்கி வைத்ததோடு, புதிய நூல்கள் கொள்வனவு செய்ய தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கி வைக்கப்பட்டது.

# உலகின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஈரான் ஜனாதிபதியாக பெசஸ்கியான் தெரிவு


வெற்றி பெற்ற மசூட் பெசஸ்கியான்

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதியாக அந்நாட்டின் முன்னாள் சுகாதார அமைச்சரும், இருதய சத்திர சிகிச்சை நிபுணருமான மசூட் பெசஸ்கியான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் கடந்த 05.07.2024 அன்று நடைபெற்ற ஈரானின் ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாம் சுற்றில் மசூட் பெசஸ்கியான் 16.3 மில்லியன் வாக்குகளைப் பெற்றுள்ளதோடு, அவர் பெற்ற வாக்கு வீதம் 54.76 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. அதற்கேற்ப ஈரானின் ஜனாதிபதியாக மசூட் பெசஸ்கியான் தெரிவு செய்யப்பட்டள்ளார்.

ஈரானின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த இப்றாஹீம் ரைசி கடந்த மே மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் மரணமடைந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அந்நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் முதலாவது உதவி ஜனாதிபதி முஹம்மட் முக்பர் பதில் ஜனாதிபதியாக பதவியை ஏற்றார்.


இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்ட ஷஹீட் ஜலீலி

ஈரானின் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதியொருவர் திடீரென மரணமடைந்தால் அல்லது பதவி விலகினால் அந்த நாளில் இருந்து 50 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும்.

அந்த வகையில் இப்றாஹீம் ரைசியின் மரணத்தினால் ஈரானில் உரிய காலத்திற்கு முன்னர் தேர்தல் நடாத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இல்லாவிட்டால் 2025 தான் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டிருக்கும்.

ஈரானிய அரசியலமைப்பின் 114 ஆவது ஷரத்தின்படி நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை மக்கள் வாக்களிப்பின்படி ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

ஜனாதிபதி ரைசியின் மறைவைத் தொடர்ந்து ஈரானின் 14 ஆவது ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஜுன் 28 ஆம் திகதி முன்கூட்டியே நடாத்தப்பட்டது. அத்தேர்லில் போட்டியிடவென நான்கு பெண்கள் உட்பட 80 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் முன்னாள் ஜனாதிபதி அஹமதி நெஜாத்தி உள்ளிட்டவர்களும் அடங்கியிருந்தனர்.

எனினும் உச்ச சபை 06 பேரையே இத்தேர்தலில் போட்டியிடத் தெரிவு செய்தது. ஏனைய அனைவரும் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

இத்தேர்தலில் போட்டியிடவென தற்போதைய சபாநாயகர் முஹம்மட் பாஹர் கலிப், உதவி ஜனாதிபதி அமீர் ஹொசைன் காசிசாதேஹ் காசேமி, அணுசக்தி தொடர்பான முன்னாள் பிரதம ஏற்பாட்டாளர் ஷஹீட் ஜலீலி, முன்னாள் சுகாதார அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் மசூட் பெசஸ்கியான், முஸ்தபா பௌர்முஹம்மடி, தெஹ்ரான் மேயர் அலிரெசா சக்கானி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் தெஹ்ரான் மேயர் அலிரெஸா சக்கானியும் அமிர் ஹுசெய்ன் காசிசாதே ஹாசெமியும் தேர்தலுக்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தேர்தலில் இருந்து வாபஸாகினர். அதனால் 28 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் நால்வர் மாத்திரமே போட்டியிட்டனர்.



40 சதவீதத்தினர் மாத்திரமே இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் குறைந்த வாக்கு வீதம் பதிவான இராண்டாவது தேர்தலாக இத்தேர்தல் பார்க்கப்படுகிறது.

என்றாலும் இத்தேர்லில் 10.41 மில்லியன் வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்தை மசூட் பெசஸ்கியான் பெற்ற போதிலும் அவர் பெற்ற வாக்கு வீதம் 42.5 வீதம் ஆகும்.

இரண்டாம் இடத்தை பெற்ற ஷயீட் ஜலீலி 9.47 மில்லியன் வாக்குகளை பெற்றுள்ள போதிலும் அவர் பெற்ற வாக்குவீதம் 38.6 சதவீதமாகும். மூன்றாம் இடத்தைப் பெற்ற பஹர் கலிபாப் 3.38 மில்லியன் வாக்குகளையும் நாலாம் இடத்தைப் பெற்ற முஸ்தபா பொருமுஹம்மதி 206,397 வாக்குகளையும் பெற்றனர்.

ஈரானின் அரசியலமைப்பின் பிரகாரம் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்கு பெறுபவரே ஜனாதிபதியாகத் தெரிவாவார். ஆனால் இத்தேர்தலில் எவரும் 50 சதவீதத்திற்கு மேல் வாக்கு பெறாத காரணத்தினால் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு கடந்த 05 ஆம் திகதி (ஜுலை) நடத்தப்பட்டது.

இத்தேர்தலில் முதலாம் சுற்று வாக்களிப்பில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் மசூட் பெசஸ்கியான் 16.3 மில்லியன் வாக்குகளைப் பெற்றுள்ளதோடு அவர் பெற்ற வாக்கு வீதம் 54.76சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அதற்கேற்ப ஈரானின் ஜனாதிபதியாக மசூட் பெசஸ்கியான் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஈரானிய உள்துறை அமைச்சு சனியன்று அறிவித்தது.

இரண்டாம் இடத்தை ஷஹீட் ஜலீலி பெற்றுள்ளார். அவர் 13.5 மில்லியன் வாக்குகளைப் பெற்றுள்ளதோடு அவர் பெற்றுள்ள வாக்குவீதம் 45.24 சதவீமாகும்.


மர்லின் மரிக்கார்

## புத்தலவில் பாரிய ஐஸ் போதைப்பொருள் வர்த்தகம் சுற்றிவளைப்பு ; ஒருவர் கைது

(ஊவா சுழற்சி நிருபர்)

புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய போதைப்பொருள் வர்த்தகம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் புத்தல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் மாலை புத்தல திக்கல் யாய, பாடசாலை மாவத்தை உடகம பிரதேசத்தில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.


அதற்கமைய பாரியளவிலான ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபரொருவரை பொலிஸார் கைது செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

இருபது கிராம் 300 மில்லிகிராம், ஐஸ் போதைப்பொருள், ரூ.40,000 ரொக்கப்பணம் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலில் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் லொறி, முச்சக்கர வண்டி ஒன்று மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸ் உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புத்தல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



சந்தேகநபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். இச்சுற்றிவளைப்பு மொனராகலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். புத்தி உடுகமசூரிய தலைமையில் இடம்பெற்றது.




## தம்புள்ளையில் நடமாடும் சேவை



ரங்கிரி தம்புள்ளை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் கிராமத்துக்கான கூட்டுறவு ஆணைக்குழு எனும் தொனிப்பொருளில் நடமாடும் சேவையொன்று கூட்டுறவு நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது மாத்தளை மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவு நிலையங்களில் தற்காலிகமாக சேவையாற்றி வரும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமன கடிதம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

(படம்:மாத்தளை சுழற்சி நிருபர்)

## தேசிய மீலாத் விழா முன்னாயத்த கூட்டம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

தேசிய மீலாத் விழா வைபவத்தை சிறப்பாக கொண்டாடும் நோக்கத்தில் விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் இரத்தினபுரி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் அதிகாரிகள், இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். தேசிய மீலாத் விழாவை எங்கு, எவ்வாறு நடத்துவது குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. இறுதியில் இவ்வருட தேசிய மீலாத் விழாவை இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இ/அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடாத்த ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் தேசிய மீலாத் விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்குறணை தீ விபத்து; சம்பவ இடத்துக்கு ரவூப் ஹக்கீம் எம்.பி விஜயம்



(அக்குறணை குறூப் நிருபர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அக்குறணைக்கு விஜயம் செய்து தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

அக்குறணை நகரில் பாரிய தீ விபத்தில் எரிந்து நாசமான மிலானோ உணவகம் மற்றும் வெதுப்பக கட்டடத்தையும் அதன் அண்மித்த பிரதேசங்களையும் பார்வையிட்டார்.

சம்பவம் பற்றி கேட்டறிந்து கொண்டதுடன் தொடர்புடையவர்களுடன் கலந்துரையாடினார். அதுமட்டுமின்றி இதுதொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர் கலந்துரையாடினார்.


ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005/2006ம் வருட முகாமைத்துவ பீட மாணவர்கள் ஊடாக நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கஷ்ட பிரதேச பாடசாலையான தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## சீரற்ற காலநிலை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(மஸ்கெலியா தினகரன் நிருபர்)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள மேற்கு சரிவு பகுதிகளில் தொடர்ந்து கனத்த மழை பெய்து வருகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கபட்டுள்ளது. பண்ணையாளர்கள், பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர்.

நகரிலுள்ள பாடசாலைகளின் மாணவர் வரவு குறைவாக காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நீரேந்தும் பிரதேசங்களின் நீர்மட்டம் அதிகரித்துவருகின்றது.

குறிப்பாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. காசல் ரீ, கென்யோன், லக்சபான, நவலக்சபான, ,பொல்பிட்டிய, கலுகல , விமலசுரேந்திர, மேல் கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துவருகின்றது.

மலையக பகுதிகளிலுள்ள அனைத்து ஆறுகள், அருவிகள், ஓடைகளில் கனத்த மழை காரணமாக நீரின் வரத்து அதிகரித்துள்ளது.

கடும் குளிரான காலநிலையும் காணப்படுகின்றது.

இப்பகுதியில் அதிக அளவில் பனிமூட்டம் காணப்படுவதால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு ஹற்றன் வலய போக்குவரத்து பொலிஸ் அதிகாரி பணித்துள்ளார்.

## நுவரெலியாவில் விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு



நாட்டில் மீண்டும் புதிய திட்டத்துடன் விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான 'யுக்திய' என்னும் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நுவரெலியா மஹிந்த மாவத்த பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவுடன் இச்சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா நகரில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரதான நகரில் சந்தேகத்துக்கிடமாக நடமாடுபவர்களையும் அவர்கள் கொண்டு செல்லும் பொதிகளையும் அடிக்கடி பரிசோதனை செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


மாத்தளை இந்து தேசிய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாணவர்களின் நலன் கருதி சுமார் ரூ.50 இலட்சம் பெறுமதியான பஸ்வண்டி பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் அன்பளிப்பு செய்யப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம் : மாத்தளை சுழற்சி நிருபர்)


கண்டி நகரின் அருகாமையில் அமைந்திருக்கும் "சுதும்பொல" என்னுமிடத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படம் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# நகர்வலம்



# நாட்டில் ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் கல்வித்துறையை முன்னேற்ற உழைத்துள்ளது

## தர்கா நகரில் அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

(பேருவளை விசேட நிருபர்)





கல்விப் புரட்சி மூலமே நாட்டிலும் சமூகத்திலும் பாரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் கல்வித்துறையை முன்னேற்ற உழைத்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தர்கா நகரில் தெரிவித்தார்.

தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலயத்தின் 125ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை வரலாறு தொடர்பான தகவல்கள் அடங்கிய அல் ஹம்ரா ஒளிக்கீற்று வீடியோ "Revisiting our roots 125 Anniversary Documentary Screening" ALHAMRA RAY OF LIGHT" வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் பஸ்லியா பாஸி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் அலிசப்ரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அலி ஸப்ரி ஸ்மார்ட் வகுப்பறை ஆரம்பிக்க ஆவணத்தை அதிபரிடம் கையளித்ததோடு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் இரண்டு மில்லியன் ரூபாவையும், டாக்டர் ரூமி ஹாஷிம் 5 லட்சம் ரூபாவையும் இதன் போது பாடசாலைக்கு அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல்,ரூமி ஹாஷிம் கல்வி நிலைய ஸ்தாபகர் டாக்டர் ரூமி ஹாஷிம் ஆகியோர் விழாவில் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மேலும் கூறியதாவது; கூடுதலான நேரத்தை கல்விக்காக செலவிட்டு தலைசிறந்த புத்திஜீவிகளை சமூகத்திற்கு பெற்றுக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும். கல்வியின் மூலமே சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம்.

தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலயம் சமூகத்திற்கும், நாட்டிற்கும் சிறந்த அறிவாளிகளை உருவாக்கிய பாடசாலை ஆகும். இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு என்னால் முடியுமான உதவிகளை செய்வேன். அனைவரும் ஒன்றுபட்டு பாடசாலையை மேலும் கட்டியெழுப்ப உழைக்க வேண்டும். களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கும், முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கும் 300 மில்லியன் செலவில் புதிய கட்டிடங்களை நிர்மாணித்து கொடுக்கவுள்ளேன்.

அரசாங்கம் கல்விக்காக கூடிய நிதியை வருடா வருடம் ஒதுக்கி வருகிறது. நாட்டில் கல்விப் புரட்சியின் ஊடாகவே மறுமலர்ச்சியை தோற்றுவிக்க முடியும். நாடு சுதந்திரம் அடைந்த பின் கல்வியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது என்றார்.

## ஹாசிம் உமர் பவுண்டேஷனின் மடிக்கணனி வழங்கும் நிகழ்வு



புத்தளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய 'வெய்த்துயித்தல்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் புத்தளம் தில்லையாடி எம்.எஸ்.பாத்திமா சமாஹாவுக்கு மடி கணனி வழங்கி வைக்கப்பட்டது. ஹாசிம் உமர் பவுண்டேஷனினால் தற்போது நாடு பூராகவும் வழங்கப்பட்டு வரும் வசதி குறைந்த மாணவர்களுக்கான மடிக்கணனி வழங்கும் திட்டத்தில் புத்தளம் மாணவிக்கு இந்த மடிக்கணனி அவரினால் வழங்கப்பட்டது. படத்தில் நூலாசிரியர் நிஹ்ரி, தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் கலைஞர் இளங்கோ ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: புத்தளம் விசேட நிருபர்)

## முதலை தாக்கி ஒருவர் பலி

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் முதலைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக கதிர்காமம் பொலிஸார் (07) தெரிவித்தனர். இந்த நபர் மாலையில் யானைகள் குளிக்கக் கூடிய பிரதேசத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது முதலையின் தாக்குதலுக்குள்ளாகி முதலையினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவரின் சப்தத்தினைகேட்ட அருகில் இருந்தோர் பிரதேசத்திற்கு வருகைதந்து பார்க்கும்போது, முதலை இழுத்து செல்வதினை அவதானித்துள்ளனர்.

## ஹம்பாந்தோட்டை இக்ராவில் முஹர்ரம் புதுவருட நிகழ்வு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

இஸ்லாமிய புது வருடமாகிய முஹர்ரம் மாத புது வருடத்தினை முன்னிட்டு முஹர்ரம் புது வருட நிகழ்வு ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையில் நேற்று (08) நடைபெற்றது.

மாணவர்களுக்கு முஹர்ரம் இஸ்லாமிய புது வருடத்தின் தோற்றம் மற்றும் சிறப்புக்கள் தொடர்பாக ஆசிரியை எம். எம். எப். சிஹாரா விசேட உரையினை நிகழ்த்தியதோடு மாணவர்களது முஹர்ரம் புது வருடம் தொடர்பான நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன்போது மாணவர்களுக்கு இனிப்புகளும் பரிமாறப்பட்டன.



களுத்துறை மாவட்ட செயலாளராக நியமனம் பெற்றுள்ள இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ஜனக கே குணவர்தன மாவட்ட செயலகப் பணிமனையில் அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். மாவட்ட செயலக அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர். சமய நிகழ்வுகளும் இடம்பெற்றன.
(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## அநுராதபுரம் மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கு மூன்று வார பயிற்சி

திறப்பனை தினகரன் நிருபர்





அநுராதபுரம் மாவட்டத்திற்கு புதிய கிராம உத்தியோகத்தர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட (2024 ஆம் ஆண்டின்) 71 புதிய கிராம உத்தியோகத்தர்களின் மூன்று வார பயிற்சித் திட்டம் அண்மையில் நிறைவடைந்தது. இப்பயிற்சிக் காலத்தில் பொது சேவையின் பல்வேறு துறைகள் குறித்து தேவையான பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

பயிற்சியின் முடிவில் கலந்து கொண்டு உரையாற்றிய அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜெயசுந்தர; பல்வேறு துறைகளில் எத்தனை பயிற்சிகள் அளிக்கப்பட்டாலும், உரிய துறைகளில் நடைமுறைக் கடமைகளைப் பெறும் நீங்கள் தொழில் வாழ்க்கையில் மேலும் மேலும் வெற்றி பெற வேண்டும். அத்துடன் உங்கள் அறிவை குறிப்பிட்ட துறையுடன் சேர்த்து எல்லா துறைகளிலும் நீங்கள் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் ஷமிலா விக்கிரமாரச்சி, உதவி மாவட்ட செயலாளர் பிரசன்ன யசரத்ன, பிரதம உள்ளக கணக்காய்வாளர் எல்.எல்.பதிராஜா, உதவி தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தன், மாவட்ட பொறியியலாளர் எம்.எம்.பி.தில்ஹானி, மிஹிந்தலை உதவி பிரதேச செயலாளர் எம்.எம். கே.சந்திரகுப்தா, அனர்த்த உதவி பணிப்பாளர் சனத் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தேசிய அங்கத்தவர் மாநாடு கொழும்பில்

ருஸைக் பாரூக்







இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தேசிய அங்கத்தவர் மாநாடு “விழுமிய வாழ்வு, வளமிகு நாடு” எனும் கருப்பொருளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எச். எம் உஸைர் (இஸ்லாஹி) தலைமையில் நடைபெற்ற இம்மாநாடு மூன்று அமர்வுகளைக் கொண்டிருந்தது.

பிரமுகர் அமர்வில் வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமத், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பவ்ஸி, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகிய அரசியல் தலைவர்கள் உட்பட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித், தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, வல்பொல ராஹூல நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி கல்கந்தே தம்மானந்த தேரர், சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் வின்யா ஆரியரத்ன, பேராதனை பல்கலைக்கழக ஆங்கில துறைப் பேராசிரியர் சுமதி சிவமோகன், தேசிய சமாதான கவுன்சிலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா ஆகிய பிரமுகர்களும் ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பிலிருந்து எம்.எச்.எம். அஸ்மி, மௌலவியா நஜ்முன் நிஸா ஆகியோரும் உரையாற்றினர்.

வரவேற்புரையை ஜமாஅத்தின் நிறைவேற்று நிர்வாக சபை உறுப்பினர், திஹாரிய தன்வீர் அகடமியின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.டீ. அப்துர் ரஹ்மான் (நளீமி) நிகழ்த்த நன்றியுரையை உதவிப் பொதுச் செயலாளர் எம்.எச்.எம். ஹஸன் நிகழ்த்தினார்.

## பொல்கஹவெல அல் இர்பானில் அடிக்கல் நாட்டு விழா



பொல்கஹவெல அல் இர்பான் மத்திய கல்லூரியின் நீண்ட காலத் தேவையாக இருந்த இருமாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) அதிபர் எம் அஸ்மி ஜவஹர் சாவின் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது. இவ்விருமாடி கட்டடத்திற்கான நிர்மாணப்பணிகள் குவைத் தூதரகத்தின் கீழ் செயற்படும் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகளின் பணிப்பாளர் அஷ்ஷேஹ் எம். எம். ஏ. நூருல்லாஹ் நளீமியின் பங்களிப்புடன் இடம் பெறுகின்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குவைத் தூதுவரின் பிரதிநிதியாக அஷ்ஷேஹ் எம் ஃபிர்தௌஸ் நளீமி கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக அல்ஹிமா பணிப்பாளர் அஷ்ஷேஹ்.எம்.எம். ஏ நூருல்லா, நிறுவனத்தின் துணைச் செயலாளர் ஏ. ஆர். ஏ அமீனுதீன், குருநாகல் போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஷாபி சிஹாப்தீன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## அல்–ஹுதா குர்ஆனிய பாடசாலை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



புத்தளம் தினகரன் நிருபர்

நுரைச்சோலை அல்ஹுதா குர்ஆன் பாடசாலையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் (05) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வைபவ ரீதியாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக புத்தளம் அப்துல் மஜீத் அகடமியின் பணிப்பாளரும், ஆத்மீக ஒருமைப்பாட்டு நிலையத்தின் பணிப்பாளருமாகிய அஷ்ஷைக் எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி) கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தினார்.

குறித்த குர்ஆன் பாடசாலையின் தலைவர் அஷ்ஷெய்க் ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பணிப்பாளர் சபைத் தலைவர் அஷ்ஷெய்க் சகீன், உட்பட முக்கிய பிரமுகர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், வர்த்தகர்கள் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பாணந்துறையில் பஹன மீடியாவின் ஊடக செயலமர்வு நாளை ஆரம்பம்

பஹன மீடியா நிறுவனத்தின் பஹன மீடியா அகடமியின் டிஜிட்டல் ஊடக செயலமர்வு நாளை 10 ஆம், மறுநாள் 11 ஆம் திகதிகளில் பாணந்துறை பள்ளிமுல்ல அஸ்வர் ஹாஜியார் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மோஜோ ஊடகவியல், செயற்கை நுண்ணறிவு நுட்பங்கள், சமூக ஊடக நுட்பங்கள் என்பன தொடர்பில் நடாத்தப்படவிருக்கும் இச்செயலமர்வுக்கு திஹாரிய சுமையா அரபுக் கல்லூரி அனுசரணை வழங்கியுள்ளது. இச்செயலமர்வின் வளவாளர்களாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தயாரிப்பாளர் இஸ்பஹான் சரீபுதீன், 'நியூஸ்நவ்' பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத், தகவல் திணைக்கள சிரேஷ்ட தகவல் அதிகாரி பவாஸ் அன்பியா, பஹன அகடமி பாடத்திட்ட தயாரிப்பாளர் ஹில்மி முஹம்மத் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இச்செயலமர்வின் நிறைவில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பஹன மீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் முஜீப் சாலிஹ் (கபூரி), பாணந்துறை காதி நீதவான் ஏ.எல். எம். அஸ்வர் உட்பட முக்கியஸ்தர்கள் விஷேட அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர்.

## பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட ஐவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தலாவ சுமுதுகம பகுதியில் மதுபான சுற்றிவளைப்பிற்கு சென்ற தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் ஐவரை தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர். தலாவ பொலிஸார் கடந்த 03ஆம் திகதியன்று சுற்றிவளைப்புக்கு சென்றிருந்த போது அதற்கு ஒரு குழுவினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பின்னர் தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட மற்றுமொரு பொலிஸ் குழுவினர் மீதே தாக்குதல் நடத்தியுள்ளனர்.



# எகிப்திய தூதுவருக்கு கௌரவிப்பு

எகிப்தின் இலங்கைக்கான தூதுவராகப் பதவி வகித்த தூதுவர் மாஜித் முஸ்லிஹின் பதவிக்காலம் நிறைவுற்றதையொட்டி, இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவருக்குப் பிரியாவிடை வைபவமொன்றை கொழும்பில் நடாத்தினார். இந்நிகழ்வில் இலங்கையிலுள்ள அரபு நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## அஷ்ர.ஃப் சிஹாப்தீனின் கவிதை நூல் வெளியீடு



பன்னூலாசிரியரும் ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு (07) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொழும்பு 09 தெமடகொட வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌசியும் விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. அனுஷா கோகுல பெர்னாண்டோவும் கலந்து சிறப்பித்தனர்.

## வலம்புரி சங்குடன் இளைஞன் கைது

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

ட்ரைடென் வகையைச் சேர்ந்த வலம்புரி சங்கு ஒன்றை 15 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்த இளைஞர் ஒருவர் மாரவில பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வு பிரிவு அதிகாரிகள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாரவில பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மீரிகம விமானப்படை முகாமின் புலனாய்வு அதிகாரிகள் வழங்கிய தகவலின் அடிப்படையில் புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் கருவலகஸ்வெவ வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து தந்திரோபாயமான முறையில் முகவர் ஒருவரை பயன்படுத்தி இந்த சுற்றிவளைப்பினை மேற்கொண்டுள்ளனர்.

தனது சகோதரர் வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் பணிபுரிவதாகவும் , அதன்போதே சகோதரர் இதனை வீட்டுக்கு எடுத்து வந்துள்ள நிலையில் விற்பனை செய்ய முயற்சி செய்ததாகவும் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ட்ரைடென் வலம்புரி 16 அங்குலம் நீளமும் , 20 அங்குலம் சுற்றளவு கொண்டது என்றும் இந்த வலம்புரி சில சமயங்களில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக விற்பனையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ரிம்ஸா முஹம்மதின் "இறையச்சம்" சிறுகதை இரண்டாம் இடத்திற்கு தெரிவு



(மினுவாங்கொடை நிருபர்)

சர்வதேச ரீதியாக நடைபெற்ற மறைந்த பன்னூலாசிரியர், எழுத்தாளர், டாக்டர் ஹிமானா சையத்துடைய நினைவுச் சிறுகதைப் போட்டியில், வெலிகம ரிம்ஸா முஹம்மதின் "இறையச்சம்" என்ற சிறுகதை இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை, சைவ மங்கையர் கழகத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சி நிகழ்வின் போது, "எழுத்தாளர் தெணியான்" அரங்கில் நன்னூல் பதிப்பாளர் அப்துல் காதர் கரங்களினால் வெலிகம ரிம்ஸா முஹம்மத், "இறையச்சம்" சிறுகதைக்கான பணப் பரிசிலையும் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, இந்தச் சிறுகதைப் போட்டியில், மலையக எழுத்தாளரான தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் "கண்ணீர்" என்ற சிறுகதையும் மூன்றாம் இடத்தைத் தட்டிக் கொண்டது. நிகழ்வில், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹபரணையில் விபச்சார விடுதி முற்றுகை; 11 பெண்கள் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஹபரணை பொலிஸ் பகுதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த நான்கு விபச்சார விடுதிகளை பொலிஸார் சுற்றி வளைத்த போது நான்கு உரிமையாளர்கள் உட்பட 11 பெண்களை பொலன்னறுவை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நான்கு உரிமையாளர்களும் சீகிரிய, மொனராகலை, மஹியங்கனை மற்றும் கம்பஹா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### டுவீன் நூல் பந்துகள் மற்றும் விடைத் தாள்களை இணைக்கும் துண்டுகள் (Twine threads balls & Twine script tying) ஆகியவற்றை வழங்குவதற்கான பெறுகை – 2024

ஒப்பந்த இல. 04/03/15/2024

1. டுவின் நூல் பந்துகள் மற்றும் விடைத் தாள்களை இணைக்கும் துண்டுகளை வழங்கும் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கப்பட்ட பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய இதனையொத்த காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள, 3ஆம் மாடி, வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: / தொலைநகல்: 011-278 4393 அல்லது 011-2785219) மற்றும் 2024.07.29 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.29 திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 1,400 இலங்கை ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024.10.28 ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் ஒரு இலட்சத்து அறுபத்தொரு ஆயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபாவிற்கானதாகவுமிருத்தல் (161,500.00 இ.ரூ.) வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024.01.19 ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2024.07.30 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''Supply Twine Balls & Twine Script Tying Pieces - ஒப்பந்த இல.: 04/03/15/2024" என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழித்து அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை தெரிவிப்பதற்கு எவ்வித பொறுப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**தலைவர்,**
**பிரதான பெறுகைக் குழு,**
**பரீட்சைகள் திணைக்களம் இலங்கை,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
09.07.2024



## விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்

### சுகாதார அமைச்சு

### கம்பளை தள வைத்தியசாலையில் மருத்துவ வாயு முறையின் நீடித்தல் – 01 ஆம் கட்டம்

ஒப்பந்த இல.: AA/MA SYSTEM/ICU&SCBU/2024

1. கம்பளை தள வைத்தியசாலை 1 ஆம் கட்ட மருத்துவ வாயு நீடித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-10, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, 385 ஆம் இலக்கத்திலுள்ள ''சுவசிரிபாய'', சுகாதார அமைச்சின் சார்பாக, கம்பளை தள வைத்தியசாலை பணிப்பாளர் அழைக்கின்றார். ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு ஒப்பந்த இலக்கமானது: AA/MA/ SYSTEM/ICU&SCBU/2024 என்பதுடன் பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அடிப்படை ஆகுசெலவானது 31.3 மில்லியன் ரூபாவாகும். நிர்மாணக் காலமானது 91 நாட்களாகும்.

   வேலைத் தளமானது கம்பளை தள வைத்தியசாலையின் இடப்பரப்பிலமைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் தேவையான துணை வேலைகளுடனான மருத்துவ வாயு முறையானது வழங்கல் மற்றும் நிறுவுதல் வேலைகளுடன் நடைபெறல் வேண்டும். மேலதிக தகவலுக்காக, விபரக்குறிப்புக்கள் மற்றும் அளவியல் அளவைகள் ஆகியவற்றை பார்வையிடவும். விலைமனுக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக வேலைத் தளத்தை பார்வையிடுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர். வைத்தியசாலையின் அன்றாட செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் வேலைகள் முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   - தரம் - ஈஎம் 02 அல்லது மேற்பட்டது.
   - விஷேடத்துவம் - மருத்துவ வாயு முறைகள்
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதி ஆகக்குறைந்தது 47 மில்லியன் ரூபாவாகவிருத்தல்.
   - கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இயைபுடைய தன்மையிலும் வேலைகளின் பெறுமதியானது 15 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலும் ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றிய அனுபவம். இதனை தனியொரு இணைப்பாக இணைக்கவும்.
   - 31.3 மில்லியன் ரூபாவிற்கு குறையாத எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் தொகையானது 31.3 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும். கடன் வசதியானது கம்பளை தள வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இத்தொகையானது இந்த குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்காகவேயிருத்தல் வேண்டும்.

   நிர்வாகம்சார்/தொழில்நுட்பம்.

   உதவி பொறியியலாளர் (பொறிமுறை) (முழு நேரம்) NDT, NDES, HNDE (பொறிமுறை) பொறியியல் அல்லது ஆகக்குறைந்தது 5 வருட அனுபவத்துடன் இயைபான தகைமை.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 081-2352261 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கம்பளை, தள வைத்தியசாலை பணிப்பாளரிடமிருந்து பெற்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.30 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவை கம்பளை, தள வைத்தியசாலை, சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கம்பளை, தள வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024.08.01 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 2024.08.01 ஆம் திகதியிலிருந்து 2024.11.01 ஆம் திகதியன்று வரையும் அல்லது வழங்குநரின் விண்ணப்பத்தின் பேரில் ஏதாவதொரு நீடிக்கப்பட்ட காலத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் நாலு இலட்சத்து எழுபதினாயிரம் ரூபாவிற்கான (470,000 ரூபா) ''கேள்விப் பிணையொன்றுடன்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையானது 119 நாட்களுக்கு விலைமனுக்களை மூடும் திகதியான 2024.08.01 ஆம் திகதியிலிருந்து 2024.11.27 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரர் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். (பிசிஏ3)

   மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**பணிப்பாளர்,**
**தள வைத்தியசாலை,**
**கம்பளை.**
**தொலைபேசி இல.: 081-2352261**



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


ஜாதிக லொத்தர்யி மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board

ஞாயிறு 2024.07.07 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5527 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.37,869,136.00

ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 2 4 4 5 8 3

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 102 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 4 5 8 3

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3769 — சீட்டிழுப்பு திகதி 2024.07.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,565,724.76

ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 09 38 51 74 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 76357

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1875 — 2024.07.07 — 18506 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.438,088,806.00

ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 06 27 39 79 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2024.07.07 — சீட்டிழுப்பு இலக்கம் 353 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 7 1 1 4 4 1 — L7 எழுத்து F — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,484,074.48

**ராசி சுப பலன்** — திகதி 2024.07.07 — சீட்டிழுப்பு இலக்கம் 836 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,351,164.80

வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 09 15 49 54 — தனயோக இலக்கம் 31525 — நாளுக்கான விதி எண் 14

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — 2024.07.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,053,897.92

ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 02 54 56 67 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 25090


### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ. 138,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.25%2027 "A" தொடர்களின் கீழ் ரூ.58,000 மில்லியனையும் 12.00%2031 "A" தொடர்களின் கீழ் ரூ.80,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 யூலை 11ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.25%2027 'A' | 12.00%2031 'A' |
|---|---|---|
| ISIN* | LKB01027L154 | LKB 01031L016 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 58,000 மில்லியன் | ரூ.80,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.25% ஆண்டொன்றிற்கு | 12.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2017 திசெம்பர் 15 | 2021 திசெம்பர் 01 |
| முதிர்வுத் திகதி | 2027 திசெம்பர் 15 | 2031 திசெம்பர் 01 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 யூன் & 15 திசெம்பர் | 01 யூன் & 01 திசெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 0.9221 | ரூ.100 இற்கு ரூ. 1.4426 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 யூலை 11, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 யூலை 11, வியாழக்கிழமை, மு.ப.11.00 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 யூலை 15 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிட்டட் | 2206297 | என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர் / ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**



### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**கேள்வி இல.: RDA/CE/BT/RMTF/2024/08**

**INVITATION OF BID FOR THE SUPPLY OF ABC (Aggregate Base Course) 900m$^3$ ON BTT road 61+350 to 62+050 km – BATTICALOA**

மட்டக்களப்பு பிரதான பொறியியலாளரின் பிராந்திய மட்டக்களப்பு நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு பொருட்களை வழங்குவதற்காக மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலக பிரதான பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவர் கேள்விக்கோரல்களை அழைக்கின்றார்.

01. 2024 ஆம் ஆண்டில் நிர்மாண பொருட்களின் வழங்கலுக்காக பதிவு பெற்றவர்கள் மற்றும் CIDA பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களும் விலைமனு விண்ணப்பத்தை பெறுவதற்கான உரிமையை கொண்டுள்ளனர்.
02. 2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.15 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவான 2500 ரூபாவை (பெசேவ நீங்கலானது) செலுத்திய பின்னர், மட்டக்களப்பு, யாட் வீதி, பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
03. விலைமனுக்கள் 100,000 ரூபா பெறுமதியானதும் 2024.09.16 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான கேள்விப் பெறுமதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கேள்விப் பிணையுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
04. துளையிடும் அமைவிடமானது BTT வீதியில் அமைந்துள்ளது. (62 ஆவது கி.மீ.)
05. விலைமனுவானது 2024 ஜூலை 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மட்டக்களப்பு, யாட் வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தை வந்தடையும் தன்மையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படலாம். விலைமனுக்கள் அதே நாளில் மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும்.
06. மேலதிக விபரங்களுக்கு, 065-2224455 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மட்டக்களப்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதான பொறியியலாளரின் அலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**யாட் வீதி,**
**மட்டக்களப்பு.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

108

### நிஸான் கார் விற்பனைக்கு

HW - 7238 Nissan Cefiro, 2000 Car, அதியுய ர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ லைபே சி. 0714542958 045547

117



### வேன்கள் விற்பனைக்கு

HZ - 5767 Toyota TownAce, 1999, வேன் அதியுயர் விலை க்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ லைபே சி. 0714542958 045530

119



### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

DAE - 9148 Foton 2015, Lorry அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ லைபே சி. 0714542958 045535

LO - 8400 Mitsubishi 2016 Lorry, அதியுயர் விலை க்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ லைபே சி. 0714542958 045541

NC - LC-5492 - HONDA - GBD-HA6 - MOTOR LORRY - 2004 - WHITE - கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 045961

PU - 5595 Tata Super Ace , 2012, Lorry அதி யு யர் வி லைக்கு வெ லிபெல் பினான்ஸ் பி எல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ லைபே சி. 0714542958 045529

SG - HN-5870 NISSAN - KC-SN2F23 - MOTOR LORRY - 1997 - WHITE கூடிய விலைக் கோரிக்கை க்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுக ஸ்தொட்ட வீ தி, கண்டி. தொ.பே. 0812 081033. 045967

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை 02 ஆட்டுக்கறுத்தார் வீதி, இல: 279/02 இல் வசிக்கும் வர்ணகுல சூரிய கெனட் ஜோசப் ராஜா வினோகா வினோதனி ஆகிய நான் புனித இஸ்லாம் மார்க்கத்தை தழுவி எனது பெயரை இன்று முதல் ஜே.கே. பாத்திமா நிப்லா என பெயர் மாற்றிக்கொண்டேன். எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்

-ஜே.கே. பாத்திமா நிப்லா

## அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவுகளுக்கமைவாக கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றம் அறிவித்தல் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**கம்பனியின் பழைய பெயர் :-** சென்சரி இன்வெஸ்ட்மென்ட்ஸ் என்ட் ∴பினான்ஸ் லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம் :-** PB 1735

**பதிவு அலுவலகம் :-** 25, அல்பிரட் ஹவுஸ் அவனியூ, கொழும்பு 3

**மாற்றப்பட்ட திகதி :-** 2024 ஜுன் 12

**கம்பனியின் புதிய பெயர் :-** சென்சரி இக்விட்டி ட்ரஸ்ட் லிமிட்டட்

**கோர்பரேட் மெனேஜர்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிரைவட்) லிமிட்டட் செயலாளர்கள்**

**09 ஜுலை 2024**

Repeat Your ad For Better Offers

தினகரன் THINAKARAN

கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாகாணம் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு

### திருகோணமலை கிழக்கு மாகாணத்திற்கான உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (செயற்றிட்ட அடையாளம்: P 163305)

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை திருகோணமலை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நல்லாட்சி வள நிலையமாகப் (GGRC) பயன்படுத்துவதற்கு தற்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (PPPC) தலைவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள திருகோணமலை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நல்லாட்சி வள நிலையமாகப் (GGRC) பயன்படுத்துவதற்கு தற்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்துவதற்கான வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் திருகோணமலை உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 0262222427) என்பதுடன் விலைமனு ஆவணங்கள் அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் திருகோணமலை உள்ளூ ராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளருக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-07-10ஆம் திகதி முதல் 2024-07-30ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024-07-31ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், திருகோணமலை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனத்தில் 2024-07-23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

| வேலை விபரங்கள் மற்றும் ஒப்பந்த இலக்கம் | வெட் இன்றி கேள்வியிடக் கூடிய விலைக் கோரல் தொகை மில்லியன் | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) | தேவையான தரம் மற்றும் விசேடத்துவம் | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனுவின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணை முறி தொகை | விலைமனுப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | |
| திருகோணமலை, உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நல்லாட்சி வள நிலையமாகப் (GGRC) பயன்படுத்துவதற்கு தற்போ-துள்ள கட்டிடத்தை மேம்படுத்துதல் | 10.45 மில்லியன் | 60 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 110,000.00 | 2024-11-13 வரை | 2024-10-16 வரை |

**தலைவர் (பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்),**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**கிழக்கு மாகாணம்.**
**2024-07-09.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்தல்

இவ் அதிகார சபையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | | இயந்திர இலக்கம் | அளவு | அள கழிக்கப்பட்ட உபகரணங்களை பரீட்சிக்க வேண்டிய இடம் | மீளளிக்கப்படும் பிணைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | Lot 01 | CPU | 90 | தலைமையகம் | மீளளிக்கப்படும் பிணைத் தொகை ரூ. 5000.00 (காசாக) |
| 02 | | Monitor | 112 | தலைமையகம் | |
| 03 | | Printer | 26 | தலைமையகம் | |
| 04 | | UPS Unit (Power Bank) | 63 | தலைமையகம் | |
| 05 | Lot 02 | Fax Machine | 27 | தலைமையகம் | |
| 06 | | Photocopy Machine | 22 | 09. கொழும்பு பி.பொ.அ. 13. தலைமையகம் | மீளளிக்கப்படும் பிணைத் தொகை ரூ. 5000.00 (காசாக) |
| 07 | | Water Filter | 03 | தலைமையகம் | |
| 08 | | Vacuum Cleaner | 02 | தலைமையகம் | |
| 09 | | Samsung Television | 01 | தலைமையகம் | |
| 10 | | Bitronic Himax (616) | 01 | தலைமையகம் | |
| 11 | Lot 03 | AC Indoor Unit | 20 | 15 - கொழும்பு பி.பொ.அ. 05. தலைமையகம் | மீளளிக்கப்படும் பிணை தொகை ரூ.5000.00 (காசாக) |
| 12 | | AC Out door Unit | 16 | 12 - கொழும்பு பி.பொ.அ. 04. தலைமையகம் | |

இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.07.09 முதல் 2024.07.23 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணம் ரூ.1209.50 (1000.00+2.5%+18% வெட் வரி உட்பட) இற்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் திறத்தல் 2024.07.24 மு.ப. 10.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

இக் கழிக்கப்பட்ட உபகரணங்களை மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவில் தலைமையகத்தில் அல்லது நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையில் வார நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ.பே. இல .: 011 - 2321980**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
### அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் மற்றும் பிரிவு | வாகனத்தின் வகை மற்றும் எண்ணிக்கை |
|---|---|---|
| பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2024/ MNT/08 தெற்கு அதிவேக வீதி | தொழிலாளர் போக்குவரத்து டிரக் - 06<br>Sign Board போக்குவரத்து டிரக் - 04<br>டிப்பர் டிரக் - 04 |

மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-09ஆம் திகதி முதல் 2024-07-29ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,**
**மே/பா பிரதிப் பணிப்பாளர் நாயகம் (EOM&M பிரிவு),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

# தேசிய கல்வி நிறுவகம்

## உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி 2024/2025

தேசிய கல்வி நிறுவகத்தின் சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு வழங்கும் கற்கைநெறிக்கு இரண்டாவது உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் குழுவினருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கற்கைநெறிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்**

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இருப்பதோடு க.பொ.த (உ.த) சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இருப்பதோடு 05 வருடம் சேவை அனுபவத்துடன் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

அல்லது

- தனியார் பாடசாலை ஒன்றில் அல்லது நிறுவனம் ஒன்றில் சேவை அனுபவத்துடன் க.பொ.த. (உ.த) சித்தியடைந்திருத்தல் மற்றும் சர்வதேச, தேசிய மாகாண மட்டப் போட்டியில் வெற்றி பெற்றிருத்தல்.

**கற்கைநெறித் தகவல்**

காலம் - 02 வருடங்கள்
மொழி - சிங்களம் / தமிழ்
தேர்வு முறை - நேர்காணல்
நடாத்தப்படும் முறை - வார இறுதி நாட்கள் (மு.ப 8.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரை )
கற்பித்தல் முறை - விரிவுரைகள், செயன்முறை
பாடநெறிக்கட்டணம் - ரூபா 90,000.00 (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்)
மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.
விண்ணப்பக் கட்டணம் - ரூபா 2000.00
பதிவுக் கட்டணம் - ரூபா 1000.00

- பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கைத் தகைமைச் சட்டகம் (SLQF IV) கல்வி மட்டத்தை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

- தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைத் திணைக்களத்தின் https://www.exams.nie.lk/intakes/new இணையத்தளத்திற்குச் சென்று அங்கு குறிப்பிடப்பட்ட படிமுறைக்கமைய விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துங்கள். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் தகவல்கள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தைப் பதிவிறக்கம் (download) செய்து அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்திய பின்னர் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் வைப்புச்சீட்டுப் பத்திரத்தைப் பயன்படுத்தி மற்றும் உங்கள் விபரங்களை குறித்து ரூபா 2000.00 வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து உங்களது முகவரியுடன் ரூபா. 50/= முத்திரை ஒட்டப்பட்ட 9”x4” அளவுள்ள கடித உறையில் **பிரிவுத் தலைவர், சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம** எனும் முகவரிக்கு 2024 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் **உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி - 2024/2025** எனக் குறிப்பிடவேண்டும்.
- தொடர்புகளுக்கு 0117601777 (திரு. மாதவ) அல்லது 0117601714 (திரு. அரவிந்த) வார நாட்களில் தினமும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.
- உங்களது விண்ணப்பப்படிவம் ஏதேனுமொரு காரணத்தினால் நிராகரிக்கப்படின் விண்ணப்பப்படிவக் கட்டணம் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

**கவனிக்க வேண்டியவை -** நீங்கள் விண்ணப்பிக்கும் மத்திய நிலையத்தில் போதுமான விண்ணப்பம் கிடைக்கப் பெறவில்லை எனின் அந்த மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள மத்திய நிலையத்துடன் இணைக்கப்படுவீர்கள்.

**கற்கைநெறி நடைபெறும் நிலையங்கள்**

1. தேசிய கல்வி நிறுவகம் (சிங்கள மொழி மூலம்)
2. ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
3. நில்வலா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
4. ருகுண தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்களமொழி மூலம்)
5. வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
6. ருவன்புர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
7. புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
8. மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
9. மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)
10. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)

**கலாநிதி. திரு பிரசாத் சேயதுங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**களுத்துறை பிரதான பொறியியலாளரின் பிராந்தியத்திற்கு பொருட்களை வழங்கல்**

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலையின் விளக்கம் | பிராந்தியம் மற்றும் பிரிவு |
|---|---|---|---|
| 01. | RDA/LD/CE/RMRF/ MAT/01 | Supplying and fixing of flexible bollards | நிபொ பிரிவு, ஹொரண |
| 02. | RDA/LD/CE/RMRF/ MAT/02 | சிப்ஸ்களின் வழங்கல் (9.5 மிமீ) | நிபொ பிரிவு, ஹொரண |
| 03. | RDA/LD/CE/RMRF/ MAT/03 | எமல்சின் இன் வழங்கல் (சிஎஸ்எஸ்-1) | நிபொ பிரிவு, அகலவத்த |
| 04. | RDA/LD/CE/RMRF/ MAT/04 | Supplying of reflecting sheets for sign boards | பிரதான பொறியியலாளரின் பிராந்தியம், களுத்துறை |
| 05. | RDA/LD/CE/RMRF/ MAT/05 | பெயிண்ட் பொருட்களை வழங்கல் | பிரதான பொறியியலாளரின் பிராந்தியம், களுத்துறை |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் களுத்துறை பிரதான பொறியியலாளர் பிராந்தியத்திற்கு வீதி பராமரிப்பிற்காக பொருட்களை வழங்குவதற்காக கேள்விகோரல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் களுத்துறை பிரதான பொறியியலாளரின் அலுவலகம், வீஅஅ/ நெடுஞ்சாலை அமைச்சின் இணைய பக்கங்களான **www.rda.gov.lk & mohsl.gov.lk** ஆகியவற்றை 2024 ஜூலை 9 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, களுத்துறை.**
**தொலைபேசி: 0342222500, 0342222900**

---

## பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி

pmf finance

### பிரசித்த ஏலவிற்பனை

**மீட்கப்படாத அடவு வைக்கப்பட்ட தங்க பொருட்கள்**

தங்க கடன் திட்டத்தில் நீர்கொழும்பு கிளையில் அடவு வைக்கப்பட்டு 84.7 கி நிறையான பொருளின் காலம் முடிவடைந்தும் மீட்கப்படாததினால் 2024 ஜூலை 24 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் கொழும்பு-03 இலுள்ள பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி இன் கிளையில் ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் மற்றும் தங்க கடன் நிலையங்கள் | ஏலத்திற்கான இடம் மற்றும் திகதி |
|---|---|
| நீர்கொழும்பு | இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு - 03 24.07.2024 |

- எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி விற்பனையை இரத்துச் செய்தல், ஒன்றிணைத்தல் அல்லது பிற்போடுதல் ஆகியவற்றிற்கான உரிமையை கம்பனியானது கொண்டுள்ளது.
- விற்பனைக்கு முன்னராக அனைத்து பங்குபெறுனர்களும் அவர்களின் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விற்பனையின் போது அனுமதிக் கட்டணமொன்று அறவிடப்படும்.

**முகாமையாளர் - தங்க கடன்கள்**
**பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி**
**இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03.**
**தொலைபேசி: 011-7 733 600 - அலைபேசி: 0719 342 413**

---

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 30.04.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 25-07-2024 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கனேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, குருநாகல், மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, தம்புத்தேகம, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ | இந்த ஏலம் ராஜகிரியவில் உள்ள அலையன்ஸ் ஃபைனான்ஸ் பிஎல்சி எண். 722 கோட்டே வீதியின் வளாகத்திலும் அந்தந்த கிளை வளாகத்திலும் தனித்தனியாக நடைபெறும். |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

---

## பெறுகை அறிவித்தல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**Q 349/24**

### 2024/2025ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலை கட்டிடத் தொகுதியில் முதலாம் வகுப்பு உணவு விற்பனை நிலையத்தை (Class-1 Catering Outlet) நடாத்திச் செல்லல்

01. தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள், வைத்தியசாலைக்கு வரும் விருந்தினர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் நுகர்வுக்காக நுகேகொட, தலபத்பிட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தொகுதியில் முதலாம் வகுப்பு உணவு விற்பனை நிலையத்தை (Class-1 Catering Outlet) நடாத்திக் கொண்டு செல்வதற்கு இயலுமை உள்ள இலங்கைப் பிரஜைகள், வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்களிடமிருந்து) ஒரு வருட காலத்திற்கு தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரலின் கீழ் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விற்பனை நிலையத்தின் பெயர் | நிறுவனம் பெற்றுள்ள தரச் சான்றிதழ் (HACPP/ISO/ GMP) | குறைந்தபட்ச மாதாந்த வாடகை ரூபா | விலைக்கோரல் பிணை முறி ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| | முதலாம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை Class-1 Catering Outlet | | 172,000.00 | 20,000.00 | 3,500.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை வழங்கல் பிரிவிற்குச் சமர்ப்பித்து 2024-07-24ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கேள்விப் படிவத்தை வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. உரிய முறையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தபாலுறையொன்றினுள் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், "2024/2025ஆம் வருடங்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் முதலாம் வகுப்பு உணவு விற்பனை நிலையத்தை (Class-1 Catering Outlet) நடாத்திச் செல்வதற்கான ஒப்பந்தம்" எனக் குறிப்பிட்டு 2024.07.25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

05. இயைபுடைய விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

06. உத்தேச விண்ணப்பதாரர்கள் கேள்விப் படிவங்களை கட்டணம் செலுத்தாமல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624
மின்னஞ்சல் முகவரி: suppliceofficesjgh@gmail.com



**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொட.**

---

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும் :-

| இல | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. ஷோபினி கௌஷாலா குணசேகர இலக்கம் 92/2, டெம்ப்ளர்ஸ் வீதி, கல்கிசை | ரஷ்ய கூட்டமைப்பிற்கான இலங்கையின் அதிவிசேட மற்றும் முழு அதிகாரம் பெற்ற தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர். |
| 2 | திரு. சம்பத் பிரசன்ன வல்பிட கமகே இலக்கம் 195, தொட்டகொட, அக்மீமன, காலி | நியூசிலாந்தில் இலங்கையின் உயர் ஸ்தானிகராக பெயர் குறிப்பிடப்பட்டவர். |
| 3 | திருமதி. சோலங்க ஆராச்சிகே பிரதீபா பிரியங்கனி சேரம் இலக்கம் 138/1, பட்டுவத்த, ராகம | இந்தோனேசியா குடியரசின் இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 4 | திரு. அப்புஹாமிகே சிசிர குமார செனவிரத்ன இலக்கம் 205/10,வீர மாவத்தை, தெ பன்னிபிட்டிய | எகிப்து அரபுக் குடியரசின் இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 5 | திரு. நூர்தீன் முகமது சஹீட் இலக்கம் 52/5, றப்பர் வத்தை, பெபிலியான வீதி, தெஹிவளை | ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 6 | திருமதி. யசோஜா குசலினி குணசேகர இலக்கம் 34-1/1, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 | பஹ்ரைன் இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 7 | திருமதி.ரோஷான் சிதாரா கான் ஆசாத் இலக்கம் 466/5, $^{1}/_{4}$ , சீ அவென்யூ, கொழும்பு 03 | கட்டார் அரசிற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 8 | திரு.எம். பி.என்.எம்.விக்கிரமசிங்க இலக்கம் 49/2, கஹந்தொட்ட வீதி, மாலபே | கடற்றொழில் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் ஆள் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **"செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே"** என்ற விலாசத்திற்கு 2024 யூலை மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது. (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024 யூலை 09 ஆம் திகதி**

---


Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams


---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைக்கோரலுக்கான அழைப்பு

**களுத்துறை, பிரதான பொறியியலாளர் பிராந்தியத்திற்கு அஸ்போல்ட் மற்றும் கொங்கிறீட் (தரம் 30), கொங்கிறீட் (தரம் 25) மற்றும் கொங்கிறீட் நடைபாதை புளொக்குகள் (தரம் 25) வழங்குதல்**

| ஒப்பந்த இலக்கம் | வீதி | வேலை விபரங்கள் |
|---|---|---|
| RDA/SP/1500KM/ WP/DL/227 | சோமரத்ன மாவத்தை மற்றும் பளீல் ஹாஜியார் மாவத்தையின் புனரமைப்பு வேலைகள் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/228 | மாலேவன கணேஷ்வரா நாஹிமி மாவத்தையின் புனரமைப்பு வேலைகள் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/229 | வீரகல மாதுரு இல்லத்திற்கு செல்லும் வீதியை புனரமைத்தல் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/230 | பிரதான வீதியில் LECO அருகிலிருந்து குடாவஸ்கடுவ வடக்கு சமகிபுர ஆறு பாலம் வரையான வீதியின் புனரமைப்பு வேலைகள் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/243 | வீதாகம அடலுகம ஊடாக கல்துடே வரையான வீதியை புனரமைத்தல் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/231 | ஹொரண வேவல கங்கொட வீதியை புனரமைத்தல் | ஹொரண நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/232 | பராகொட வீதியிலிருந்து திப்போட்டாவ வீதி வரை புனரமைத்தல் | ஹொரண நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/233 | வெலிபென்ன மேற்கு ரன்முத்து உயன வீதியை புனரமைத்தல் | அகலவத்த நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/234 | யட்டபான 6B மாவத்தையை புனரமைத்தல் | அகலவத்த நி.பொ. பிரிவிற்கு Type 01 அஸ்போல்ட் வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/235 | மாவல ஜயசங்க மாவத்தையை புனரமைத்தல் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு கொங்கிறீட் (தரம் 30) வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/244 | வீதாகம அடலுகம வழியாக கல்துடே வரையான வீதியை புனரமைத்தல் | களுத்துறை நி.பொ. பிரிவிற்கு கொங்கிறீட் (தரம் 30) வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/236 | குடுநேரிய சமகி மாவத்தையை புனரமைத்தல் | அகலவத்தை நி.பொ. பிரிவிற்கு கொங்கிறீட் நடைபாதை புளொக்குகள் (தரம் 25) வழங்குதல் |
| RDA/SP/1500KM/ WP/DL/240 | குடுநேரிய சமகி மாவத்தையை புனரமைத்தல் | அகலவத்தை நி.பொ. பிரிவிற்கு கொங்கிறீட் (தரம் 25) வழங்குதல் |

களுத்துறை, பிரதான பொறியியலாளர் பிராந்தியத்திற்கு அஸ்போல்ட் மற்றும் கொங்கிறீட் (தரம் 30), கொங்கிறீட் (தரம் 25) மற்றும் கொங்கிறீட் நடைபாதை புளொக்குகள் (தரம் 25) வழங்குவதற்காக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஜூலை 08 முதல் 25ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு/ களுத்துறை பிராந்திய பிரதான பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk அல்லது mohsl.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, களுத்துறை.**
**தொலைபேசி: 0342222500, 0342222900**

---

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை இராணுவம்

### 2024ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள்/ இறக்குமதியாளர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

2024ஆம் வருடத்தினுள் இலங்கை இராணுவத்தின் தேவைப்பாடுகளுக்காக பின்வரும் பொருட்களை தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் மூலம் வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | அளவு | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| | **வாகனம்** | | | |
| 1 | Tractor 4x4 (Without Trailer) | 2 எண்ணிக்கைகள் | 2024-07-09 முதல் 2024-07-30 வரை | 2024-07-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| | **அச்சுப்பொறி** | | | |
| 2 | ID Card Printer | 1 எண்ணிக்கை | 2024-07-09 முதல் 2024-07-30 வரை | 2024-07-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| | **வலதுகுறைந்தவர்களுக்கான விசேட உபகரணங்கள்** | | | |
| 3 | Endolite M/Flex Foot For P & O Workshop | 19 வரிசை உருப்படி | 2024-07-09 முதல் 2024-07-30 வரை | 2024-07-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| 4 | Materials For P & O Workshop | 44 வரிசை உருப்படி | | |
| 5 | Stockinette For P & O Workshop | 10 வரிசை உருப்படி | | |

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் இணையதளத்தின் ஊடாக அல்லது 0112-987534, 0112-987537 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
   அ. www.promise.lk
   ஆ. www.army.lk

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

---


Sunday Observer adz தினகரன்
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

| Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words) | | |
|---|---|---|
| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361



# பாரிஸ் ஒலிம்பிக்கில் இலங்கை குழாத்தின் தலைமை பொறுப்பு நதீஷா லேகம்கேவிடம்

## போட்டியில் பங்கேற்ற பின் நாடு திரும்ப கண்டிப்பான நிபந்தனை

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் ஆறு வீர, வீராங்கனைகள் பங்கேற்பதை உறுதி செய்திருக்கும் தேசிய ஒலிம்பிக் குழு, பங்கேற்பவர்களில் நான்கு பேர் நேரடித் தகுதி பெற்றுள்ளதாகவும் தெரிவித்தது.

'கடந்த 2021 டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் ஒன்பது வீர, வீராங்கனைகள் பங்கேற்றபோதும் அதில் எட்டுப் பேர் வைல்ட் கார்ட் முறையிலேயே தகுதி பெற்றனர். எனினும் இம்முறை பங்கேற்கும் நால்வர் நேரடித் தகுதி பெற்றுள்ளமை பெருமை அளிக்கும் விடயமாகும்' என்று தேசிய ஒலிம்பிக் குழு தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் நேற்று (08) கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பூப்பந்தாட்டப் போட்டியில் விரேன் நெத்தசிங்க இலங்கை சார்பில் பங்கேற்கவிருப்பதோடு நீச்சல் போட்டிகளில் கங்கா செனவிரத்ன மற்றும் கைல் அபேசிங்க பங்கேற்கவுள்ளனர்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் அருண தர்ஷனவும், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தருஷி கருணாரத்னவும், பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் நதீஷா லேகம்கேவும் ஒலிம்பிக் செல்லவுள்ளனர்.

எனினும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தெற்காசியாவின் அதிவேக வீரர் யுபுன் அபேகோன் ஒலிம்பிக் தகுதியை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் விளக்கம் அளிக்கும் ஊடக சந்திப்பே தேசிய ஒலிம்பிக் குழு கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பேசிய தேசிய ஒலிம்பிக் குழு செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வா கூறியதாவது,

'உலகெங்கும் இருந்து வெறும் 10500 அளவான வீர, வீராங்கனைகளே ஒலிம்பிக் தகுதி பெறும் நிலையில் அந்த இலக்கை எட்டுவது பெரும் சவாலானதாகும். அந்த வகையில் இலங்கையில் இருந்து ஆறு பேர் தகுதி பெற்றிருப்பது முக்கிய அடைவாகும். அடுத்த ஒலிம்பிக்கில் இலங்கை சார்பில் 20 வீர, வீராங்கனைகளை அனுப்பும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது' என்றார்.




இம்முறை ஒலிம்பிக் போட்டியில் 6 வீர, வீராங்கனைகள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்கள் அதே போன்று அணியின் அதிகாரிகள் என்று மொத்தம் 15 பேர் பாரிஸ் செல்லவுள்ளனர்.

இதில் பூப்பந்து மற்றும் நீச்சல் வீர, வீராங்கனைகள் முன்கூட்டியே பாரிஸ் சென்று போட்டிக்கு முன்னர் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதோடு தடகள வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் ஆரம்ப விழாவுக்கே பாரிஸ் பயணிக்கவுள்ளனர். தடகள வீரர்கள் ஒலிம்பிக்கில் தகுதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் அவர்களுக்கு பாரிஸில் முன்கூட்டிய பயிற்சிகளை ஏற்பாடு செய்வதற்கு முடியாமல் போனது என்று பாரிஸ் செல்லும் இலங்கை குழாத்தின் தலைமை அதிகாரி சந்தன லியனகே தெரிவித்துள்ளார்.

இதில் கடந்த காலங்களில் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கச் சென்ற வீரர்கள் போட்டியின் நடுவில் காணாமல் போன சம்பவங்கள் காரணமாக இம்முறை பாரிஸ் செல்லும் வீர. வீராங்கனைகள் தமது போட்டி முடிந்து இரண்டு நாட்களில் கண்டிப்பாக இலங்கை திரும்ப வேண்டும் என்று கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் லியனகே சுட்டிக்காட்டினார்.

இம்முறை பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வு ஜூலை 26 ஆம் திகதி பாரிஸ் நேரப்படி 19.30 இற்கு நடைபெறவுள்ளது. இதில் இலங்கை சார்பில் நதீஷா லேகம்கே மற்றும் விரென் நெத்தசிங்க தேசிய கொடியை ஏந்திச் செல்லவுள்ளனர். இதில் ஹாங்சுவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற லேகம்கே பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இலங்கை குழாத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ஒலிம்பிக் போட்டிக்கான உத்தியோகபூர் ஆடை அனுசரணையாளராக மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் செயற்படுவதோடு ஆரம்ப நிகழ்வுக்கான ஆடை அனுசரணையை லொவி சிலோன் நிறுவனம் வழங்குகிறது. இலங்கை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கான முழு செலவையும் தேசிய ஒலிம்பிக் குழு ஏற்றிருப்பதாக மெக்வெல் டி சில்வா தெரிவித்தார்.

## சர்வதேச செய்திகள்

# காசா நகரில் இஸ்ரேல் பாரிய தாக்குதல் பல முனைகளால் டாங்கிகள் முன்னேற்றம்

## பலரும் பலி: பெரும் எண்ணிக்கையானோர் வெளியேற்றம்

காசா நகர் மீது இஸ்ரேலிய படை நேற்று (08) சரமாரித் தாக்குதல்களை நடத்தியதோடு நகரின் மையப்பகுதியை நோக்கி பல முனைகளில் இருந்து டாங்கிகள் முன்னேறி வந்ததாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இங்கு நடத்தப்படும் கடுமையான தாக்குதலாக இது உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களில் பல டஜன் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அச்சத்தை வெளியிட்டிருக்கும் காசா சிவில் அவசர சேவை பிரிவு, நகரின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுவதால் மீட்புக் குழுவினரால் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.



வடக்கு காசாவில் அமைந்திருக்கும் காசா நகரின் சுற்றுப்புற பகுதிகளில் இரவு முழுவதும் குண்டுகள் வீசப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். பல அடுக்குமாடிக் கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய டாங்கி ஒன்று மக்களை மத்தியதரைக் கடலுக்கு அருகில் மேற்கு வீதியை நோக்கி தள்ளியதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'எதிரிகள் எமக்குப் பின்னால் இருப்பதோடு கடல் எமக்கு முன்னால் இருக்கும் நிலையில் நாம் எங்கே போவது?' என்று காசா நகர குடியிருப்பாளர் ஒருவரான அப்தல் கனி என்பவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

'டாங்கிகளில் இருந்து செல் குண்டுகளும் விமானங்களில் இருந்து ஏவுகணைகளும் எரிமலை ஒன்று போல வீதிகள் மற்றும் வீடுகளில் விழுந்து வருகின்றன. மக்கள் அனைத்துத் திசைகளிலும் ஓடுகிறார்கள். எங்கே செல்வது என்று யாருக்கும் தெரியவில்லை' என்று சாட் செயலி வழியாக அப்தல் கனி குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போராளிகளின் உட்கட்டமைப்புகளுக்கு எதிராக படை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

காசா போர் பத்தாவது மாதத்தை எட்டி இருக்கும் நிலையில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் இடையே போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஒன்றை மத்தியஸ்தர்களான எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதல்களில் 1,200 பேர் கொல்லப்பட்டு சுமார் 250 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டதை அடுத்து வெடித்த போரில் இஸ்ரேலின் தாக்குதல்களில் தினசரி கணிசமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் இவ்வாறான தாக்குதல்களில் குறைந்தது 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,193 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலிய டாங்கிகள் குறைந்தது மூன்று திசைகளால் முன்னேறி வருவதாக காசா நகர குடியிருப்பாளர்கள் நேற்றுத் தெரிவித்தனர். இஸ்ரேலிய படை வான் மற்றும் தரை வழியாக கடுமையாக தாக்குதல் நடத்தும் நிலையில் டாங்கிகள் காசா நகரின் மையப்பகுதியை அடைந்திருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பன இடங்களை நோக்கி சென்றபோதும் அவ்வாறான பாதுகாப்பான இடத்தை கண்டறிய முடியாத நிலையில் பலரும் வீதி ஓரங்களில் உறங்குவதாக கூறப்படுகிறது.

காசா நகரில் உள்ள அல் அஹ்லி அரபு பப்டிஸ்ட் மருத்துவமனையில் ஏற்கனவே மக்கள் நிரம்பி இருக்கும் நிலையில் அவர்கள் அங்கிருந்து இந்தோனேசிய மருத்துவமனைக்கு அப்புறப்படுத்தப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிழக்கு புறநகர் பகுதியான சுஜையாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒன்றில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படை நடவடிக்கை குறித்து முன்கூட்டியே பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கு வீதிகள் திறக்கப்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இங்கு ஹமாஸ் மற்றும் அதன் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் இஸ்ரேலிய படையுடன் கடுமையாக சண்டையிட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்மேற்கு காசா நகரில் இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக மோட்டார் குண்டு தாக்குதல்களை நடத்தியதாக பலஸ்தீனிய பத்தா அல் அக்ஸா தியாகப் படை தெரிவித்துள்ளது.

### போர் நிறுத்த எதிர்பார்ப்பு

அமெரிக்காவின் போர் நிறுத்த முன்மொழிவின் முக்கிய அம்சம் ஒன்றுக்கு ஹமாஸ் அமைப்பு இணங்கிய நிலையில் போர் நிறுத்தம் ஒன்று பற்றி காசா குடியிருப்பாளர்கள் இடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இது இஸ்ரேல் தனது தூதுக் குழுவை பேச்சுவார்த்தை மேசைக்கு அனுப்புவதற்கு வழிவகுத்துள்ளது.

இதில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் உறுதி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையையே ஹமாஸ் கைவிட்டுள்ளது. இதற்கு பதில் ஆறு வார முதல் கட்ட பேச்சுவார்த்தை ஊடாக அதனை அடைய ஹமாஸ் இணங்கி இருப்பதாக அந்த அமைப்பை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த உடன்படிக்கை போரின் இலக்குகள் நிறைவேறும் வரை இஸ்ரேல் போர் இடுவதை தடுக்கக் கூடாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார். இந்தப் போருக்கான இலக்குகளாக ஹமாஸ் அமைப்பின் படைப்பலம் மற்றும் அரச திறனை ஒழிப்பது மற்றும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை மீட்பது ஆகிய விடயங்களை இஸ்ரேல் முன்னதாக குறிப்பிட்டிருந்தது.

இஸ்ரேலிய தாக்குதல்களை இப்போது நிறுத்துவது பாரிய தவறு ஒன்றாக இருக்கும் என்று இஸ்ரேல் நிதி அமைச்சர் பெசாலல் ஸ்மொட்ரிச் நேற்று குறிப்பிட்டிருந்தார்.

ஸ்மொட்ரிச் யூதக் குடியேற்ற ஆதரவு கட்சியின் தலைவர் என்பதோடு அந்தக் கட்சி இஸ்ரேலிய கூட்டணி அரசின் அங்கமாக உள்ளது.

எக்ஸ் சமூகதளத்தில் பதிவிட்டிருக்கும் அவர், 'ஹமாஸ் வீழ்ச்சி கண்டு போர் நிறுத்தத்திற்கு மன்றாடி வருகிறது. எதிரியை நசுக்கி தகர்க்கும் வரை கழுத்தை நெறிக்கும் நேரம் இது. அதனை முடிப்பதற்கு முன்னர் இப்போது நிறுத்தினால் அவர்கள் மீண்டு எமக்கு எதிராக மீண்டும் போராடுவார்கள். இது அர்த்தமற்ற முட்டாள்தனமானது' என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரான்ஸ் தேர்தல்

# தீவிர வலதுசாரிகளை பின்தள்ளி இடதுசாரிகள் எதிர்பாராத வெற்றி



பிரான்ஸ் பொதுத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவில் தீவிர வலதுசாரிகள் ஆட்சியை பிடிப்பதை தடுக்கும் வகையில் இடதுசாரிகள் எதிர்பாராத முன்னேற்றத்தை கண்டிருப்பதோடு எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாத சூழலில் தொங்கு பாராளுமன்றம் ஒன்று உருவாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் இடதுசாரிகளான புதிய மக்கள் முன்னணி பாராளுமன்றத்தில் அதிக இடங்களை வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. எனினும் ஒரு கட்சி கூட தனிப் பெரும்பான்மை பெறாத நிலையில் அந்தக் கட்சி சிறுபான்மை அரசு ஒன்றை அமைப்பது அல்லது பரந்த கூட்டணி அரசு ஒன்றை அமைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் இடதுசாரிகள் 182 ஆசனங்களை வென்றிருப்பதோடு ஜனாதிபதி எமானுவேல் மக்ரோனின் மையவாத கூட்டணி 168 இடங்களையும் முதல் கட்ட தேர்தலில் அதிக இடங்களை வென்ற தீவிர வலதுசாரிகளான தேசிய பேரணி மற்றும் அதன் கூட்டணி 143 இடங்களை வென்றிருப்பதாக இறுதிக் கட்ட தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன.

577 இடங்களைக் கொண்ட பிரான்ஸ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்கு 289 ஆசனங்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் அரசியல் தற்போது நிலையற்ற சூழ்நிலைக்கு சென்றுள்ளது. தேர்தல் முடிவுகள் வெளியான பின் தெருக்களில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. பாரிஸ் மற்றும் நான்டெஸ் மற்றும் லியோன் உள்ளிட்ட நகரங்களில் ஒரு சில வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன.

# உக்ரைன் நகரங்களில் சரமாரி தாக்குதல்: 24 பேர் உயிரிழப்பு

உக்ரைனிய நகரங்கள் மீது ரஷ்யா நேற்று (08) நடத்திய சரமாரி ஏவுகணை தாக்குதல்களில் குறைந்தது 24 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு தலைநகர் கீவில் சிறுவர் மருத்துவமனை ஒன்று தாக்கப்பட்டதில் பலரும் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.



பகல் நேரத்தில் அரிதாக இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கீவில் குறைந்தது 10 பேர் பலியாகியுள்ளனர். இதில் ஒல்மன்டிட் சிறுவர் மருத்துவமனை சேதமடைந்திருக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அதேபோன்று மத்திய உக்ரைன் நகரான கிர்ரியிரியில் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு கிழக்கு நகரான கொக்ரேஸ்கில் மூவரும் டிப்ரோவில் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு போலந்து சென்றிருக்கும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கு ரஷ்யா விளைவுகளை சந்திக்கும் என்று எச்சரித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் ரஷ்யா தரப்பில் இருந்து உடன் எந்த பதிவுலும் அளிக்கப்படவில்லை.

# உய்குர்கள் இழப்பீட்டுக்கு கோரிக்கை

கிழக்கு துர்கிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ள உய்குர் சமூகத்தினருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று ஜெர்மனியைத் தலைமையகமாகக் கொண்டுள்ள உலக உய்குர் கொங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த கொங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளதோடு, கிழக்கு துர்கிஸ்தான், உரும்கியில் 2009 இல் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பலர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து உடனடியாக சுதந்திர விசாரணை நடத்தப்பட வேண்டும். அதன் ஊடாக உரும்கியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.